352.

# தமிழ்நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

மார்ச் 20, 1999 தொகுதி 65 எண் 3


99
N99.653
221090

வெளியீடு 11-1-2000 Issued 11-1-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**சனிக்கிழமை, மார்ச் 20, 1999 - தொகுதி 65 - எண் 3**

**Saturday, 20th March, 1999—Volume 65 - No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

*விலை ரூ. 3.00*] [Price Rs. 3.00

# 20-3-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 67-68 |
| **2. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 69-110 |
| **3. அரசினர் தீர்மானம்—** | |
| உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் மீது, வரவு-செலவுத் திட்ட அறிக்கையின் நகலைக் கிழித்து, கறுப்புத் துணி காண்பித்து கோஷமிட்டதற்காக நடவடிக்கை | 111-123 |
| **4. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருத்தல் | 123-145 |
| திரு. ச. அழகிரி .. .. .. | 123-128 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 123,129,130, 137-145 |
| *திரு. கே. சுப்பராயன் .. .. .. | 128-130 |
| திரு. ஜி.கே. மணி .. .. .. | 130-131 |
| திரு. லா. சந்தானம் .. .. .. | 131-132 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு.. .. .. | 132-134,143, 144 |
| திரு. டி மணி .. .. .. | 134-135 |


53–15–1

V211;21 ... 0122,65.3



பக்கங்கள்

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருத்தல்—தொடர்ச்சி

| | |
|---|---|
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி .. | 135 |
| திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் | 135-136 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் .. | 144 |
| திரு. மு. அப்பாவு .. .. .. | 144-145 |

5. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்— 145-197

| | |
|---|---|
| திரு. சி. ஞானசேகரன் .. .. | 145-163 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 160,162,164 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் .. | 147 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி .. | 147 |
| *மாண்புமிகு திரு. கா.நா. நேரு .. | 150,151,152,153, 196,197 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 152,153,194 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 155,181 |
| *மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி | 156 |
| திரு. இரா. தாமரைக்கனி .. .. | 158,159,161,162 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் .. .. | 159 |
| திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் .. .. | 165 |
| திரு. அன்பில் பொய்யாமொழி .. | 163,165-171 |

பக்கங்கள்

5. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்—தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. ச. அழகிரி .. .. .. | 171, 172 |
| திரு. கே. சுப்பராயன் .. .. .. | 172-185 |
| திரு. ஆர். சொக்கர் .. .. .. | 179 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் .. | 179 |
| திரு. டி. மணி.. .. .. | 181 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி .. .. | 185 |
| *திருமதி கோமதி சீனிவாசன் .. .. | 185-190 |
| டாக்டர் எம். மோசஸ் .. .. | 190-196 |
| திரு. அ.லெ. சுப்பிரமணியன் .. .. | 192 |

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 197

22090

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 6, வெகுதான்ய-திருவள்ளுவர் ஆண்டு 2030**
**1999 மார்ச் 20, சனிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவன் அயராது பாடுபட்டால் அவனைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.

## 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. சி. நடராஜன் அவர்கள் 12-6-1998 அன்றும், திருவாளர்கள் சிங்கை கோவிந்தராசு மற்றும் ந. குலசேகர பாண்டியன் ஆகியோர் 27-2-1999 அன்றும், திரு. வி.ஆர். பெரியண்ணன் அவர்கள் 28-2-1999 அன்றும், திரு. பொ. சிகாமணி அவர்கள் 3-3-1999 அன்றும் மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. நடராஜன் அவர்கள் கள்ளக்குறிச்சி பொது தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை சீரிய முறையிலே பணியாற்றியுள்ளார்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு அவர்கள் சிங்காநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்கள்.

[1999 மார்ச் 20

திரு. நா. குலசேகர பாண்டியன் அவர்கள் வாணியம்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

திரு. வி.ஆர். பெரியண்ணன் அவர்கள் சேந்தமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள். மேலும், 1974 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. பொ. சிகாமணி அவர்கள் திருவொற்றியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை நல்ல முறையிலே பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களின் மறைவினால் அவர்களை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைவுற்ற இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று சிறிது நேரம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்.)*



1999 மார்ச் 20]

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 101, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**101—**

### கல்லூரிகளில் புத்தக வங்கி தொடங்குதல்

***19069—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் புத்தக வங்கி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அனைத்துக் கல்லூரிகளிலும் புத்தக வங்கி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அறியும்.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டு பகுதி - II திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் படிக்கின்ற S.C., S.T. மாணவர்களுக்கு ஒரு செமஸ்டருக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வழங்குவதும் தேர்வு முடிந்த பிறகு அந்தப் புத்தங்களைத் திரும்பப பெறுவதும்தான் தலையாய கடமையாக இந்தப் புத்தக வங்கிக்கு இருக்கின்றது. ஆனால், பல கல்லூரிகளிலே இந்தப் புத்தக வங்கி இல்லையென்று இப்போது நான் அறிகின்றேன். குறிப்பாக, தொழில் கல்வி படிக்கின்ற மாணவர்களுடைய பாடப் புத்தகங்களுடைய விலையானது மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் அதிக விலை கொடுத்து இந்தப் புத்தகங்களை வாங்க மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, மாணவர்களுடைய நலனிலே அக்கறை

கொண்டுள்ள நமது அரசு, அவர்கள் பெற்றோர்களுடைய துயரைத் துடைப்பதற்காக, ஒவ்வொரு கல்லூரியிலும் இந்தப் புத்தக வங்கி அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவினுடைய ஆதரவில், அவர்கள் வழங்கிய நிதி உதவியுடன் இதுபோன்ற புத்தக வங்கித் திட்டம் பல்வேறு கல்லூரிகளிலே நடைபெற்று வந்தது. அந்தப் பல்கலைக்கழக நிதி உதவிக் கழகம் தொடர்ந்து வழங்குகின்ற முறை இப்போது இல்லாத காரணத்தால் பல கல்லூரிகளில் அப்படிப்பட்ட வங்கித் திட்டம் இல்லை. ஆனால், சில தனியார் அமைப்புகள் இப்படிப்பட்ட புத்தக வங்கி முறையில் புத்தகங்களை ஏழை மாணவர்களுக்கு வழங்குவது என்பதைப் பல இடங்களில் செயல்படுத்தி வருகின்றன. சில முதல்வர்கள் அவர்களாகவே அதற்காகக் கிடைக்கக்கூடிய நிதியைக் கொண்டு புத்தகங்களை வாங்கி, வழங்கி தொடர்ந்து அடுத்த ஆண்டு மாணவர்களுக்கும் கிடைக்கச் செய்கிறார்கள். இப்போது அரசு இதற்காக நிதி ஒதுக்க வேண்டும். ஒதுக்கித்தான் செயல்படுத்த வேண்டுமென்ற கருத்து ஏற்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கக்கூடிய வாய்ப்பைப் பொறுத்து அரசு மேற்கொள்ளும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 102, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**102—**

**பள்ளி மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளித்தல்**

***19823—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் தனியார் பள்ளிகளில் முதலுதவி செய்யும் முறையை மாணவர்களுக்குக் கட்டாயமாக கற்றுத்தர அரசு ஆவன செய்யுமா?





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்போது அப்படிப்பட்ட பயிற்சி கற்றுத்தரப்படுகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நவீன விஞ்ஞான உலகில் விபத்துகள் தவிர்க்க முடியாததாகி விட்டன. இளமைப் பருவத்தில் மாணவர்களுக்குப் பாதுகாப்பு அறிவை மேம்படுத்த இதுபோன்ற பயிற்சிகள் எந்த வகுப்பிலேயிருந்து கற்றுத்தரப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடற்பயிற்சிக் கல்வியோடு இணைத்து உடற்பயிற்சி ஆசிரியர் மூலமாக மாணவர்களுக்கு ஓரளவுக்கு இந்த முதலுதவித் திட்டம் அளிக்கப்படுகிறது. செஞ்சிலுவைச் சங்கம் அடிப்படையிலே பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கும் அதாவது Red Cross Society என்பதன் கீழ் உள்ள பயிற்சியிலே ஈடுபட்டிருக்கிற மாணவர்களுக்கும், சாரணர் இயக்கத்திலே ஈடுபட்டிருக்கிற மாணவர்களுக்கும் இப்படிப்பட்ட பயிற்சி—தரமான பயிற்சிகூட—வழங்கப்படுகிறது. அனைத்து மாணவர்களும் ஓரளவு அறிந்திருக்க வேண்டுமென்ற முறையில் 6-வது வகுப்பில், உடற்கல்வி, உடல்நலக் கல்வி என்ற ஒரு தனிப் பாடப்புத்தகம் அவர்களுக்காக உருவாக்கப்பட்டிருப்பதில், இந்த முதலுதவி விரிவாக ஒரு பாடமாகவே அமைக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது. எல்லா வகுப்பிலேயும் இதற்குத் தனிப் பாடம் அமைப்பது இயலாத காரியம். ஆனால் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஏதேனும் ஒரு வகையில் இந்த முதலுதவிப் பாடம் மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அளவும், வகையும் வேறுவேறாக இருக்கமுடியுமே தவிர, ஒரே அளவாகவோ, கட்டாயமாக எல்லா மாணவர்களுக்கும் என்றோ ஒரே காலகட்டத்தில் நிறைவேற்ற முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 103, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[1999 மார்ச் 20

103—

## தனியார் மின் உற்பத்தி நிலையம் தொடங்குதல்

***14234—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

கடலூர் தொகுதியில் அமைவதாக உள்ள தனியார் மின் உற்பத்தி நிலையங்களின் பணி எப்பொழுது தொடங்கும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் தொகுதியில் அமையவுள்ள தனியார் மின் உற்பத்தி நிலையங்களின் கட்டுமானப் பணிகள் 1999-ஆம் ஆண்டில் தொடங்கி 2002-2003-ல் மின் உற்பத்தி நிலையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் ஆட்சியிலேதான் கடலூர் தொகுதியில் வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அந்த வகையிலே இந்த விடைக்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணியை மேலும் விரைவுபடுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு அமெரிக்க நாட்டின் நிறுவனம். International Contracting and Marketing Corporation என்ற நிறுவனம், 1320 மெகாவாட் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்காக நம்மிடத்திலே அனுமதி கேட்டு, மத்திய அரசாங்கமும் அனுமதி வழங்கி இப்போது பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலே என்னென்ன பணிகள் நடைபெற்று இருக்கின்றன என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். மைய அரசின் அதிகார மின் குழுமத்திடமிருந்து இத்திட்டத்திற்கு கொள்கை அளவு ஒப்புதல் கிடைத்துள்ளது. Company தேர்வு செய்த இயந்திரக் கொள்முதல் கட்டுமான ஒப்பந்தக்காரர்களுக்கு மின்வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. விரிவான திட்ட அறிக்கை, மைய அரசின் அதிகார மின் குழுமத்திடம், தொழில்நுட்பப் பொருளாதார அனுமதி பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



1999 மார்ச் 20]

தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம் போன்ற அமைப்புகளிடமிருந்து அனுமதிகளைப் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தில், இதுவரையில் 312 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதி நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு உரிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. திட்டத்தின் நிதிக்கான அறிக்கைக்கு மைய தொழில் அமைச்சகத்தின் அந்நியச் செலாவணி முதலீடு மேம்பாட்டு வாரியத்தின் அனுமதியைப் பெறுவதற்கு வேண்டிய ஆவணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை எல்லாம் முடியும் தருவாயில் உள்ளன. இவை எல்லாம் இந்த ஆண்டு முடிந்தபிறகு, மின்சார உற்பத்திக்கான பணிகளைத் தொடங்குவதற்கு அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அந்தப் பணிகள் தொடங்கினால் 38 மாத காலத்திலே அந்த நிறுவனம் மின்சாரத்தை உற்பத்தி செய்து வாரியத்திற்குக் கொடுக்கும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 104, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

104—

## ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்துதல்

***16699—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி வட்டம், வேப்பனஹல்லி ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்பொழுது தொடங்கும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையோலை நறுக்குகளில் பாங்குடன் பரவிக் கிடந்த பைந்தமிழ் எழுத்துக்களை, எழுத்தாணி கொண்டு அழுந்த எழுத வேண்டும் என்ற அவசியத்தையும் தவிர்த்து, அன்ன சிறகு கொண்ட விசைப் பலகையை மெல்லெனத் தொட்டாலும் அழகு தமிழ் எழுத்துக்கள் வெண் திரையில் உலாவர கணிப்பொறி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன, துணை வினாவா? துணை வினாவிற்கு வாருங்கள்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** கணிப்பொறி இணையம் கண்டுள்ள டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்கள் ஆட்சியில் இல்லையென்ற சொல்லே இருக்கக் கூடாது என்ற பெரு விருப்பில் கிருஷ்ணகிரியிலிருந்து ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள, அன்றாடம் 5 ஆயிரம் மக்களுக்கும் அதிகமாக வந்து போகின்ற மையப் பகுதியாக அமைந்திருக்கின்ற வேப்பணஹல்லியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேல்நிலைப்படுத்தி, ஒரு மருத்துவமனையாக ஆக்கிக் கொடுக்கின்ற செயற்குறிப்பினை இனியேனும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மறுபரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள வேப்பணஹல்லி மட்டுமல்ல, இப்படி 1414 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் உயர்த்த வேண்டுமென்றால், குறைந்தது 2 ஆயிரம் கோடி ரூபாய் தேவை. இப்போதுள்ள நிதிநிலைமையில் இந்தப் பணியை மேற்கொள்வதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல நிதிநிலைமை, இப்படிப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி தருமானால் அப்போது அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 105, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.





**105—**

## தமிழ்நாட்டில் நில அதிர்வுகள்

***11299—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நில அதிர்வுகள் தோன்றும் அபாயம் உள்ளதாகச் சொல்லப்படும் செய்திக்கு அறிவியல் ரீதியான அடிப்படை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அதிர்வுகளும் பூகம்பங்களும் ஏற்படுவது என்பது மனித குலத்தைக் கடுமையாகப் பாதிக்கின்ற ஒரு விஷயமாகும். இந்த விஷயம் தமிழ்நாட்டிலே நடப்பதை முன்கூட்டியே அறிந்துகொள்வதற்குரிய தொழில்நுட்பம் இதுவரையில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் திருப்பூரிலே டாக்டர் டி. ஆனந்தன் என்ற ஓர் இளம் விஞ்ஞானி நில அதிர்வுகளை முன்கூட்டியே கண்டறிய இயலும் என்பதைத் தெரிவித்து, முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு மகஜரும் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல, தினமணி பத்திரிகைகூட அதனுடைய வாராந்திர வெளியீட்டிலே அட்டை பக்கத்திலே அவருடைய படத்தையும் போட்டு அவரைப் பற்றிய விரிவான எல்லா விவரங்களையும் பேட்டியிலே தெரிவித்திருந்தது. அத்தகைய ஆற்றலைக் கொண்டுவர முடியும் என்கிற நம்பிக்கையோடு ஆராய்ச்சியில் இறங்கும் அந்த இளம் விஞ்ஞானிக்கு மாநில அரசு உரிய உதவிகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** Confuse செய்வது என்றே முடிவு செய்துவிட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயக்குநர், இந்திய வானிலைத் துறை, புதுடெல்லி, அவர்களிடமிருந்து பெறப்பட்ட 10-2-1999 நாளிட்ட கடிதத்தின்படி, நில அதிர்வுகள் தோன்றும் அபாயம் குறித்து சொல்லப்படும் செய்திக்கு அறிவியல் ரீதியாக அடிப்படையில்லையென்றும், முன்னதாக நில அதிர்வுகள் எங்கு எப்போது ஏற்பட உள்ளன என்பதை அறிந்துகொள்வதற்கான அறிவியல் ரீதியான தொழில்முறை நுட்பம் ஏதும் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 106, திரு. கே.எம். விஜயகுமார், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**106—**

**இருக்கன்குடிக்குப் புதிய குடிநீர்த் திட்டம்**

***6723—திரு. கே.எம். விஜயகுமார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகருக்கு இருக்கன்குடி அர்ச்சுனா நதியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சாத்தூர் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான கருத்துரு மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. கருத்துருவிற்கு தொழில்நுட்பக் குழுவின் அனுமதி பெற்ற பின்னரும், நிர்வாக ஒப்பளிப்பு பெற்ற பின்னரும் பணிகள் தொடங்கப்படும்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான சாத்தூர் ஒரு தொழில் நகரமாக இருந்து வருகிறது. அந்த நகர மக்களுக்குத் தேவையான குடிநீர், அரசால் அங்கீகரிக்கப்பட்ட குடிநீரைவிட குறைந்த அளவிலே இப்போது விநியோகம் செய்யப்பட்டு



வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த அரசால்தான் குடிநீர்த் திட்டங்கள் மிக விரைவாகப் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்ற இந்த வேளையிலே, சாத்தூர் நகருக்கான இருக்கன்குடி குடிநீர்த் திட்டத்தின் ஆய்வுப் பணிகளை விரைவிலே முடித்து, நிதி ஒதுக்கீடு செய்து, வரும் 2 ஆண்டு காலத்திற்குள்ளாகவே அந்தப் பணியை முடித்துக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் ஒரு முறை அந்தப் பகுதியைச் சுற்றிப்பார்த்து அதிகாரிகளை வைத்துப் பேசி ஒரு முடிவு எடுத்தபோது ஏறத்தாழ 1992 ஆம் வருடத்தில் தொடங்கி 1996 ஆம் ஆண்டு வரையில், இரண்டு, மூன்று முறை திட்டங்கள் போடப்பட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி அதற்குரிய நீரின் அளவைக் கொடுக்க இயலவில்லை என்பது உண்மை. இருப்பினும், தற்பொழுது உள்ள அரசின் கொள்கைப்படி அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒரு புலனாய்வை ஏற்படுத்தி, அதன் மூலம் நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன. 2026 ஆம் ஆண்டில் உச்சபட்ச மக்கள்தொகை ஏறத்தாழ 45,000 பேர் இருக்குமென எதிர்பார்க்கப்பட்டு, அவர்களுக்குத் தலா 90 லிட்டர் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பது நியதி. அதை நோக்கித்தான் இப்போது திட்டம் போடப்படுகிறது. நிதி நிலைமை சற்றுக் கடினமாக இருந்தாலும்கூட, வரும் நிதியாண்டில் இதை எடுத்துக்கொள்ளுமாறு திட்டமிட்டு அறிவிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்ததற்கிணங்க இந்தத் திட்டம் விரைவாகச் செயல்படுத்தப்படும் என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 107, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**107—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***8844—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூர் ஒன்றியம், சிலமலை, சில்லமரத்துப்பட்டி, மேலச்சொக்கனாதபுரம் ஆகிய

[1999 மார்ச் 20

கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூர் ஒன்றியத்தில் இருக்கும் சிலமலை, சில்லமரத்துப்பட்டி மற்றும் மேலசொக்கநாதபுரம் ஆகிய கிராமங்களுக்கு, சில்லமரத்துப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம், பெரியாறு ஆற்றில் உப்புக்கோட்டையில் தலைமையிடம் அமைத்து, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சுடலைமுத்து, இருக்கையில் இல்லை.

வினா எண் 108, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**108—**

**காய்கறி விலைகளை ஒழுங்குபடுத்துதல்**

***22079—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் பல்வேறு காய்கறிகளுக்குக் குறைந்த விற்பனை விலையை நிர்ணயம் செய்து காய்கறிகளின் விலையை ஒழுங்குபடுத்தும் கருத்துரு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் (TANHOPE) மூலம் காய்கறிகளை நியாயமான



1999 மார்ச் 20]

விலையில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) முதல் கட்டமாக 1999-2000 நிதியாண்டில் இத்திட்டம் சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறிகள், உதாரணத்திற்கு, வெங்காயம், தக்காளி, முட்டைகோஸ், உருளைக்கிழங்கு போன்ற காய்கறிகளின் விலை நிறைய குறைந்துவிட்டது. விவசாயிகள் அவற்றை எடுத்துப்போய் market-ல் விற்பதற்கு, market-க்கு transport பண்ணுகிற விலைகூட வரவில்லை; அவற்றை வெளியிலே கொட்டுகிறார்கள்; அந்த அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. அதனால் தமிழ்நாட்டிலே விவசாயிகள் எல்லோரும் ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி, முன்னர் ஆந்திராவிலே பருத்தி விவசாயிகளுக்குக்கூட இந்த மாதிரி நிலை வந்தபோது நிறையப் பேர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்கள். அந்த அளவுக்கு வருகிறமாதிரி ஒரு நிலைமை இங்கு இருக்கிறது. ஏனென்றால், நானும் விவசாய குடும்பத்திலே இருந்து வருகிறேன். அங்கே தக்காளி 8 அணாவுக்கு வாங்குகிறார்கள். அதை இங்கு 6 ரூபாய்க்கு விற்கிறார்கள்; 8 அணாவுக்கு Open Market-லே Whole Sale-லே வாங்குகிறார்கள்; அதை இங்கே 5 ரூபாய், 6 ரூபாய்க்கு விற்கிறார்கள். இதில் Middlemen benefit அடைகிறார்கள். அதனால், காய்கறி விலைக்கு Minimum rate-ஐ அரசாங்கம் fix பண்ண வேண்டும்; அதை (Procure) பண்ண வேண்டும். காய்கறிகளின் விலை குறைந்து விட்டால், மத்திய அரசு, மாநில அரசுகூட அதற்கு subsidy கொடுக்கிறமாதிரி ஒரு தகவல் இருக்கிறது. அந்த மாதிரி ஏதாவது பண்ணுவதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் காய்கறிகள் மற்றும் பழங்கள் சாகுபடி செய்து வரும் விவசாயப் பெருமக்களுக்கு நியாயமான இலாபம் கிடைக்கக்கூடிய விலையில், கொள்முதல் செய்யப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள் நியாயமான மலிவான விலையில் மக்களுக்கு விநியோகம்

[1999 மார்ச் 20

செய்யும்பொருட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் 3 ஆண்டுகாலத் திட்டம் ஒன்று ரூ. 40.52 கோடி செலவில் தமிழ்நாட்டில் குளிர்பதனக் கிடங்குகள், காய்கறிகள் மற்றும் பழங்கள் கொள்முதல் நிலையங்கள், காய்கறிகள் விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட நம்முடைய முதலமைச்சர் நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்து இருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே முதற்கட்டமாக ரூ. 470 இலட்சத்திற்குக் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை மையங்கள் அமைப்பதற்கும், வாழைப்பழங்களைப் பதப்படுத்தும், ப்ழுக்க வைக்கும் நிலையங்கள் அமைக்கவும் TANHOPE நிறுவனத்திற்கு அரசாங்கத்தின் பங்குத் தொகையாக ரூ. 188 இலட்சம் வழங்கி அரசாணை நிலை எண் 532, வேளாண்மைத் தோட்டக் கலைத் துறை, நாள் 16-12-1998-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. ரூ. 90 இலட்சம் செலவில் 75 சில்லரை விற்பனைக் கடைகள், சென்னையில் 56 கடைகள், சேலத்தில் 12 கடைகள் திண்டுக்கல்லில் 7 கடைகள் தொடங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக காய்கறி மற்றும் பழங்களை விவசாயிகளிடமிருந்து நேரிடையாக கொள்முதல் செய்ய ரூ. 80 இலட்சம் செலவில் 10 கொள்முதல் மையங்கள் தொடங்கப்படவுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை கிராமத்திலும், சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டணத்திலும், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்திலும், நேரடி கொள்முதல செய்வதற்கான மொத்தக் கொள்முதல் நிலையங்கள் அமைப்பதற்கான பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல இந்தியாவில் ஒரு சில மாநிலங்களில் கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. பழங்களுக்கு, காய்கறிகளுக்கு விலை நிர்ணயம் செய்கிறார்கள். அப்படிச் செய்கிற நேரத்திலே, அந்த நிர்ணய விலையை விட விற்பனை விலை குறைந்தால் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும், அதனால் ஏற்படுகிற நட்டத்தை விவசாயிகளுக்குக் கொடுப்பதாக நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதேபோன்று நம்முடைய மாநில அரசாங்கமும் பரிசீலிக்க வேண்டுமானால் இன்றைக்குள்ள நிதிச் சுமையின் காரணாக இயலாது என்ற அளவில்தான் இருக்குக்கிறது. இருந்தாலும் எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை இந்த அரசாங்கம் பரிசீலிக்கும். ஆந்திர மாநிலத்திலே பருத்தி உற்பத்தி செய்த விவசாயிகள், அதைப்போல கர்நாடக மாநிலத்திலே பருத்தி உற்பத்தி செய்த விவசாயிகள் ஆகியோர்களுக்குப் பெருத்த நட்டம் ஏற்பட்டு விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டதாக வந்த செய்திகளைப் போல, தமிழ்நாட்டிலே எந்தக் காலத்திலேயும், அதுவும் கலைஞர் ஆட்சியிலே வராது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1999 மார்ச் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்கொலை செய்து கொள்ள மாட்டார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் நீங்களெல்லாம் தொலைக்காட்சியிலே பார்த்திருப்பீர்கள். தக்காளியை வீதியில் கொட்டி டிராக்டரால் மிதித்து உழுதார்கள் என்ற செய்தி தொலைக்காட்சி, சன் தொலைக்காட்சி, எல்லா தொலைக்காட்சிகளிலும் வந்தது. பத்திரிகைகளிலும் வந்தது. இது தற்கொலை செய்துகொள்வதைவிட மிகக் கொடுமையானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடுத்தபடியாக நம்முடைய மாநிலத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா போன்ற நாடுகளுக்கு ஏராளமான காய்கறிகள் இந்தியாவிலிருந்து போகிறது. நம்மிடத்தில் பக்குவப்படுத்தும், பதப்படுத்தும் கிடங்குகள் இல்லாத காரணத்தால் மஹாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களிலேயிருந்து அவர்கள் விலைக்கு வாங்குகிறார்கள். ஆகவே இனிமேலாவது போர்க்கால அடிப்படையில், பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதப்படுத்தும் கிடங்குகளை விரைவில் ஏற்படுத்தி, நம்முடைய விவசாயிகளைக் காப்பாற்றுவதோடு, அன்னியச் செலாவணியையும் ஈட்டுவதற்கு முயற்சி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளி, அதைப் போல வெங்காயம் விலை உயர்விலே, இறங்குமுகத்திலே விற்பது என்பது தொன்றுதொட்டு இருக்கக்கூடிய நிலை. ஆனால், தக்காளியை வீதியில் கொட்டி டிராக்டரை ஓட்டினார்கள்; அல்லது மிதித்தார்கள் என்பதையெல்லாம் சில பேர், அதற்கென்று சில சங்கங்களை வைத்துக்கொண்டு, விளம்பரத்திற்காகக்கூட அதைச் செய்கிறார்கள். சில இடங்களில் தக்காளிப் பழம் மிகக் குறைந்த நிலையில் விலை வீழ்ச்சி அடைந்தபோது கூட, உற்பத்தி செய்த விவசாயியே அப்படிப்பட்ட நிலையில் ஈடுபடுவதில்லை. இருந்தாலும்கூட, இதற்கென்று இப்பொழுது குளிர்பதனக் கிடங்குகளெல்லாம் அமைத்தாலும், அப்படி அந்தத் தக்காளிகள் அதிகமாக உற்பத்தி செய்து, விலை வீழ்ச்சியுள்ள நேரத்தில் நாம் கொள்முதல் செய்து ஒரு வார காலத்திற்கு மேல் வைக்க முடியாது

என்றுதான் நிபுணர்கள் சொல்கிறார்கள். அதற்கு மேல் அதை என்ன செய்வது என்ற ஒரு பிரச்சினையும் எழுகிறது. அதுவும் அரசாங்கமே கொள்முதல் செய்வது என்பது சிரமம். உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் விலை வீழ்ச்சி இருக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட குளிர்பதனக் கிடங்குகளில் கொண்டுவந்து வைத்து, விலை கொஞ்சம் கூடுதலாக விற்கிறபோது, அதனை எடுத்து ஒரு வார காலத்திற்குள் அல்லது 10 நாட்களுக்குள் விற்பனை செய்து, அதனால் இலாபம் கிடைக்குமானால், அந்த அடிப்படையிலே விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியுமா என்று இந்த அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதற்காக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாக குளிர்பதனக் கிடங்குகளெல்லாம் ஏற்படுத்துவதற்குத் திட்டம் இருக்கிறது என்று அறிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே.மணி. (குறுக்கீடு) திருமதி பொன்னம்மாள், கையைக் கீழே போடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, நேரடிக் கொள்முதல் நிலையங்கள் உருவாக்குவது, குளிர்பதனக் கிடங்குகள் உருவாக்குவது பற்றியெல்லாம் இங்கே தெரிவித்தார்கள். அப்படி இவற்றையெல்லாம் உருவாக்கினாலும்கூட, விலை வீழ்ச்சியை-தரமான விலை கிடைக்காத நிலையை—நிச்சயமாகப் போக்கிவிட முடியாது. அந்த வகையிலே இப்படி இந்தக் குளிர்பதனக் கிடங்குகள், கொள்முதல் நிலையங்கள் அமைப்பதோடு, விலையை நிர்ணயம் செய்வதற்காக அரசு அதிகாரிகள், விவசாயிகள், நுகர்வோர் போன்ற முத்தரப்புக் குழுக்களை அமைத்து, இந்திந்த பருவ காலங்களிலே இன்னின்ன விலை என்று சொல்லி, நிர்ணயிக்கக்கூடிய நிலை வருமானால், விவசாயிகளுக்கும், பயன்படுத்துவோருக்கும் ஏற்ற, விலையைக் கட்டுப்படுத்துவற்கு, நியாயமான விலை கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்ற வகையில் நம்முடைய அரசு அதை முதலாவதாகக் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறிகள் விலை குறைவாக இருக்கிறது, விவசாயிகள்



பாதிக்கப்படுகிறார்கள் என்று பேசுவதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டுதான் மத்திய அரசின் சார்பில் நடைபெற்ற கூட்டத்திலே, மாநிலம் முழுவதும் ஒரே சீராக, விவசாயிகளுக்கு விலையைக் கொடுக்க வேண்டுமென்ற அந்த நோக்கத்தோடு, மாநில அரசுகள் விரும்பினால் ஆங்காங்கே குளிர்பதனக் கிடங்குகள் அமைத்தால், அதற்கு உதவுவதற்குத் தயாராக இருக்கிறது என்று மத்திய அரசு சொல்லி. அந்த மத்திய அரசினுடைய உதவியைப் பெறுவதற்காக இன்று விவசாயத் துறை மூலமாகவும், கூட்டுறவுத் துறை மூலமாகவும், முதற்கட்டமாக விவசாயத் துறையிலே ஒட்டன்சத்திரத்திலேயும், கூட்டுறவுத் துறையிலே—கோயம்பேடு மார்க்கெட்டில் ஏற்கெனவே 2000 டன் கொள்முதல் செய்யத் தக்க கிடங்கு இருக்கிறது—மேலும் ஒன்று கட்டுவதற்காகவும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. காய்கறியைப் பொறுத்த அளவில்—இங்கே வந்திருக்கிற பெரும்பகுதியான உறுப்பினர்கள் விவசாயத்திலிருந்துதான் வந்து இருக்கிறார்கள்—70 நாட்களுக்குள் விளைகின்ற எந்தப் பயிராக இருந்தாலும், இயற்கையின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப, அதிகமாக விளைவதும், குறைவாக விளைவதும், இயற்கையை ஒட்டி இருக்கின்ற காரணத்தால், நமது சென்னை நகரத்தைப் பொறுத்த அளவு, ஒரு நாளைக்குத் தேவையான 300 load காய்கறிகள் இருந்தால் ஒரே சீராக விலை இருப்பதும், அதிலிருந்து 10 load குறைந்தால் விலை ஏறுவதும், 10 load அதிகமானால் விலை குறைவதுமாக இப்படி நுகர்வோருக்கும், உற்பத்தியாளருக்குமிடையே இந்த நிலைதான் இருந்து கொண்டு இருக்கிறது. தற்போது இங்கிருந்து இலங்கை போன்ற மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது. ஒரு நாளைக்கு 50 load உதகையிலே மட்டும்தான் அவர்கள் கொள்முதல் செய்கிறார்கள். நமக்குக் காய்கறிகள் குறைவாக இருக்கிறபோது, நாம்—மற்ற பகுதிகளில்—மைசூரிலே சென்று கொள்முதல் செய்கிறோம். ஓட்டன்சத்திரத்திலே நேரடியாகக் கொள்முதல் செய்கிறோம். இன்றளவுகூட கூட்டுறவுத் துறையிலே 500 வண்டிகள் மூலமாக நேரடியாகக் கொள்முதல் செய்யப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஒட்டுமொத்தமாக விலை குறைகின்ற காய்கறிகள் முழுவதையும் அரசு வாங்கிக்கொள்ள இயலுமா என்றால், விநியோகிக்கிற இடத்தில் இடம் இல்லாத காரணத்தால், அப்படிப்பட்ட செயலைச் செய்வது என்பது இயலாத காரியம். இருந்தாலும், நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசு குளிர்பதனக் கிடங்குகளை ஆங்காங்கே ஏற்பாடு செய்வதற்கு தற்போது முயற்சி

[1999 மார்ச் 20

எடுத்து இருக்கிறது. இது வரும் காலத்தில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நிறைய காய்கறிகள் வந்ததனால், cold storage போதுமான அளவுக்கு இல்லை. வெளிநாடுகளில் Dehydration Plant பயன்படுத்துவதால் காய்கறிகளின் விலை அதிக அளவில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதுபோன்ற Dehydration Plant-களை அதிகமாக அமைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்தால் dehydrate செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு வசதியாக இருக்கும். இது குறித்து அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 109, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**109—**

### அணை கட்டும் திட்டம்

***9957—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், தெப்பம்பட்டியில் அணை கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டப் பணிகள் எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், தெப்பம்பட்டி கிராமத்தின் அருகே வெள்ளப்பாறை ஓடையின் குறுக்கே



1999 மார்ச் 20]

அணை கட்டும் திட்டத்திற்குப் பதிலாக பெரிய அளவில் கண்மாய் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணைத் திட்டம் என்பது இந்தத் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த முன்னாள் முதலமைச்சருடைய ஆட்சிக் காலத்திலேயே கைவிடப்பட்டுவிட்டது. மணல் சார்ந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தால் நீர் தேக்க முடியாது என்று சொல்லி கைவிட்டார்கள். அதற்குப் பின்னால் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த ஆட்சியில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை எப்படியும் செயல்படுத்தியாக வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்து இந்தத் திட்டத்தை ஆய்வு செய்து மறு நீர்த் தேக்கத் திட்டம் என்கின்ற அடிப்படையிலே முதலிலே 67 இலட்ச ரூபாயையும், அடுத்த ஆண்டு 67 இலட்ச ரூபாயையும், மொத்தமாக ஒரு கோடியே 34 இலட்ச ரூபாயைப் போட்டு இந்தத் திட்டத்தை Recharged Reservoir Scheme என்ற அடிப்படையிலே அமைத்துவிடுவது என்று முடிவெடுத்து துறைக்கு அறிவுரைகள் வழங்கி செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு வந்தபோது துரதிருஷ்டவசமாக இந்த ஆட்சி கலைக்கப்பட்டது. மீண்டும் இப்போது பொறுப்பேற்றுள்ள இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து பார்த்து திட்டத்தின் முக்கியத்துவத்தை அறிந்து பழைய செயற்குறிப்பையே செயல்படுத்த வேண்டுமென்று முடிவெடுத்து அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். எனவே, அமைக்கப்படுகின்ற திட்டம், பெரிய அளவிலான கண்மாய் அணைக்கு நிகராக அமையுமா? அது எப்போது அமைக்கப்படும் என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தத் திட்டம் வனத் துறைக்குச் சொந்தமான இடம் என்ற காரணத்தால் கைவிடப்பட்டது. எனவே, இந்த அரசு வனத் துறையின் இடத்தை விட்டுவிட்டு, பட்டா, புறம்போக்கு இடங்களிலே இந்தக் கண்மாயை அமைக்கக்கூடிய அளவுக்குப் பரிசீலனை செய்திருக்கிறது. 28 ஏக்கர் பட்டா நிலத்திலும், 10 ஏக்கர் புறம்போக்கு நிலத்திலும் இத்திட்டம் அமைகிறது. இந்தத் திட்டம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறோம். அவரிடமிருந்து பரிந்துரை செய்யப்பட்ட பிறகு மேற்கொண்டு இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

[1999 மார்ச் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 110, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**110—**

**சென்னை நகரில் சொகுசுப் பேருந்துகள்**

***13516— திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் சொகுசுப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மாநகர போக்குவரத்துக் கழக பேருந்து தடம் 21-ஜி-ல் ஒரு சொகுசுப் பேருந்து உயர்நீதிமன்றத்திலிருந்து தாம்பரத்திற்கு 2-4-1998 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மேலும் தாம்பரம், ஆவடி, கோவளம் பகுதிகளுக்கு இயக்குவதற்குப் பேருந்து வசதி மற்றும் கூண்டு கட்டுமானப் பணிகள் முடிந்தவுடன் இந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெறும்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே சொகுசுப் பேருந்துகளை அதிகப்படுத்தவும், மாவட்டத் தலைநகரங்களிலிருந்து சென்னைக்கு வர இதுபோன்ற சொகுசுப் பேருந்துகளை விடவும், அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? இப்போது இரவு நேரங்களில் செல்லும் இரயில்களில் படுக்கைக் கட்டணம் எல்லாம் உயர்ந்துவிட்டது. எனவே, படுத்துக்கொண்டு பிரயாணம் செய்யும் வகையில் சொகுசுப் பேருந்துகளை மாவட்டத் தலைநகரங்களிலிருந்து சென்னைக்கு விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 13 சொகுசுப் பேருந்துகள் விடப்படுகின்றன. படுத்துச் செல்லும் பேருந்துகளை இயக்குகின்ற வசதிகள் இன்னும் நமது நாட்டில் வரவில்லை என்று கருதுகிறேன். விபத்துகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இதுபோன்ற பேருந்துகளை இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 மார்ச் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரில் நெரிசல் நேரங்களில் அதிகாரிகள், குறிப்பாக பெண்கள் பயணம் செய்வது மிகவும் கடினமாக இருக்கிறது. அதற்காக அவர்கள் தனியாக ஏற்பாடு செய்து Maxi Cab போன்ற வண்டிகளில் வருகிறார்கள். இதுபோன்ற நேரங்களில் Peak hours என்று சொல்லப்படுகின்ற உச்ச நேரங்களில் அன்புத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் சொன்ன யோசனைப்படி பகல் நேரத்தில் சும்மா இருக்கின்ற Omni Bus-களை அரசு பயன்படுத்துமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Omni Buses பெரும்பாலும் சட்டத்திற்குப் புறம்பாக—பல பேருந்துகள்—இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை எல்லாம் Contract carriage என்ற முறையில்தான் இயங்க வேண்டும். பயணிகளை அழைத்துச் செல்வதற்கு அவை அனுமதிக்கப்படுவதில்லை. இதுபோன்ற தடங்கள் எல்லாம் பொது உடைமையாக்கப்பட்ட பிறகு அவற்றில் தனியார்கள் விடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே, அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் சொகுசுப் பேருந்துகள் விடுவது குறித்த நிலையில், அதிகமான விலை, அதிக வசதி கொண்ட பேருந்து என்று தமிழ்நாட்டு மக்களாலும், இந்தச் சபையிலும் வர்ணிக்கப்பட்ட, முன்னாள் முதலமைச்சருக்குச் சொந்தமான சொகுசுப் பேருந்து இப்போது எங்கு இருக்கிறது? அதனுடைய நிலை என்ன? அதில் இருக்கிற படுக்கை மற்றும் bath room எல்லாம் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த வினா பொருத்தம் இல்லாத வினா, உட்காருங்கள், திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, 7309 பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டிருக்கின்றன என்று பட்ஜெட்டிலே கூறப்பட்டிருக்கிறது. 3-3-1999 அரசு செய்தியிலே 13,335 பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் எது உண்மை என்று தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1999 மார்ச் 20

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட்டிலே சொல்லியிருப்பதுதான் உண்மை. பதின்மூன்றாயிரத்து சொச்சம் புதிய பேருந்துகள் வாங்கியதாக தகவல் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மொத்தப் பேருந்துகள் சுமார் 17,000 இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில், இந்த மூன்று ஆண்டுகளில் இயக்கப்பட்டிருக்கிற புதிய பேருந்துகள் ஏழாயிரத்து சொச்சம்தான்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 482 கோடி ரூபாயில் பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாக ...

*(தாள் ஒன்றைக் காண்பித்தார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் இதற்கு அனுமதி வாங்காமல் காண்பிக்கக்கூடாது. என்னிடம் முதலில் அனுமதி வாங்க வேண்டும். *(குறுக்கீடு)* சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** 6,026 புதிய பேருந்துகளும் வாங்கப்பட்டிருப்பதாக அரசுச் செய்தியிலே கூறப்பட்டிருக்கிறது. 7,309 பேருந்துகளும், மேலும் 6,026 பேருந்துகளும், ஆக மொத்தம் 13,335 பேருந்துகள் வாங்கப்பட்டதாக 3-3-1999 அரசு செய்தியில் கூறப்பட்டிருக்கிறது இதில் எது உண்மை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் வாங்கப்பட்டிருக்கிற புதிய பேருந்துகள் ஏழாயிரத்து சொச்சம்தான், இந்த மூன்று ஆண்டுகளில், 13,000 என்று இருக்குமானால், அது தவறான செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மும்பை, ஹைதராபாத், டெல்லி போன்ற பெருநகரங்களில் இயங்கும் குளிர்சாதன வசதியுடன்கூடிய பேருந்துகள் மக்களால் பெருமளவில் வரவேற்கப்படுகின்றன. அதைப்போல, சென்னையிலும், இதுபோன்ற பேருந்துகளை இயக்க அரசு முயற்சிக்குமா என்பதோடு Valvo Company-யின் Low Floor City Bus என்ற பேருந்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட பரீட்சார்த்தமாக பிரயாணம் செய்துள்ளார்கள். அது என்ன ஆயிற்று? Ashok Leyland Company-யின் Low Floor Bus ஒன்றை இப்போது சென்னையிலே விட்டால், அதிலே வயதானவர்கள், பெண்கள், ஊனமுற்றவர்களெல்லாம் ஏறி, மிகச் சுலபமாகப் பிரயாணம் செய்ய வசதியாக இருக்கும். எனவே இதுபோன்ற பேருந்தை அறிமுகப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1999 மார்ச் 20]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு, சென்னை மாநகரத்தில் மட்டுமின்றி, மற்ற இடங்களில் ஓடுகின்ற பேருந்துகளையும் சொகுசுப் பேருந்துகளாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. குறிப்பாக சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், பேருந்துக் கட்டணத்தை சிறிதளவு உயர்த்தினால்தான் இதுபோன்ற சொகுசுப் பேருந்துகளை இயக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் சொகுசுப் பேருந்துகளைக் கேட்கின்ற அதேநேரத்தில், அதற்கான கட்டணத்தையும் உயர்த்துவதற்கு இங்கே இருக்கின்ற உறுப்பினர்களெல்லாம் ஒத்துழைத்தால் நிச்சயமாக அதற்கான பரிசீலனையை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து நேபாளம், பங்களா தேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு மத்திய அரசு அனுமதி பெற்று சொகுசுப் பேருந்துகளை விட தமிழக அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். நேபாளம், பங்களா தேஷ் நாடுகளுக்கெல்லாம் நீங்கள் மத்திய அரசின் அனுமதி வாங்கி, பேருந்து விடுவீர்களா என்று கேட்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியின் மூலமாக, மத்திய அரசின் மூலமாக இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். தமிழக அரசில் அதுபோன்ற திட்டங்கள் இல்லை.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 111, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**111—**

### பயண வழி உணவகங்கள் தொடங்குதல்

***15545—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 20

சென்னை-கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் ஆங்காங்கே போக்குவரத்துக் கழகங்கள் மூலம் பயண வழி உணவகங்கள் நிறுவி தரமான, சுகாதாரமான உணவுகளைப் பயணிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை-கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் ஏற்கெனவே பயணவழி உணவகங்கள் நிறுவப்பெற்று பயணிகளுக்குத் தரமான உணவு வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரமான உணவு வழங்கப்படுவதாக இங்கே தெரிவித்தார்கள். ஆனால் இப்போது பேருந்துகள் நிறுத்தப்படும் உணவு விடுதிகளில் தரமான உணவு வகைகள் வழங்கப்படுவதில்லை; அங்கே இருக்கின்ற கடைகளில்கூட பொருட்கள் அநியாய விலைக்கு விற்கப்படுகின்றன. அங்கே இருக்கின்ற கழிப்பிடங்கள் சுகாதாரக் கேட்டை விளைவிக்கின்றன. இதனால் பேருந்தில் தினசரி பயணம் செய்யக்கூடிய ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை பரிசீலனை செய்து ஆங்காங்கே பயணிகளுக்குத் தரமான உணவு வகைகளை வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த வழித்தடத்தில் நான்கு Motels போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்பட்டு வருகின்றன. அதிலே குறிப்பாக தொழுதூர், கொட்டாம்பட்டி, மாமண்டூர், பாடலூர் ஆகிய நான்கு இடங்களிலே போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக Motels இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, உணவு விடுதிகள் திண்டிவனம் பேருந்து நிலையத்திலும், மதுரை பேருந்து நிலையத்திலும் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே 6 இடங்களில் தான் இப்போது இதுபோன்ற உணவு விடுதிகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்போது நெடுஞ்சாலைகளிலே பல்வேறு இடங்களிலே தனியார்களும் பல உணவு விடுதிகளை உருவாக்கி இருப்பது உண்மைதான். இவற்றை எல்லாம் அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று சொன்னால், பெருகிக் கொண்டிருக்கின்ற வாகனங்களின் எண்ணிக்கைக்கேற்ப அது சற்று சிரமமான காரியமாக இருக்கும். தனியார்களே அதற்கு முன்வந்து சிறப்பாகச் செயல்படுவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யும்.



1999 மார்ச் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே 6 இடங்களிலே இதுபோன்ற உணவகங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த உணவகங்கள் எல்லாம் தனியாருக்கு Contract விடப்பட்டு அவர்கள் தாங்கள் நினைத்தபடி அங்கே பொருட்களை விற்பனை செய்து கொண்டிருப்பதுதான் நடந்து கொண்டிருக்கின்ற உண்மை. நம்முடைய அரசே ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் உணவு விடுதி (Canteen) வைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே பயணச்சீட்டோடு சேர்த்து 5 ருபாய் அல்லது 6 ரூபாய் என்ற அளவில் வசூல் செய்து தயிர் சாதமோ அல்லது புளி சாதமோ ஏதோ ஒன்றை நீங்கள் சுகாதார முறையில் அங்கே Pack செய்து அந்த இடத்திலிருந்து hot pack மூலமாக சூடாக கொண்டுபோய் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். சில இரயில்களில் அப்படிச் செய்கிறார்கள். இரயில் பயணச்சீட்டோடு உணவிற்கு சேர்த்து அவர்கள் பணத்தை வாங்குகிறார்கள். அதுபோல பேருந்துகளில் பயணச் சீட்டிற்கு பணம் வசூல் செய்யும்போது அதோடு உணவிற்கு சேர்த்து 5 ரூபாயோ 6 ரூபாயோ வாங்கிக் கொண்டு நல்ல உணவை சுகாதாரமான முறையில் தயார் செய்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 விடுதிகளுமே 6 போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக தனியார்களுக்கு Tender மூலமாக கோரப்பட்டுத்தான் நடத்தப்பட்டு வருகின்றன. போக்குவரத்துக் கழகங்களே நேரடியாக நடத்துவதில்லை. இந்தப் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக தனியார்களால் நடத்தப்படுகிற விடுதிகளில் விலை விகிதமும் ஓரளவிற்கு அரசினால் நிர்ணயிக்கப்படுகிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல புகை வண்டிகளில் வழங்குவதைப் போல பேருந்துகளிலே வழங்குவதற்கு நடைமுறை சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை அவரே நன்கு அறிவார். ஏனென்றால் புகைவண்டிகளில் பயணம் செய்பவர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. கிட்டதட்ட 17000 பேருந்துகள் இயங்குகின்ற இந்த காலக் கட்டத்தில் ஒவ்வொரு வழித்தடத்திலும் அப்படிச் செய்ய வேண்டுமென்று சொன்னால் நடைமுறைக்கு அது ஒவ்வாத ஒன்று. ஆகவே பேருந்துகள் மட்டுமின்றி, மற்ற ஊர்திகளும் அதிகமாகிக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில் வழிநெடுக நிறைய உணவு விடுதிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அவற்றைக்

கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மட்டும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்து வழித்தடங்களில் கழகங்களின் மூலமாக உணவகங்கள் உருவாக்கப்பட்டு அவற்றை தனியார்களுக்கு Contract விட்டதற்குப் பின்னாலும்கூட அங்கு விலை உயர்வாக உள்ளது என்பதும், தரமான உணவு வழங்கப்படவில்லை என்பதும் உண்மை. அதற்கு மேலே நம்முடைய போக்குவரத்துத் துறை ஊழியர்கள் அந்தப் பகுதிகளில் இந்த வண்டிகளை நிறுத்தாமல் தனியார்களுக்குச் சொந்தமான விடுதிகள் இருக்கும் இடங்களிலே கொண்டுபோய் நிறுத்துகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. ஆகவே அதைக் கட்டுப்படுத்தி அந்த உணவகங்களில் தரமான உணவை விநியோகிக்கவும், கழகங்களுக்குச் சொந்தமான விடுதிகள் இருக்கும் பகுதிகளிலே இந்த வாகனங்களை நிறுத்துவதற்கான வழிமுறைகளையும் அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் எல்லாம் ஓரளவிற்கு உண்மைதான். இருந்தாலும்கூட இவ்வளவு நீண்ட வழித்தடத்தில் நிறைய உணவு விடுதிகளை உருவாக்கிப் போக்குவரத்துக் கழகத்தால் பராமரிப்பது என்பது நடைமுறைக்கு சாத்தியப்படாத ஒன்றாக இருக்கிறது. தனியார் உணவு விடுதிகள் ஆங்காங்கே வளர்ந்திருப்பதும் உண்மைதான். அந்தத் தனியார் உணவு விடுதிகள் hygienic ஆக அதாவது சுகாதார முறையில் உள்ளனவா என்பதைக் கண்காணிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. ஆகவே, நடைமுறை சாத்தியக்கூறு இல்லாத காரணத்தினால்தான் தனியார்கள் இதை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு இடையே போட்டி இருப்பதும் உண்மைதான். அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து புறப்பட்டு, தென் மாவட்டங்களை நோக்கிப் போகின்ற அனைத்து வாகனங்களும் உளுந்தூர்பேட்டையில்தான் பிரிகின்றன.





திருச்சி. மதுரை, கன்னியாகுமரி ஒரு வழியாகவும், சேலம், கோயம்புத்தூர் ஒரு சாலையாகவும் பிரிகிறது. இரண்டும் இணைகின்ற இடம் உளுந்தூர்பேட்டையாகும். எனவே, உளுந்தூர்பேட்டையில், போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், உணவு விடுதி ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப் போல, புதிதாக போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக எந்த உணவு விடுதியும் தொடங்குவதற்கு அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி. அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக மோட்டல்கள் செயல்படுவதாகத் தெரிவித்தார்கள். தரமான உணவுகளை வழங்காத அந்த மோட்டல்களின் licence-ஐ ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 மோட்டல்களுமே tender மூலமாகத்தான் நிர்வகிக்கப்படுகின்றன. உறுப்பினர் சொல்வது போன்று ஏதேனும் புகார்கள் வருமானால், அவற்றின்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அரசிடம் அதிகாரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையோர உணவு விடுதிக்கு, ஆங்கிலத்திலே மோட்டல் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சுருக்கமான தமிழ் அழகுச் சொல் பயன்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையோர உணவகம் என்று தெளிவாக இருக்கிறது. அதிலே ஏதாவது விளங்காமல் இருந்தால் சுருக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள் அச்சடிக்கப்பட்ட ஒரு சுவரொட்டியைச் சுட்டிக்காட்டினார். அதிலே, ரூ. 555 கோடியில் 7309 புதிய பேருந்துகள் என்றும், ரூ. 428 கோடியில்

[1999 மார்ச் 20

பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாக 6,026 புதுப்பிக்கப்பட்ட பேருந்துகள் என்றும் இருந்திருக்க வேண்டும். புதிய பேருந்துகள் என்று தவறாக அச்சிப்பட்டிருக்கிறது. அவையெல்லாம் புதுப்பிக்கப்பட்ட பேருந்துகள் என்ற கணக்கிலேதான் சொல்லப்பட்டிருக்கின்றன.

*(திரு. மு. அப்பாவு, தம் இருக்கையை விட்டு எழுந்தார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லையே? உட்காருங்கள்.

*வினா எண். 112, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.*

**112—**

## கோவில் குளங்களை ஆழப்படுத்துதல்

***15986—திரு. ஜி. பழனிசாமி:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஸ்ரீபவானீஸ்வர தேவஸ்தானத்துக்குச் சொந்தமான பெரியகுளம், பிள்ளையார் குளம், புதுக்குளம், தேவிகுளம் ஆகியவற்றை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், இத்திட்டம் இந்நிதியாண்டில் தொடங்கப்படுமா?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை.*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி மற்றும் மன்னார்குடி பகுதிகளில், அறநிலையத் துறைக்குச் சொந்தமான குளங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான குளங்களோ, பேரூராட்சிக்கு அல்லது நகராட்சிக்குச் சொந்தமான



1999 மார்ச் 20]

குளங்களோ அங்கு இல்லை. அவ்வளவும் கோயிலுக்குச் சொந்தமான குளங்கள். அவை பல்லாண்டு காலமாக பராமரிப்பு இல்லாமல், தூர் வாரப்படாமல் இருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தக்கூடிய, குடிநீருக்காகப் பயன்படுத்தக்கூடிய குளங்களாக அவை இருக்கின்றன. பிரதானமாக இந்த மாவட்டத்திலே இருக்கிற பிரச்சினைகள், அந்தக் குளங்கள் ஆழப்படுத்தப்படாமல், பல்வேறு ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன என்பதாகும். சிலபேர் கட்டடங்களைக் கட்டிக் கொண்டு, அசௌகரியமான காரியங்களில் ஈடுபட்டிருக்கிற காரணத்தினால், இதனை அரசு, அது தன்னுடைய திட்டம் இல்லையென்றாலும், கண்டிப்பாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். இப்போது பல்வேறு தூர்வாரும் பணிகளில் குளங்களை ஆழப்படுத்துகிற பணிகளில் வேளாண்மைத் துறையும், பொதுப்பணித் துறையும் ஈடுபட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குத் திட்டம் இல்லை என்று சொல்லக் கூடாது; மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதுபோன்று குளங்கள் அதிக அளவிலே அந்தப் பகுதிகளிலே இருக்கிற காரணத்தினால், தனியாரிடத்திலாவது நீண்ட காலத்திற்குப் பராமரிப்பு ஒப்பந்தம் என்ற அடிப்படையில் விட்டால் அந்தக் குளங்களைப் பராமரிக்க முடியும். இல்லையென்றால். கொஞ்ச காலத்திலே முற்றிலும் அவை தனி நபரிடத்திலே கைமாறக்கூடிய அபாயம் ஏற்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியிலேயே ஒரு தவறான தகவல் இருக்கிறது. அவர் 4 குளங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அவற்றில், பிள்ளையார்குளம், புதுக்குளம், தேவிகுளம் ஆகியவை அறநிலையத் துறையின் ஆட்சியில் இல்லை. அவை ஊராட்சி மன்றத்திற்குச் சொந்தமானவை. அவற்றிலே அறநிலையத் துறையின்கீழ் இருப்பது ஒரே ஒரு குளம், பெரியகுளம் மட்டும்தான். அது ஏற்கெனவே மீன்பாசி குத்தகைக்கு விடப்பட்டுள்ளது, இந்த வருவாய் ஆண்டில் 28 ஆயிரம் ரூபாய்க்குக் மீன்பாசி குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அதிலே தெப்பத் திருவிழாவும் நடைபெற்றுவருகிறது. இது பெரியகுளத்திற்கு உள்ள நிலைமை. உறுப்பினர் கேட்ட பொதுவான கேள்விக்குப் பொதுவான விடை சொல்ல வேண்டுமென்றால், அதிகமான அளவில் கோயில்களுக்கு உடைமைகள் இருந்தும், குளங்கள் இருந்தும், பரப்பளவு இருந்தும், வருமானம் முற்றிலும் குறைவாக இருப்பது, அவர் குறிப்பிடுகின்ற அந்த மாவட்டத்தில்தான். இன்னும் சொல்லப்போனால்,

திருத்துறைப்பூண்டி, வீரன்திடல் பகுதியிலே நமக்குச் சொந்தமான பகுதியிலே 621 ஏக்கர் நிலத்தை உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி நாங்கள் கையகப்படுத்தியிருக்கிறோம் என்பது தெரியும். ஆனாலும் கூட அங்கே இருக்கின்ற உழவர்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வராமல் இருக்கிறார்கள். இதுபோன்று பல்வேறு நிலைகளிலே எந்தவகையான வருவாயும் இல்லாத நிலையில் கோயில் உடைமைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. இவை எல்லாம் வருவாய் பெறாத காரணத்தினால்தான் இதுபோன்ற சீரமைப்புகளுக்குக் கோயிலிலிருந்து பணத்தை எடுத்துக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவ்ல் கொடுத்ததாக..

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** திருவாரூர் தியாகராஜ சுவாமிகள் திருக்கோயில் தெப்பக் குளம் மிகவும் பிரசித்தி பெற்ற திருக்குளம். அதைவிட அந்தக் குளத்திற்கு இன்னொரு பெருமை நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இளம் வயதில் நீந்தி விளையாடிய குளம். அந்தக் குளம் தற்போது சுகாதார சீர்கேடாக உள்ளது. அந்தக் குளத்தை தூர்வாரி செப்பனிட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்த ஆலயகுளத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டு, அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லப்பட்டிருக்கிற தேவஸ்தானத்திற்குச் சொந்தமான பெரியகுளம், பிள்ளையார்குளம், புதுக்குளம், தேவிகுளம் ஆகியவை குறித்து பொய்யான தகவல் கொடுத்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவை அனைத்துமே கோயிலுக்குச் சொந்தமான குளங்கள். இதில்



அதிகாரிகள் யாராவது தவறான தகவலை கொடுத்திருந்தால் அதனை மறுப்பதற்குக்கூட நான் தயாராக இருக்கிறேன். நான் நன்கு விவரத்தைத் தெரிந்துதான் சொல்கிறேன். இந்தக் கோயிலினுடைய விவரங்கள் எனக்குத் தெரிந்த காரணத்தினால்தான் சொல்கிறேன். இதனுடைய பாசிக் குத்தகை கூட ஒரு நபரால் பல தடவை ஏலம் எடுக்கப்பட்டு, ஆள் மாறாட்டத்திலே அந்தக் குளத்தைத் தன் கையில் வைத்துக்கொண்டு மீன் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, என்ன காரணத்தினாலோ அதிகாரிகள் அமைச்சர் அவர்களுக்குத் தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலம் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய குறிப்பை மறுத்திருப்பதால் இதுகுறித்து மீண்டும் ஆய்வு செய்து இந்த அவைக்குத் தெரிவிக்கப்படும். எனினும் ஏலம் விடுவது என்பது பொதுவான நடைமுறை. தனி ஒருவருக்கு விட்டால்தான் சட்டப்படி குற்றம். ஏலம் எடுப்பவர்கள் எந்த நிலையில் எடுக்கிறார்கள் என்பது ஆங்காங்கு இருக்கிற ஏலதாரர்களிடத்திலே உள்ள நிலைமை. இன்னும் சொல்லப்போனால் 1405 ஆவது வருட வருவாய் ஆண்டில் 8500 ரூபாய்க்குப் போய் இருக்கிறது. இதுவே அதற்கு அடுத்த ஆண்டு 17,000 ரூபாய்க்குப் போய் இருக்கிறது. இந்த ஆண்டு 28,000 ரூபாய்க்குப் போய் இருக்கிறது. இதிலே இதுதான் நடைமுறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜனாப் அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்ட நான்கு குளங்களும் தேவஸ்தானதிற்குச் சொந்தமான குளங்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிப்படையாக கேள்வி கேட்டிருக்கிறார். ஆதியிலே அந்தக் குளங்கள் கட்டப்பட்டபோது கோயில்களுக்காக தேவஸ்தானங்களால் கட்டப்பட்ட இந்தக் குளங்களை என்ன நோக்கத்தின் அடிப்படையிலே கட்டினார்கள்? அதனுடைய நோக்கம் நிறைவேறி வருகிறதா? இந்தக் குளங்கள் கோயிலுக்குச் சொந்தமான குளங்கள் என்பது கூட அரசுக் குறிப்பில் இல்லாமல் போய் இருக்கிறதே, இதற்கு என்ன காரணம்? இந்த நோக்கங்கள் எல்லாம் நிறைவேறுவதற்கு அரசு முறையான நடவடிக்கையினை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 மார்ச் 20

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** ஏற்கெனவே இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். காரணம், இதுகாறும் பல்வேறு கோயில்களில் சொத்துப் பதிவேடுகள் முறையாகப் பேணப்படவில்லை. இந்த இரண்டு ஆண்டு காலத்திலே மட்டும் எஞ்சியிருக்கின்ற 1660 சொத்துப் பதிவேடுகள் உருவாக்கப்பட்டு, முறையாகக் கண்டறியப்பட்டு தற்போது அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. எனவேதான் எங்கெங்கு குளங்கள், தனியார் நிலங்கள், தனியார் ஆக்கிரமிப்புப் பகுதிகள், மனைப் பகுதிகள் ஆகியவை உள்ளனவோ அவை அனைத்தும் கண்டறியப்பட்டு இப்போது சொத்துப் பதிவேடுகளுக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இதன்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வெகுவிரைவில் அதற்கான தீர்வுகளை நீங்கள் காண்பீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 113, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**113—**

**திருக்கோயில் குளம் தூர்வாரும் பணி**

***15993—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமயிலாடி அருள்மிகு சுந்தரேஸ்வர சுவாமி திருக்கோயிலின் குளத்தைத் தூர்வாரி செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருமயிலாடி அருள்மிகு சுந்தரேஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு வருமானம் மிகக் குறைவாக வருவதனாலும், அப்பகுதிவாழ் மக்களிடம் நன்கொடை வசூல் செய்ய வாய்ப்பும் இல்லாததனாலும், இத்திருக்குளத்தைச் செப்பனிடத் தற்போது இயலாது.



1999 மார்ச் 20]

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு சுந்தரேஸ்வரர் சுவாமி திருக்கோயிலின் குளம் தூர்வாரி செப்பனிடப்படாததால் அங்கே இருக்கக்கூடிய சித்தேரிப் பகுதியிலே இருக்கக்கூடிய நஞ்சை நிலங்கள் எல்லாம் பாசனம் பெறாமலும், வடிகால் பெறாமலும் இருக்கின்றன. எனவே, அரசு மறுபரிசீலனை செய்து இதனைத் தூர்வாரி செப்பனிட நடவடிக்கை எடுக்குமா? மேலும் அந்தத் திருக்கோயிலுக்கு எவ்வளவு நஞ்சை, புஞ்சை நிலங்கள் இருக்கின்றன? ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முறபகல் 10-25

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே அந்தத் திருக்கோயிலுக்கு இருக்கிற சொத்துக்களைப் பார்த்தால், இந்த ஒரு குளத்தை மட்டுமல்ல, இன்னும் பல்வேறு கோயில்களில் இருக்கிற 100 குளங்களையும் சீர்திருத்தம் செய்துவிடலாம். 204.76 ஏக்கர் நன்செய் இருக்கிறது. 224.74 ஏக்கர் புன்செய் இருக்கிறது. 43.70 மனை நிலப் பகுதி இருக்கிறது. 5 கட்டடங்கள் இருக்கின்றன. ஆனால், நீண்டகாலமாக இந்த நிலங்களின் மூலம் வருவாய் எதுவும் வருவதில்லை. குறிப்பிட்டுச் சொல்லப் போனால், இந்தக் கோயில்களுக்கு வரவேண்டிய குத்தகையாகிய 13,243 குவிண்டால் நெல் நிலுவையில் இருக்கிறது. ஏற்கெனவே குத்தகைச் சட்டத்தில் கோயில்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்ற குறிப்பு இப்போது அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இது தொடர்பாக உயர்மட்டக் குழு கூடி, ஒரு நிலையான முடிவு எடுத்தால், இதற்கு நிரந்தரமான தீர்வு காண முடியும் என்று நான் நம்புகிறேன். எனினும், இந்த மனைப் பகுதியின் மூலம் கிடைக்கின்ற வாடகை வெகு குறைவாக இருக்கிறது. இந்த 43 மனை நிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு மனை (ground) க்கு ஒரு ஆண்டுக்கு 367 ரூபாய் கொடுக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு இதன் 5 கட்டடங்களுக்கு 360 ரூபாய் கொடுக்கிறார்கள். எனவே இதற்கு ஒரு வாரத்திற்குள் கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. பூ. இராமஜெயம்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல திருக்கோயில்களின் திருக்குளங்கள் செப்பனிடப்படுவதற்குப் போதிய நிதி ஆதாரம் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே, மாவட்ட பரவலாக்கும் திட்டம் அல்லது வேலை காப்புறுதித் திட்டம் மூலமாக இப்பணிகள் மேற்கொள்ளப்படுமா? அதோடு மயிலை சித்திரைக் குளத்தில் பணிகள் தொடங்கப்பட்டு இடையிலே

நிறுத்தப்பட்டிருக்கின்றன. அப்பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும், நானுமே சென்று சித்திரைக் குளத்தைப் பார்வையிட்டது அவருக்கு நினைவிருக்கும் என்று நான் கருதுகிறேன். அவரே அந்த வேலையைத் தொடர்ந்து நடத்தச்சொல்லி வற்புறுத்தி இருக்கலாம். எனினும், இது அவைக்குக் கொண்டுவரப்பட்ட காரணத்தினால், உடனடியாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்ட பரவலாக்கும் திட்டத்தின்படி சில குளங்களை எடுத்துக்கொள்ளச் சொல்லி நாங்களும் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறோம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கும்பகோணத்தில் இருக்கிற புகழ்பெற்ற மகாமகம் குளத்திற்கு அதிக அளவிலே செலவிட்டு, இப்போது அதனைச் செப்பனிடுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். அதேபோல், திருநாகேஸ்வரம் கோயில் பகுதியில் இருக்கிற வேறொரு குளத்திற்கு அவர்கள் தொகை ஒதுக்கி செப்பனிட்டிருக்கிறார்கள். அதுபோன்ற நிலைகளில் குறிப்பிடத்தக்க கோயில்களை எடுத்துக் கொண்டு ஊரகத் துறை மாவட்ட பரவலாக்கும் திட்டத்திலேயோ அல்லது வேலை காப்புறுதித் திட்டத்தின் வாயிலாகவோ செப்பனிடுவதற்கான முயற்சியையும் இந்த அரசு மேற்கொள்கிறது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாமகம் குளம் செப்பனிடப்பட்டது மாவட்ட பரவலாக்கும் திட்டத்தில் அல்ல. மக்களுடைய நன்கொடை மூலம் ஒரு பாதிதான் நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. மீதி நன்கொடை திரட்டி வருகிறார்கள். மாவட்ட பரவலாக்கும் திட்டத்தில் அது இணைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயிலாடி திருக்கோவிலுக்குச் சொந்தமான 204 ஏக்கர் நன்செய் மற்றும் 224 ஏக்கர் புன்செய் நிலம் இருப்பதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே இருக்கிற அந்த நிலங்களை சில தனி முதலாளிகளிடத்திலே குத்தகைக்கு விட்டு அவர்கள் இந்தக் கோயிலுக்கு சரியானபடி அளிக்காமல் இருந்திருக்கிறார்கள். அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதை வசூல் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கிற குத்தகைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 30-6-1999-க்குப் பின்னால்தான் வருவாய் நீதிமன்றங்கள் இயங்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. ஏற்கெனவே, அந்த வருவாய் நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டு, அந்த வருவாய் நீதிமன்றங்கள் இயங்குமானால் ஓரளவிற்கு இது சரி செய்யப்படும். இரண்டாவது, கோயில் நிலங்களுக்கு குத்தகை செலுத்துவதற்கு விதிவிலக்கு அளிக்கக்கூடிய சூழ்நிலை வந்தால்தான் இவற்றின்மீது முழுமையாக நடவடிக்கை எடுக்கமுடியும். இல்லாவிட்டால், உங்களுக்குத் தெரியும், திருவாரூர் கோயிலிலே இருக்கிற 896 ஏக்கர் நிலத்தில் இதுவரைக்கும் 13 ஆண்டுகளாக ஒரு படி நெல்கூட வரவில்லை. அதே போல் உறுப்பினர் சார்ந்திருக்கிற திருவெண்காட்டிலே இருக்கிற ஸ்வேதாரண்யயேசுவரர் கோயிலில் ஆயிரம் ஏக்கர் நிலம் இருந்தும், இதுவரைக்கும் ஒரு படி நெல்லும் வரவில்லை. இதுதான் நிலைமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 114, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**114—**

### நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை தொடங்குதல்

***17825—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை ஆரம்பிக்க என்ன நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்?

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உத்தேசிக்கப்பட்டுள்ள பண்டகசாலை செயல்படவுள்ள பகுதியின் மக்கட்தொகை 10,000- க்குக் குறையாமல் இருக்க வேண்டும். ஆரம்பகால உறுப்பினர்களின் எண்ணிக்கை 300-க்குக் குறையக் கூடாது. ஆரம்பகால பங்கு மூலதனமாக குறைந்தது ரூ. 25,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

உத்தேச வியாபாரம் ஒரு மாதத்திற்குக் குறைந்தது ரூ. 2.00 இலட்சம் இருக்க வேண்டும். தகுதி வாய்ந்த நபர் ஒருவர் பண்டகசாலையில் முக்கிய பொறுப்பு வகிக்க அல்லது செயலாளராக பணியமர்த்தப்படக்கூடிய தகுதிபெற்று இருக்க வேண்டும். உத்தேசிக்கப்பட்ட பண்டகசாலை அமையப்போகும் பகுதிகளில், அப்பகுதிகளை விவகார எல்லையாகக் கொண்டு மொத்த விற்பனைப் பண்டகசாலை அல்லது வேறு பிரதம கூட்டுறவுப் பண்டகசாலையின் இசைவு பெறப்பட வேண்டும். மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் இசைவும் பெறவேண்டும். அமைய உத்தேசிக்கப்பட்ட பண்டகசாலைக்கு நிலைத்திருக்கக் கூடிய தகுதி (viability) இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 115, திரு. டி. மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**115—**

**விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்**

***19378—திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டிலிருந்து ஓய்வூதியம் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.





**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாயில் மிகப் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கின்ற விவசாயத் தொழிலாளர்கள் இன்று நம்முடைய மாநிலத்தில் பல லட்சம் பேர் இருந்தும், அவர்களைப் பாதுகாக்கின்ற வகையில் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது மற்றும் சில மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதைப் போல் நம்முடைய மாநிலத்திலும் ஏழையெளிய மக்கள் என்ற முறையில் அவர்களைப் பாதுகாக்க அரசு இந்த ஓய்வூதியம் வழங்க இந்தத் திட்டத்தை வகுத்து செயல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைமுறையில் பொதுவாக 60 வயதை அடைந்தவர்களுக்கு, குழந்தைகள் இல்லாத நிலையிலே முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆனால் விவசாயிகளைப் பொறுத்தமட்டில் கோலப்பன் குழு அறிக்கையிலே 78-வது பக்கத்தில் வயது 60, குழந்தைகள் இருக்கிறார்களோ, இல்லையோ, அதைப்பற்றிக் கவலைப்படாமல் அவர்களுக்கு ரூ. 200/- ஓய்வூதியம் கொடுக்கவேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இதுபோன்று 43 பரிந்துரைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், குறைந்தபட்ச ஊதியம் சம்பந்தமாக அரசு மிகக் கவனம் செலுத்தி முதலிலே அதை அமல் நடத்துவதற்கான முயற்சியை எடுத்து வருகிறது. விரைவில் அதுகுறித்து இந்த அவையிலே அறிவிப்பு செய்யப்பட இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 116, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**116—**

**கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் இயக்குதல்**

***17298—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, எம். செட்டியப்பட்டி கைத்தறி கூட்டுறவுச் சங்கம் நீண்டகாலமாக இயங்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இச்சங்கத்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

[1999 மார்ச் 20

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) செட்டியப்பட்டி தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் தொழில் செய்ய ஆர்வம் காட்டாததால் இச்சங்கத்தை மீண்டும் இயக்க வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 117, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**117—**

**கைத்தறித் தொழிலாளர்களுக்குத் தனி வாரியம்**

***22350—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கைத்தறித் தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான குடும்பங்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன. பனைத் தொழிலாளர்களுக்கு வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. குடும்பத்தோடு நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய இலட்சக்கணக்கான குடும்பங்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகிறார்கள். தமிழக அரசு பல்வேறு சலுகைகளை அளித்தாலும் அந்த நெசவுத் தொழிலாளர்களின்மீது



1999 மார்ச் 20]

தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்கு வாரியம் அமைத்து, அதன் மூலமாக அந்தக் குடும்பங்கள் காப்பாற்றப்படவேண்டும். அப்படி ஒரு வாரியம் இருந்தால்தான் சரியாக இருக்குமென்று நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து அவர்களுடைய வாழ்வு வளம் பெற ஒரு வாரியம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை நெசவாளர்களுடைய நலனைப் பெரிதும் பாதுகாக்க இருக்கின்ற ஒரு துறையாகும். ஏற்கெனவே மாநில அரசு மத்திய அரசினுடைய உதவியோடு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், கைத்தறி நெசவாளர்கள் குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம், மைய சிக்கன நிதித் திட்டம், நெசவாளர்களுக்குத் தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம், கைத்தறி நெசவாளர்களுக்கு நல்வாழ்வு செறிவுத் திட்டம், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்களுக்கு குடும்ப ஓய்வூதியத் திட்டம், கூட்டுறவு நெசவாளர்களின் முதியோர் ஓய்வூதியத் திட்டம் ஆகியவை கூட்டுறவு அமைப்பின்கீழ் இயங்கிவரும் நெசவுத் தொழிலாளர்களுக்கும் துறையின் மூலம் பயன்தரத்தக்க வகையில் வழிவகையும் செய்யப்பட்டுள்ளது. எனவே கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் கைத்தறித் தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைக்க சாத்தியக்கூறுகளும், தேவையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 118, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**118—**

**பீங்கான் தொழிற்சாலை அமைத்தல்**

***9511—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 120, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**120—**

**தூண்டில் வளைவு அமைத்தல்**

***15601—திரு. மு. அப்பாவு :**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி கிராமத்தில் கடல் அரிப்பு ஏற்படுவதால் தூண்டில் வளைவு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கடலரிப்பால் பாதிக்கப்பட்ட உவரி கிராமத்தில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் தற்காலிக முறையில் மதுரை மண்டல பொதுப் பணித் துறை நீர் வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீனவர்கள் கோரும் தூண்டில் வளைவு என்ற அமைப்பை இவ்வூரில் அமைக்க, சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாகக் கடல் அரிப்பு இருந்த காலங்களில், பெருந்தலைவர் காமராஜருடைய ஆட்சிக்காலத்தில் அங்கே ஒரு தடுப்புச் சுவர் கட்டப்பட்டு அது தற்போது பழுதடைந்த காரணத்தினால்தான் மீண்டும் அங்கு கடலரிப்பு ஏற்பட்டு மீனவர் குடியிருப்புகளெல்லாம் பாதிக்கப்படுகின்ற அளவில் இருக்கின்றன. கடந்த ஆண்டும் நம்முடைய நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவரும் சேரன்மகாதேவி கோட்டாட்சியரும் நானும் இரண்டு முறை சென்று பார்வையிட்டபோது தற்காலிகமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் எந்த நடவடிக்கையும் இல்லை. தற்போது, பொதுப் பணித் துறையிலேயிருந்து 197 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் எனக்கு வந்திருக்கின்றது. ஆகவே, அந்த அடிப்படையில் 197 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் விரைவாக அங்கே தூண்டில் வளைவு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதே நிலையில் கூட்டப்புளி, பெருமணல், கூத்தங்குளி, இடிந்தகரை, கூட்டப்பனை, கூடுதாளை, பெரியதாளை ஆகிய கடற்கரை கிராமங்களிலும் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துகின்ற வகையில் அங்கே கடலரிப்பு, கடல் கொந்தளிப்பு ஏற்படுகின்றது. இந்த அனைத்து கிராமங்களிலும் விரைவிலேயே தூண்டில் வளைவு கட்டித் தருவீர்களா? எவ்வளவு காலங்களுக்குள் கட்டித் தருவீர்கள் என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



1999 மார்ச் 20]

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே கன்னியாகுமரியிலிருந்து தமிழகத்தினுடைய வட எல்லை வரையிலேயும் கடலோரப் பகுதிகளிலே பல இடங்களிலே இப்படி கடலரிப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இவற்றைத் தடுக்க அப்போதைக்கப்போது சில நேரங்களிலே நாம் பணி செய்கிறோம். இருந்தாலும் மீண்டும் அந்த அரிப்பு ஏற்பட்டுவிடுகிறது. எனவே, நிரந்தரமாகப் பரிகாரம் காண வேண்டும் என்று இந்த அரசு ஒரு பெரும் திட்டத்தைத் தீட்டியிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து ஒரு பெரும் தொகையை எதிர்பார்த்து, மத்திய அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறது. விரைவில் இந்தத் திட்டம் குறித்து அவைக்கு அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை அளித்திருக்கின்றார்கள். 26.10.1997 அன்று 2 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு ஆயிரம் பிளாஸ்டிக் மணல் மூட்டைகள் அங்கே அடுக்கப்பட்டு தடுப்புப் பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே எங்களுக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 மார்ச் 20

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 இலட்சம் ரூபாய் செலவில் செய்ததாகச் சொல்வதை நான் ஒருபோதும் அங்கே பார்வையிட்டதில்லை. பலமுறை நான் அங்கே சென்றிருக்கிறேன். அப்போது வட்டாட்சியர் அவர்களிடம் நானே எங்கள் பகுதியில் உள்ள ஒருசிலரிடம் சொல்லி ஆயிரம் சாக்குகளைக் கொடுத்து அதை மணல் மூட்டைகளாக, தற்காலிகமாக அமைத்து இருக்கிறார்களே தவிர, 2 இலட்சம் ரூபாய்க்கான பணி அங்கே ஒருபோதும் நடைபெறவில்லை என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தூண்டில் வளைவுக்கு உவரிக்கு மட்டும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் நான் பல முறை சொன்னதன் பயனாக, தமிழகம் முழுவதும் செய்தாலும் என்னுடைய தொகுதியில் முன்னுரிமை கொடுத்து உவரிக்கு மதிப்பீடு தயார் செய்து தந்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 8 கிராமங்களுக்கும் விரைவில் மதிப்பீடு தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பி விரைவிலேயே தூண்டில் வளைவு 8 கிராமங்களுக்கும் அமைத்துத் தருவீர்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *26-10-1997* அன்று நடவடிக்கை எடுத்திருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆனால், இவர் தரும் தகவல் சரியாக இருந்து, நான் தந்த தகவல் தவறாக இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், *29-10-1989* ஆம் தேதியிட்ட அரசாணை நிலை எண் *575*, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் (பணி-ஏ) துறை, ஆணைப்படி கடல் அரிப்பு தடுப்புப் பணிகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, இதுபோன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்திலேயுள்ள எல்லா பகுதிகளிலேயும், கடல் அரிப்புகளால் எங்கேயெல்லாம் பாதிக்கப்படுகின்றது என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதாக நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த மாத வாக்கில் நெல்லை மாவட்டத்திற்கு வருகை தந்து அந்தக் கடலரிப்புகளைப் பார்வையிடுவதாகக் கூறியிருக்கிறார்கள். மேலும், இந்த ஆய்வுகளை நடத்தி, நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு தகுந்த முறையில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:-ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 3. அரசினர் தீர்மானம்

### உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் மீது, வரவு-செலவுத் திட்ட அறிக்கையின் நகலைக் கிழித்து, கறுப்புத்துணி காண்பித்து, கோஷமிட்டதற்காக நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து....

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், ஒழுங்கு நடவடிக்கை. *17-3-1999* அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை அளிக்கவிருந்த நேரத்தில், அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் 4 பேர், குறிப்பாக—திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி. ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி மற்றும் சுயேட்சை உறுப்பினர் திரு. அ. வெங்கடாசலம் ஆகியோர் கோஷம் எழுப்பி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையை வாசிக்க முடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள், திரு. தாமரைக்கனி அவர்கள் எழுந்தவுடனேயே 'உங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து நீங்கள் வெளிநடப்புச் செய்யலாம்' என்று நான் சொன்னேன். நான் இதைச் சொன்னதற்குக் காரணமே அவர்களைக் காப்பாற்றுவதற்குத்தான். காரணம், நம்முடைய பேரவை விதியின்படி பேரவைத் தலைவர் ஓர் உறுப்பினரை முதல் தடவை வெளியேற்றினால் ஒரு நாள், இரண்டாவது முறை வெளியேற்றினால் அந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவ்வுறுப்பினர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முடியாது.ஆகவே, அவர்களை நான் வெளியேற்றாமல், அவர்களாகவே வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து, ஜனநாயக முறைப்படி உங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து, நீங்கள் வெளிநடப்புச் செய்யுங்கள் என்று சொன்னேன். தாமரைக்கனிகூட ஓரளவுக்கு இசைவு தந்தார். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள், "நீங்கள் என்ன சொல்வது, நான் என்ன கேட்பது" என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், இங்கே வரவு-செலவுத் திட்டம் குறித்த காகிதங்களைக் கிழித்து எறிந்து, ஒரு கறுப்புத் துணியையும் காட்டிவிட்டு, வெளியேற மறுத்து, அதற்குப் பிறகு காவலர்களைவிட்டு நான் வெளியேற்றினேன்.

நான் ஏற்கெனவே பேரவைத் தலைவராகப் பதவியேற்ற காலத்திலேயே சொல்லியிருக்கின்றேன். எதிர்க்கட்சிகளுக்கு ஒரு உரிமை இருக்கிறது, அது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று; ஆளுநர் உரையாக இருந்தாலும் சரி, வரவு-செலவுத் திட்டமாக இருந்தாலும் சரி, எதிர்ப்பை கண்ணியமான முறையிலே தெரிவித்து வெளியேறுவது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மரபாகும் ஆகவே, அந்த முறையைத்தான் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் பலமுறை வலியுறுத்தி வந்திருக்கின்றேன்.

*முற்பகல் 10-45*

குறிப்பாக 18-3-1998 அன்று ஆளுநர் உரையின்போது திரு. சுந்தரம் அவர்களும், அவரோடு திரு. கருப்பசாமி அவர்களும் கறுப்புத் துணியையும், பதாகையையும் காட்டினார்கள். நான் இரண்டு நாள் கழித்து அவை கூடிய நேரத்திலே, இது தண்டனைக்குரிய ஒரு குற்றம் என்று சொல்லி கண்டித்து விட்டுவிட்டேன். அதன்பிறகு தொடர்ந்து 28-11-1998 அன்று மீண்டும் திரு. சுந்தரம் அவர்கள் ஒரு பதாகையைக் காட்டினார்கள். அன்று அதை ஒரு குற்றமாகக் கருதி, உரிமைக் குழுவிற்கு அந்தப் பிரச்சினை அனுப்பப்பட்டது. அதுபற்றி உரிமைக் குழுவின் தீர்ப்பு வருவதற்கு முன்னால் 17-3-1999 அன்று மிக அநாகரீகமான முறையில், வரவு-செலவுத் திட்டத்திற்கு உரிய குறிப்புகளைக் கிழித்தெறிந்து, கறுப்புத் துணியையும் காட்டியிருக்கின்றார்கள். அவருக்கு அவருடைய கட்சியின் சார்பில் செய்ய வேண்டிய சில கடமைகள் இருக்கலாம். ஆனால், பேரவைத் தலைவர் என்ற முறையிலே எனக்கு ஒரு கடமை, நீங்கள் எல்லோரும் கொடுத்த கடமை, இந்த அவையின் மரபுகளைக் காப்பாற்றுவது. ஆகவே, இந்த முறை இதை நேரடியாக நான் பார்த்த காரணத்தால், நானே தண்டிக்க, தண்டனை கொடுக்கப் போகின்றேன்.

அன்று திரு. தாமரைக்கனி அவர்களும், மற்ற இருவரும் தங்கள் இருக்கையை விட்டு எழுந்து அனுமதியில்லாமல் இங்கே, பேரவையிலே, கோஷம் எழுப்பினார்கள். அதுவும் தண்டனைக்குரியது என்றாலும், அவர்களை, எச்சரித்து மீண்டும் இப்படிச் செய்தால் நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லி, எச்சரிக்கையோடு விட்டு விடுகின்றேன்.

திரு. சுந்தரம் அவர்கள், மூன்றாவது முறையாக இந்தக் குற்றத்தைச் செய்கின்ற காரணத்தால் அவருக்கு உரிய தண்டனை கொடுக்க வேண்டுமென்று கருதி, அதற்குண்டான தீர்மானத்தை மொழியுமாறு பேரவை முன்னவரவர்களை அழைக்கின்றேன்.





***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,*

*"17-3-1999 அன்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 1999-2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளிக்க முற்பட்டபோது, நிதிநிலை அறிக்கையின் நகலைக் கிழித்தெறிந்து, கறுப்புத் துணி காண்பித்து, பேரவையில் கோஷமிட்ட குற்றத்திற்காக திரு பி.ஆர். சுந்தரம் அவர்களைப் பேரவையின் நடவடிக்கைகளிலிருந்து ஒரு வார காலத்திற்கு நீக்கி வைக்க வேண்டும்"*

*என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றது*

*ஏற்போர் 'ஆம்' என்க.* *(ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.* *(இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் அவையைவிட்டு வெளியேற வேண்டும்.*

**திரு. இரா. தாமரைக்கனி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் அவையைவிட்டு வெளியேற வேண்டும். திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள். நான் உத்தரவு சொல்லி அவர் வெளியே போன பிறகு நீங்கள் ஏதாவது சொல்லுங்கள், நான் கேட்கிறேன்.*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *தலைவரவர்களே, வெளியே போகிறேன். ஆனால் அதற்கு முன்னால்.. (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். அவரைப் பேச விடுங்கள்.

*முற்பகல் 10-50*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* எனக்குத் தெரிந்தவரை ஒரு கறுப்புக்கொடி, ஒரு பதாகை எடுத்துக் காண்பிப்பதோ இந்தக் கூட்டத்தொடரில் இதுதான் முதல். நான் சென்ற ஆண்டு கவர்னர் உரையின்போது பதாகை காட்டியது முதலில். அதற்குப் பிறகு நீங்கள் இப்போது குறிப்பிட்டதைப் போல இரண்டாவது முறை. அது இந்தக் கூட்டத் தொடரில் அல்ல. ஆனால் எனக்குத் தெரிந்ததை...

[1999 மார்ச் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தக் கூட்டத் தொடர் என்பது முக்கியம் அல்ல. மூன்றாவது தடவையாக நான் உங்களை எச்சரித்தேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மூன்றாவது தடவை என்றால், தற்போது நடக்கிறது முதல் கூட்டத் தொடர் இது. இந்த ஆண்டுக்கான, 1999-2000 ஆண்டுக்கான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் பேசுவதற்கே இடம் இல்லை. தீர்மானம் நிறைவேறியாகிவிட்டது. நீங்கள் வெளியே போங்கள். (குறுக்கீடு) சொல்லியாகிவிட்டது. நீங்கள் வெளியில் போவதைத் தவிர வேறு வழியில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 1999-2000 ஆண்டின் முதல் கூட்டத் தொடர் இது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் சொல்லியாகிவிட்டது. ஒரு வாரத்திற்கு நீங்கள் அவைக்கு வரக்கூடாது நீங்கள் போகலாம். (குறுக்கீடு) தீர்மானம் நிறைவேறியாகிவிட்டது. தயவுசெய்து வெளியில் போங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தெளிவாகச் சொல்கிறேன், உறுப்பினர் வெளியே போகவேண்டும்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இந்தப் பேரவையில் அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து அது நிறைவேற்றப்பட்ட பிறகு அதைப்பற்றி விவாதிக்கக்கூடாது என்பதுதான் நம்முடைய அவை மரபு. அதை மீறி விவாதிப்பதற்குத் தாங்கள் அனுமதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குத்தான் உறுப்பினருக்கு அன்றைக்கே நான் சொன்னேன். அன்றைக்கு வீராப்பாக பதில் சொன்னீர்கள். நான் என்ன சொன்னேன் என்றால், ஜனநாயக மரபுப்படி நீங்கள் வெளியேறலாம், நீங்களாக வெளியேறினால் நான் வெளியேற்றியதாக இருக்காது என்று சொன்னேன். உங்களுடைய கட்சித் தலைவர்கூட அதை ஏற்றுக்கொண்டு வெளியேறினார். நீங்கள் அங்கே நின்றுகொண்டு, 'நீங்கள் என்ன சொல்வது, நான் என்ன கேட்பது' என்று சொன்னீர்கள். இப்போது தீர்மானத்தை நிறைவேற்றியாகிவிட்டது. இதில் நீங்கள் பேசுவதற்கு ஒன்றுமே இல்லை. நீங்கள் உடனே அவையைவிட்டு வெளியேறவேண்டும்.

(திரு. பி. ஆர். சுந்தரம் அவையை விட்டு வெளியேறினார்.)



1999 மார்ச் 20]

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் விதிமுறைப்படி சபையை நடத்தவேண்டுமென்று நினைக்கிறீர்கள். அந்த உணர்வை நாங்கள் எல்லாம் மதிக்கிறோம். ஆனால் நாடாளுமன்றத்தைப் பார்த்தால், சபாநாயகர் அவர்களின் இருக்கைக்கு முன்னே வந்து தினமும் gheroe பண்ணுகிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நான் பொறுப்பு இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர்கள் எவ்வளவோ பெருந்தன்மையாக விட்டுவிடுகிறார்கள். நீங்களும் அந்தமாதிரி பெருந்தன்மையோடு, தாய்மை உள்ளத்தோடு இப்போது அளித்த தண்டனையைக் குறைக்க மறுபரிசீலனை செய்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் உட்காருங்கள், நீங்கள் எங்கேயோ ரொம்ப நாளாய் ஒரு தாய் உள்ளத்தைத் தேடுகிறீர்கள் உங்களுக்கு அது கிடைக்கமாட்டேன் என்கிறது. (சிரிப்பு) ஆனால் ஒன்றைச் சொல்கிறேன் கேளுங்கள். இதிலே அவரைத் தண்டிக்க வேண்டுமென்று எனக்குக் கட்டாயம் ஒன்றும் கிடையாது. விதிகளின்படிதான் நான் அவையை நடத்துகிறேன் என்று சொல்கிறீர்கள். அதற்கு நன்றி. தான் செய்தது தவறு என்று அவர் சொன்னார் என்றால் நான் இப்போதுகூட தண்டனையைக் குறைக்கத் தயாராக இருக்கிறேன். அவரை என் அறையில் வந்து பார்க்கச் சொல்லுங்கள். அன்றைக்கு நான் சொல்கிறபோதே, உங்கள் நன்மைக்காகத்தான் சொன்னேன். ஜனநாயக முறைப்படி நீங்கள் வெளியேறுங்கள் என்று சொன்னேன். 'நீங்கள் என்ன சொல்வது நான் என்ன கேட்பது' என்று அவர் சொன்னார். இதுபோன்று அவர் நடந்துகொண்டது மூன்றாவது முறை. அவர் என்னிடம் நேரில் வருத்தம் தெரிவித்தால் அதை நான் மறுபரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் புது சட்டமன்ற உறுப்பினர், ஆர்வத்தின் காரணமாக நடந்திருக்கலாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சரியாக அவருக்கு வழிகாட்டியிருக்கவேண்டும். நீங்கள் செய்யாததை அவர் செய்ய நீங்கள் அனுமதிக்கலாமா?

**திரு. இரா. தாமரைக்கனி:** இதையெல்லாம் நீங்கள் பெரிதாக நினைக்காமல் இருக்கவேண்டும். இன்னும் ஒன்று, நாடாளுமன்ற சபாநாயகர் திரு. பாலயோகி அவர்களை விட நீங்கள் ரொம்ப அனுபவம் உள்ளவர். அவர் புதிய சபாநாயகர்; நாங்கள் உங்கள் பிள்ளைகள் மாதிரி. நாங்கள் என்ன செய்தாலும் அதை நீங்கள்

[திரு. இரா. தாமரைக்கனி] [1999 மார்ச் 20

பொருட்படுத்தாமல் பெருந்தன்மையோடு—பழையபடி சொல்கிறேன்—தாய்மை உள்ளத்தோடு மறுபரிசீலனை செய்யவேண்டும், தொகுதியில் இவரைப்பற்றி என்ன நினைப்பார்கள்? தொகுதி மக்களுக்குப் பணியாற்ற M.L.A. போய் இருக்கிறார். தொகுதியைப் பற்றிப் பேசுவார் என்று நினைத்துக் கொண்டு இருப்பார்கள். மக்களுடைய பிரதிநிதி அவர். அவரைப் பணியாற்ற நீங்கள் அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் ஐந்தாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு சட்ட விதி எல்லாம் நன்றாகத் தெரியும். நீங்களாக வெளியே போங்கள் என்று நான் சொன்னவுடன் ஒழுங்காக வெளியில் சென்றீர்கள். அவருக்கும் அந்தக் கருத்துரையைச் சொல்லி அவரையும் அழைத்துக்கொண்டுபோய் இருக்கவேண்டியதுதானே? ஆனால் அவர் பக்கத்தில் நீங்கள் நிற்க, அவர் ஒரு பேருரை ஆற்ற, அதற்குப் பிறகு நீங்கள் சத்தம் போட, நான் எப்படி அவையின் மாண்பைக் காப்பாற்றுவது? (குறுக்கீடு) அவர் வந்து என்னைப் பார்த்து மன்னிப்புக் கேட்கச் சொல்லுங்கள். நான் அதைப் பற்றிப் பரிசீலனை செய்கிறேன்.

*முற்பகல் 10-55*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள், தான் செய்ததைத் தவறு என்று இந்த அவையிலேயே இப்போது ஒத்துக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். அவர் என்ன சொன்னார் என்றால், இந்த ஆண்டு முதல் தடவையாக நடந்த குற்றம் என்பதை அவர் மறைமுகமாக ஒத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, அவரை இன்றைக்கு மட்டும் நீக்கிவைத்துவிட்டு, ஒரு வாரம் என்பதை ஒரு நாளாகக் குறைக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை நீங்கள் சொல்கிற மாதிரி அவர் ஒத்துக்கொள்ளவில்லை. இந்த வருடத்திற்கு இதுதான் முதல் குற்றம் என்கிறார். நான், வருடத்திற்கு வருடம் இத்தனை குற்றம் என்று அனுமதிக்க முடியாது. ஆகையால், அவர் வந்து என்னை பார்க்கட்டும். நான் அந்த அனுமதியை அவருக்குக் கொடுக்கிறேன். அவர் வந்து என்னைப் பார்த்து வருத்தம் தெரிவிக்கட்டும். நான் தண்டனையைக் குறைக்கிறேன். (குறுக்கீடு) திரு. அழகிரி, உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..



1999 மார்ச் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் சொல்லிவிட்டேனே, அவர் வந்து என்னைப் பார்க்கட்டும், நீங்கள் யாரும் பேசவேண்டாம்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் செய்தது தவறுதான். தண்டனை கொடுப்பதற்கு பேரவைத் தலைவருக்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. நீங்கள் அவையை முறையாக நடத்த வேண்டியவர்தான். அதிலே மாற்றுக் கருத்து கிடையாது. இருந்தாலும்கூட, ஒரு சிறிய சலுகையை நீங்கள் கொடுக்கலாம். அவர் தப்பு செய்திருக்கிறார். பழைய சபைக்கும், இந்தச் சபைக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. பழைய சபையில்தான் இந்த மாதிரியெல்லாம் செய்தார்கள். ஆனால், நம்முடைய சபையில், ஜனநாயக மரபுமிக்க பேரவைத் தலைவர் இருக்கிறீர்கள். ஒரு மதிப்பு கொடுத்து, ஒரேயொரு முறை அவருக்கு வாய்ப்புக் கொடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினருக்குச் சங்கடம் வராமல் ஒருமுறை வாய்ப்புக் கொடுத்து, நாம் அவர்கள் மாதிரி இல்லை. நமக்கும் அவர்களுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறதென்பதை நீங்கள் வெளியுலகுக்கு உணர்த்துவது நன்றாக இருக்கும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், நான் என்ன சொல்கிறேன் என்றால், எனக்கு 'மன்னிப்பு' என்கிற பெரிய வார்த்தையெல்லாம் வேண்டாம். அவர் என்னுடைய அறைக்கு வருவதற்கு அனுமதி கொடுக்கிறேனே. அதாவது, தாமரைக்கனிக்கு சில சலுகைகள் உண்டு. இந்த சட்ட சபைக்கே வரக்கூடாது என்று நான் உத்தரவு போட்டாலும் அவர் என்னுடைய அறையிலே வந்து பார்த்துக் கொண்டிருப்பார். நான் அப்போது நடவடிக்கை எடுப்பதில்லை. அதேமாதிரி, சுந்தரம் அவர்களும் என்னுடைய அறையில் வந்து பார்த்து வருத்தம் தெரிவிக்கட்டும், நான் தண்டனையைக் குறைக்கிறேன். இப்போது அடுத்த பிரச்சினைக்குப் போகலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆண்டு குற்றம், இரண்டாம் ஆண்டு குற்றம் என்று சொல்லி இப்போது தண்டனை கொடுப்பது சரியில்லை. இப்போது செய்ததை நீங்கள் அப்போதே செய்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அனுமதியில்லாமல் எழுந்து நின்று சண்டைக்கு வருகிறமாதிரி பேசுகிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன சரியாக இருக்காது? அதைச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முந்தைய ஆண்டு குற்றம், இரண்டாம் ஆண்டு குற்றம், அதற்கு முந்தைய ஆண்டு குற்றம் என்று கணக்கெடுத்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தண்டனையை இப்போது சேர்த்துக் கொடுப்பது சரியான முறையாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சேர்த்துக் கொடுக்கவில்லை. நீங்கள் விவரம் இல்லாமல் பேசுகிறீர்கள். இன்றைக்குத்தான் முதல் சந்தர்ப்பம். வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பித்ததற்கு அடுத்த நாள் மாண்புமிகு உறுப்பினர் ஆல்டன் இறந்த நேரத்திலே இதைக் கொண்டுவரக் கூடாது இறந்தவருக்கு மரியாதை இல்லை. இதுதான் முதல் வாய்ப்பு. கொண்டு வருகிறேன். எனக்கு நீங்கள் சட்டம் சொல்லித்தர வேண்டாம், உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, எல்லோரும் வரிசையாக எழுந்து நின்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள? நான் ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டேன், அவர் வருத்தம் தெரிவித்தால் நான் தண்டனையைக் குறைக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன மாதிரி, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் இந்த அவையில நடந்துகொண்ட விதம் அனைத்து உறுப்பினர்களும் அறிந்ததே; கட்சித் தலைவருடைய கட்டுப்பாட்டுக்குள் உறுப்பினர்கள் இருக்கவேண்டும் நான ஒன்று சொன்னால் எனக்குப் பின்னால் இருக்கும் என் கட்சி உறுப்பினர்கள் கட்டுப்படவேண்டும் என்பதுதான் கட்சியினுடைய விதி. அவ்வளவு கூச்சல் குழப்பத்திற்கு இடையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள கையை உயர்த்தினார்கள். உடனே அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் வேறு எந்தக் குரலும் கிளப்பவில்லை என்பதை அனைவரும் அறிவார்கள். இருந்தாலும், தமிழ்நாட்டினுடைய வரவு-செலவுத் திட்டத்தை தமிழ்நாட்டு மக்கள் உன்னிப்பாக, கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருக்கிற நேரத்திலே, அரசியல் நோக்கத்திற்காக இத்தகைய கூச்சல் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள் என்பதை நாங்கள் எல்லாம் அறிந்தோம். அதை இல்லை என்று மறுக்கவில்லை. இருந்தாலும், ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தார்மீகக் கடமையைச் செய்தாக வேண்டும். நான், சட்டமன்றத்தில் என்னுடைய ஒரு கேள்வி வந்தாலே பெரியதாக நினைக்கிறேன். கேள்வி போட்டால் பதில் வருகிறது. அதிகாரிகள் செயல்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினரும் அறிவார். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுபோன்று ஒருநாள்



தண்டனை என்பதே அவருக்குப் பெரிய தண்டனை. நாங்கள் உங்களுடைய உரிமையிலே தலையிடவில்லை. உங்களுடைய அதிகாரத்திலே நாங்கள் தலையிடவில்லை. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், கேளுங்கள். இந்த அவையின் மரபு பற்றி எல்லாம் பேசுகிறீர்கள், பேசினீர்கள். நீங்கள் சொல்ல மறந்தது ஒன்று. ஆளுங்கட்சி சார்பில் 165 பேர். தோழமைக்கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் 40 பேர்; நீங்கள் எல்லாம் தோழமைக் கட்சிகள்; யாரும் எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை, அந்தச் சம்பவம் நடந்ததுபற்றி. இதுதான் இந்த அவையின் மரபு அமைதியாக இருந்தீர்கள் எல்லோரும். ஆகையினால், இந்த அவையில மரபை எல்லோரும் காப்பாற்றுங்கள். தோழமைக் கட்சி காப்பாற்றினால் மட்டும் போதாது. எதிர்க்கட்சியும் காப்பாற்ற வேண்டும் இது முதல் முறை என்கிறார். ஆகையால் என்னுடைய அறைக்கு வந்து பார்த்து வருத்தம் தெரிவிப்பார் என்றால், இந்தத் தண்டனையை நான் குறைப்பேன். இனிமேல் பேச்சுக்கே இடமில்லை.

முற்பகல் 11-00

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னமாதிரி, நீங்கள் தண்டனையைக் குறைத்து இன்றைக்கு ஒரு நாளைக்கு என்று செய்யுங்கள். ஏற்கெனவே ரொம்ப tension ஆக இருந்தீர்கள்; இப்போது பாதி குறைந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு ஒன்றும் tension கிடையாது; (குறுக்கீடு) எனக்கு ஒன்றும் tension கிடையாது, எனக்கு வருத்தம்தான். ஓர் உறுப்பினரை வெளியேற்றுகிற வருத்தம்தான். அந்த வருத்தம்தானேயொழிய எனக்கு tension கிடையாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஏற்கெனவே நீங்கள் சட்டசபை கூடுவதற்கு முன்னால் ஓர் அறிக்கை விட்டிருந்தீர்கள். பத்திரிகை பேட்டியெல்லாம் கொடுத்து இருந்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இங்கே வந்து விஷமத்தனமாகப் பேசுவீர்கள் என்று தெரியும். நான் பத்திரிகை பேட்டி கொடுக்கவில்லை. பத்திரிகைக்காரர்கள் என்னை வந்து பார்த்தார்கள். அப்படி ... என்று சொல்ல முடியாது.

[1999 மார்ச் 20

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைக் கேளுங்கள். அப்போது பத்திரிகையாளர்கள் என்னைக் கேட்டார்கள், "ஏதாவது எதிர்பார்க்கிறீர்களா" என்று. நான் "எதிர்பார்க்கவில்லை" என்று சொன்னேன். "கட்டாயம் நடக்கும் என்று தகவல் இருக்கிறது" என்றார்கள். "அப்படி நடந்தால் அதைச் சமாளிக்க என்னால் முடியும்" என்று சொன்னேன். நான் எந்தப் பத்திரிகைக்காரர்களையும் தேடிப்போய் பேட்டி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் நினைப்பது தவறு. பத்திரிகைக்காரர்கள் வந்து என்னைப் பார்க்க வேண்டுமென்று சொன்னபோது நான் பார்க்க முடியாது என்று சொல்ல முடியாது. ஆகையால், அவர்கள் கேட்ட கேள்விக்கு "எதுவும் எதிர்பார்க்கவில்லை" என்றுகூடச் சொன்னேன். "இல்லை, எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது, கட்டாயம் என்னமோ செய்யப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள்" என்று சொன்னார்கள். "அப்படிச் செய்தால் நான் சமாளிப்பேன்" என்று அதைத்தான் சொன்னேன். நான் இப்போது சொல்லிவிட்டேன், திரும்ப நீங்கள் பேசிப் பிரயோஜனம் இல்லை. அவர் இங்குதான் இருக்கிறார், வந்து வருத்தம் தெரிவிக்கட்டும், நான் தண்டனையைக் குறைக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய முன்னவர் ஒரு தீர்மானம் கொண்டு வந்த பிறகும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேட்டுக்கொண்ட தற்கிணங்க தங்களுடைய அறையிலே வந்து பார்த்து வருத்தம் தெரிவித்தால் நீங்கள் பரிசீலிப்பதாகச் சொன்னதற்குப் பிறகும், தொடர்ந்து இதிலே விவாதம் நடத்துவது தேவையற்றது. எனவே, அடுத்த அலுவலுக்குச் செல்லும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு) தாமரைக்கனி அடிக்கடி எழுந்து நிற்காதீர்கள். (குறுக்கீடு) திரு. ஐ. கணேசன், சொல்லுங்கள், இனிமேல் பேச்சு கிடையாது என்று சொன்னேன், உங்கள் கட்சி சார்பிலே கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்றீர்கள், சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையிலே கூறியதுபோல இந்தத் தண்டனையை ஒருநாள் என்று குறைத்து தயவுசெய்து இந்த அவையிலே அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு...



1999 மார்ச் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதி காக்க வேண்டும். நீங்கள் சொன்னதை நான் கேட்டுக்கொண்டேன்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுக்கவில்லை. நான் அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்பு கொடுக்கவில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவையை நடத்துவதற்கு எனக்குத் தெரியும். உங்கள் கட்சித் தலைவர் கேட்டிருந்தால் நான் அனுமதி கொடுத்திருப்பேன். நீங்கள் உட்காருங்கள், தேவையில்லாமல் பேசாதீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள், இனிமேல் கேட்கத் தயாராக இல்லை, இனிமேல் எதையும் சொல்லிப் பிரயோஜனம் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர், அதற்கு அடுத்த கட்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியாகிவிட்டது. என்னை வந்து பார்க்க வேண்டும் என்று சொல்லிவிட்டேன். வந்து பார்த்தார் என்றால் செய்வேன்.

அடுத்து, தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள்...

**திரு. இரா. தாமரைக்கனி:** தண்டனை கொடுத்ததற்கு மனம் வருந்தப்பட்டு அதற்கு ஆட்சேபணை தெரிவித்து வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. சொ. கருப்பசாமி ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. அ. வெங்கடாசலம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் போவதாக இருந்தால் போங்கள், அவையின் நேரத்தை வீணாக்காதீர்கள். திரு. கணேசன், பேராசிரியர் தீரன், திரு. ச. அழகிரி....

**திரு. அ. வெங்கடாசலம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, நான் வேறு subject-ல் பேசிக்கொண்டு இருக்கிறேன், நீங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

[பேரவைத் தலைவர்] [1999 மார்ச் 20

உட்காருங்கள். நான் உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்கவில்லை, வெளியேற்றுவேன். நான் உங்களை வெளியேற்றினால், கூட்டத் தொடர் முழுவதும் வெளியேற்றுவேன். உங்களுக்கு நான் அனுமதி கொடுக்க முடியாது, உட்காருங்கள்.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

**தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருத்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன், திரு. டி. மணி, திரு. ஜி. பழனிசாமி, டாக்டர் கிருஷ்ணசாமி, திரு. ஐ. கணேசன், பேராசிரியர் தீரன், திரு. அழகிரி, திரு. அமரமூர்த்தி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. அப்பாவு, திரு. லா. சந்தானம், திரு. ஜி.கே. மணி, திரு. கே. சுப்பராயன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். முதலில் திரு. ச. அழகிரி.

## 3. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

**உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் மீது வரவு செலவுத் திட்ட அறிக்கையின் நகலைக் கிழித்து, கருப்புத் துணி காண்பித்து கோஷமிட்டதற்காக நடவடிக்கை**—தொடர்ச்சி.

**திரு. அ. வெங்கடாசலம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்க முடியாது. உட்காருங்கள். நீங்கள உட்காரவில்லை என்றால் நான் உங்களை வெளியேற்றுவேன், கூட்டத் தொடருக்கே அது வெளியேற்றமாகி விடும். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்க முடியாது, உட்காருங்கள்.

**திரு. அ. வெங்கடாசலம்:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1999 மார்ச் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருநாவுக்கரசு குறித்து அநாவசியமாகப் பேசவேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் வெங்கடாசலம் சொல்வது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. நீங்கள் உட்காருங்கள், இல்லையென்றால் நான் வெளியேற்றவா? (குறுக்கீடு) திரு. வெங்கடாசலம் அவர்களை வெளியேற்றவும். இனிமேல் இக்கூட்டத் தொடருக்கு வர முடியாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள் என்று சொன்னால் உட்கார மாட்டேன் என்கிறீர்கள். இனிமேல் பேசக் கூடாது. நீங்கள் உட்காருங்கள், உங்களுக்கு அனுமதி கிடையாது. உங்களுக்கு அனுமதி கிடையாது.

(திரு. அ. வெங்கடாசலம் தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்)

நீங்கள் உட்காரவில்லை என்றால் இந்தக் கூட்டத் தொடர் முழுவதற்கும் வர முடியாது என்று உத்தரவிடுவேன், உட்காருங்கள், உட்காரவில்லை என்றால் நான் வெளியேற்றுவேன்.

**திரு. அ. வெங்கடாசலம்:** ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. வெங்கடாசலத்தை அவையிலிருந்து வெளியேற்ற உத்தரவிடுகிறேன்.

(திரு. அ. வெங்கடாசலம் பேரவையின் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)

*முற்பகல் 11-05*

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

**தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருத்தல்**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக ஆசிரியர் பயிற்சி பயின்ற மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். இரண்டு ஆண்டுகள் பயிற்சி முடிந்து, தேர்வு எழுதி, ஆசிரியர் பயிற்சிப் பட்டய தேர்வுச் சான்றிதழ் பெற இயலாதவர்கள் 15,270 பேரும், இரண்டு ஆண்டுகள் பயிற்சி முடிந்து தேர்வு எழுத இயலாதவர்கள் 4,208 பேரும், முதலாம் ஆண்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மட்டும் பயிற்சி முடிந்து தேர்வு எழுத இயலாதவர்கள் 8,888 பேரும், மொத்தம் 28,366 பேர் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் கடந்த ஒரு வார காலமாக சென்னையிலே இருக்கிற குறளகத்திற்கு எதிரில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கை, "நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம்; எங்களுக்கு வாழ்வளிக்க வேண்டும்" என்பதுதான். கடந்த ஆட்சிக் காலத்திலே பல ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொடுத்து தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே சேர்ந்து, அதன்பிறகு தேர்வு எழுதமுடியாமல் பல்வேறு சிரமங்களை அனுபவித்திருக்கிறார்கள். அவர்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராக உண்ணாவிரதம் இருக்கவில்லை. மாறாக தங்களுக்கு நீதி வழங்கவேண்டுமென்பதற்காக அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். கடந்த ஆட்சி செய்த பல தவறுகளைச் சீர்திருத்தி இருக்கிறது இந்த அரசாங்கம் இந்த ஆசிரியர் பயிற்சி விஷயத்திலும் கடந்த ஆட்சி செய்திருக்கிற தவறுகளைச் சீர்திருத்தி, இந்த மாணவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

1996 ஆம் ஆண்டுமுதல் ஒவ்வொரு சட்டப் பேரவைக் கூட்டத்திலும் ஒரு கவன ஈர்ப்பு கொண்டுவந்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்தை நாங்கள் ஈர்த்திருக்கிறோம். ஆனால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், இவர்களுக்கு மீண்டும் பரீட்சை எழுதவோ அல்லது பரீட்சை எழுதியவர்களுக்குப் பட்டயம் வழங்கவோ சட்டத்திலே இடமில்லை என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலே 683 பேர்களுக்கு மட்டும், 30% பேர் சேர்ந்து படிப்பதற்கு ஒரு வாய்ப்பினை மாநில அரசாங்கம் வழங்கியிருக்கிறது. என்னுடைய கோரிக்கை என்னவென்றால் 27-4-1993 அன்று உயர்நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த மாணவர்கள் படித்த கல்விக் கூடங்கள் சரியாக இல்லாத கல்விக்கூடங்கள், எனவே, அவர்கள் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று ஒரு தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பை 15-6-1993-லே உச்சநீதிமன்றமும் ஏற்றுக்கொண்டு தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

அதன்பிறகு 31-1-1994-இல் குறுகிய காலப் பயிற்சி அளிக்க மாநில அரசாங்கம் ஒரு முடிவு செய்ததற்கும் மறுப்பு அளித்திருக்கிறது. இவற்றையெல்லாம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அரசுச் செய்தியிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது ஒரு கட்டம். ஆனால் இதற்கு அடுத்தது இரண்டாவது கட்டம் இருக்கிறது. அதை ஏனோ இந்த அரசாங்கம் வெளியிலே சொல்லவில்லை.



முற்பகல் 11-10

அதன்பிறகு 18-3-1994-லே உச்சநீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்பு என்ன சொல்கிறதென்றால், 100 மேல்நிலைப் பள்ளிக்கூடங்களிலே இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பெற்ற 3 ஆயிரம் மகளிர் தேர்வு எழுதுவதற்கு அனுமதி வேண்டுமென்று உச்சநீதிமன்றத்திற்குச் சென்றபோது, அவர்கள் தேர்வு எழுதலாம், ஆனால், உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்த பிறகு முடிவுகளை மட்டும், அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, 4-8-1994-லே மீண்டும் உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. 100 மேல்நிலைப் பள்ளிகளிலும் பயிற்சி பெற்ற 3 ஆயிரம் மாணவிகளும் தேர்வு எழுதி முடித்துவிட்டார்கள். அவர்களுடைய தேர்வு முடிவுகளை வெளியிடலாம் என்று சொல்லி, அவர்களுக்குப் பட்டயமும் வழங்கப்பட்டிருக்கிறது. நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சட்டம் இரண்டு பக்கமும் இருக்கிறது. சட்டத்தை ஒரு சட்டம் ஒரு இருட்டறை என்று சொன்னார்கள். சட்டத்தை ஒரு கழுதை என்றுகூடச் சொல்லலாம். முன்னாலே போனால் கடிக்கிறது, பின்னாலே வந்தால் உதைக்கிறது. ஆனால், ஒன்று தெளிவாக இருக்கிறது. இந்தத் தனியார் ஆசிரியர் பயிற்சி பள்ளிக்கூடங்களில் படித்தவர்களுக்குத் தேர்வு எழுத அனுமதியில்லை, தேர்வு எழுதியவர்களுக்குச் சான்றிதழ் வழங்க அனுமதியில்லையென்று ஒரு தீர்ப்பு இருந்தாலும்கூட, அதே உச்சநீதிமன்றத்திலே இந்தத் தீர்ப்பு வந்த பிறகு 3 ஆயிரம் மாணவிகளைத் தேர்வு எழுத அனுமதி அளித்தும், அந்தத் தேர்வு எழுதியவர்களுக்குச் சான்றிதழ் வழங்கலாம் என்றும் ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. எனவே, ஒரே வழக்கிலே இரண்டுவிதமான தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றை அரசாங்கம் கவனத்திலே கொள்ளவேண்டும். கவனத்திலே கொண்டு இதேபோன்ற ஒரு நடைமுறையை நாமும் பின்பற்றி இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கின்ற மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கலாம் என்பது எங்களுடைய கருத்து.

இரண்டாவதாக இந்த விஷயங்களுக்குப் போகாமலேயே மேலும் ஒன்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்தாறு உறுப்பினர்கள் பேச வேண்டும். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** உதாரணமாக, இவற்றையும் மீறி சட்டச் சிக்கல் இருக்கிறது என்று அரசாங்கம் கருதுமேயானால்—ஒரு விஷயத்தைச்

செய்யலாம்—இவர்களை மறந்துவிடலாம். இப்போது 5700 நடுநிலைப் பள்ளிகள் தமிழகத்திலே இருக்கின்றன. இந்த 5700 நடுநிலைப் பள்ளிகளுக்கும் ஒரு பள்ளிக்கு 10 பேர் என்று இவர்களை நியமனம் செய்து, இவர்களுக்கு செயல்முறை பயிற்சி (Practical Training) அங்கே கொடுக்கலாம். Theory-ஐ மட்டும் அஞ்சல்வழிக் கல்வி மூலமாக அவர்களுக்கு வழங்கலாம். உதாரணமாக இன்றைக்கு B.Ed. படிக்கின்றவர்கள் அஞ்சல் வழிக் கல்வி மூலமாகப் படிக்கிறார்கள். இதைவிட உயர்ந்த படிப்பு அவர்களுக்கே அஞ்சல்வழித் துறையின் மூலமாகச் சான்றிதழ் அளிக்கிறபோது, ஒரு ஆரம்பப்பள்ளி ஆசிரியருக்கு அஞ்சல் வழிக் கல்வியாக Theory-யைக் கொடுத்துவிட்டு, நடைமுறைப் பயிற்சிக்கு மட்டும் நடுநிலைப் பள்ளிகளிலே அவர்களை அனுமதித்தால், 5700 நடுநிலைப் பள்ளிகளிலும் 57000 பேருக்கு அனுமதி அளிக்கலாம். அதன்மூலம், ஒரு சட்டச் சிக்கலைத் தீர்க்கலாம.

மூன்றாவதாக ஒன்று. உதாரணமாக, 1952, 1953 ஆம் ஆண்டுகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லை. அப்போது முதலமைச்சராக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இருந்தார்கள். என்ன செய்தார் என்றால், S.S.L.C. படித்திருந்தால் போதும், உனக்கு ஆசிரியர் வேலை, நீ ஆசிரியராக நியமனம் பெறலாம், அதன்பிறகு, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே எப்போது இடம் கிடைக்கிறதோ அப்போது தேர்வு எழுதி ஆசிரியராக நீ உன்னை உயர்த்திக்கொள்ளலாம் என்று ஒரு நடைமுறையை அவர்கள் கொண்டுவந்தார்கள். அப்போது சட்டம் அதிலே குறுக்கே நிற்கவில்லை. எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், சட்டம் மட்டுமே பிரச்சினை அல்ல. இதை மனிதாபிமான நோக்கிலே நாம் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்பதுகூட அவசியம் இல்லை. ஏனென்றால், இதிலே பல பிரச்சினைகள் இருக்கலாம். இப்போது நம்முடைய உடனடிப் பிரச்சினை 5 ஆயிரம் பேர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நான்கூட அவர்கள் ஏதோ வழக்கம்போல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்றுதான் எண்ணினேன். ஆனால், நேரிலே சென்று பார்க்கிறபோதுதான் தெரிந்தது, உண்மையிலேயே உண்ணாவிரதம் இருக்கிறார்கள். 4,5 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பலபேர் மயக்கமடைந்திருக்கிறார்கள். மருத்துவமனைக்குப் போய் இருக்கிறார்கள். எனவே, இவற்றை எல்லாம் மனதிலே வைத்து, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்புக் கொடுத்தால் போதும், அவர்கள் உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ளட்டும். இந்தச் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரிலேயே



நாம் எல்லாம் அமர்ந்து பேசி, அரசாங்கம் என்ன செய்ய முடியுமோ அதனை நாங்கள் செய்து தருகிறோம் என்று சொன்னால் - இதிலே நாங்கள் legal opinion கூட வாங்கியிருக்கிறோம். Legal Opinion-ல் சொல்லியிருக்கிறார்கள், இவர்களுக்கு மீண்டும் பயிற்சி கொடுப்பதற்கு எந்தத் தடையும் கிடையாது. அவர்களுக்கே என்று இல்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Legal Opinion என்று ஏன் பேசுகிறீர்கள்? நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே சட்டம் ஒரு கழுதை என்று. நீங்கள் கேட்டால் ஒரு opinion கொடுப்பார்கள். அரசாங்கம் கேட்டால் மாற்று opinion கொடுப்பார்கள். இதிலே என்ன இருக்கிறது? நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், யாரிடமோ கொண்டுபோய்ப் பணத்தைக் கொடுத்தார்கள், இப்போது இங்கே வந்து பிரச்சினை செய்கிறார்களே, இது நியாயமா என்று அவர்கள் எண்ணுகிறார்கள். என்னுடைய கருத்தும் அதுதான். பேய் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பதுபோல, அப்போது தவறு நடந்து இருக்கிறது. ஆனால், அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டியது நம்முடைய கடமை. அந்த நியாயத்தை நாம் வழங்காமல் இருப்போமேயானால், நமக்கும் அதிலே பல சிரமங்கள் ஏற்படும். அவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நெருப்பைத் தொட்டுவிட்டோம். முன்பு நான் சொன்னபோது, அமைச்சர் இந்தப் பிரச்சினையில் தன்னால் எதுவுமே செய்ய முடியாது என்று சொன்னார்கள். ஆனால், அவர்களிலேயே 683 பேரை பொறுக்கி, அவர்களுக்கு மட்டும் நாம் இப்போது வழங்கி இருக்கிறோம். அதற்கு மட்டும் சட்டத்திலே எப்படி இடம் வருகிறது?

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானமாக இந்தக் கருத்து வரலாமே தவிர, வாதம் பண்ணுவதாக இருந்தால், பல அடிப்படைத் தவறுகள் ஏற்படுகின்றன. சட்டப்படி 2 ஆண்டுகாலம் முழுப் பயிற்சி பெற்றவர்களுள் முன்னுரிமை உள்ளவர்களுக்கு இடம் தரப்பட்டது. முழுப் பயிற்சி பெறப் போதுமான இடம் இருக்குமானால் தாராளமாக எவ்வளவு பேருக்கு வேண்டுமானாலும் தரலாம். பயிற்சிக்கு இடம் கிடையாது.

[1999 மார்ச் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி, பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** எனவேதான், நாங்கள் சொல்லுகிறோம், இப்போது 5700 நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஒவ்வொரு நடுநிலைப் பள்ளியிலும் பத்துப் பேருக்கு செயல்முறைப் பயிற்சிக்கு அவர்களை நீங்கள் ஆசிரியராக நியமிக்கலாம். அவர்களுக்கு சம்பளம் தர வேண்டும் என்கிற அவசியம்கூட கிடையாது. Theory-க்கு, அஞ்சல்வழிக் கல்வி மூலமாக அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுப்பீர்களேயானால், இந்தப் பிரச்சினை தீர்வதற்கு வழி இருக்கிறது. நான் முடிவாகச் சொல்வது ஒன்றுதான். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. பேராசிரியர் நினைத்தால் இதைச் செய்யலாம். இதில் பெரிய சட்டப் பிரச்சினைகள் எல்லாம் இல்லை. பேராசிரியர் அவர்கள் கொஞ்சம் பிடிவாதமானவர்; எனக்கு அது தெரியும். அவர் ஒரு முடிவு எடுத்துவிட்டால், அந்த முடிவிலிருந்து அவரை மாற்றுவது என்பது கொஞ்சம் சிரமம். எனவே, தன்னுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி பேரவைத் தலைவர் அவர்களே அவரிடம் சொல்லி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். ஏனென்றால் மனிதாபிமான பிரச்சினை; நீண்டகாலமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் செல்வாக்கைப் பயன்படுத்தியதால்தான் நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்; உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** எனவே, இதற்கு உடனடியாகக் கல்வி அமைச்சரிடமிருந்து பதிலை எதிர்பார்க்கவில்லை. முதலில் உண்ணாவிரதத்தை முடிப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்து, ஒரு வார காலத்திலே எல்லோரையும் அழைத்துப்பேசி அவர்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளை ஏதாவது செய்யலாம்; செய்ய இயலும். அப்படிச் செய்வதற்கான ஆரம்பத்தை நீங்கள் செய்து இருக்கிறீர்கள், 683 பேருக்கு நீங்கள் வாய்ப்பு அளித்து இருக்கிறபோது 15,000 பேருக்கு வாய்ப்பு அளிப்பதிலே எந்தச் சிரமமும் கிடையாது. ஏனென்றால், நாம் ஆரம்பத்தைத் தொட்டுவிட்டோம். எனவே, தயவுசெய்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. கே. சுப்பராயன், சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பயிற்சிப் பள்ளிகளிலே பயிற்சி பெற்ற மாணவர்கள் இங்கே உண்ணாவிரதம் இருப்பதற்கு மாணவர்களும் காரணமல்ல; இப்போது



1999 மார்ச் 20] [திரு. கே. சுப்பராயன்]

இருக்கிற அரசும் காரணமல்ல. ஆனால், மாநில அரசு, இந்தப் பிரச்சினை தோன்றுவதற்குக் காரணம் நாங்கள் அல்ல என்கிற மாதிரி, ஒரு நியாயத்திலிருந்து, பிரச்சினைக்கு தீர்வு அளிப்பதிலே இருந்து தப்பித்துக்கொள்வது நல்லதல்ல. ஒரு மாநில அரசு என்கிற முறையிலே இந்த மாநிலத்தில் எழுகிற பிரச்சினைகளுக்குத் தீர்வு அளிக்கிற தார்மீகப் பொறுப்பு உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே, ஒரு அரசு என்ற நம்பிக்கையில், அரசு ஏற்பாடு செய்த, அனுமதித்த பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்று வெளியேறி வந்திருக்கிறவர்கள் அரசின் மீது வைத்து இருக்கிற நம்பிக்கைக்கு இது அடியாக அமைந்துவிடும். அரசின் கட்டமைப்பின் மீது யாருமே நம்பிக்கை கொள்ளாத ஒரு நிலை எதிர்காலத்தில் தோன்றிவிடும் என்பதை நான் மாநில அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே, இந்தப் பிரச்சினை, வெறும் மாணவர்கள் பிரச்சினை என்று மட்டும் நாம் பார்க்கக்கூடாது. இந்த அரசு செய்கிற ஒரு முடிவை, இந்த பொது ஜனங்கள் நம்ப வேண்டுமானால், கடந்த காலத்தில் அரசு செய்திருக்கிற அநியாயமான முடிவுகளால் ஏற்பட்டிருக்கிற விளைவுகளுக்குத் தீர்வு அளிக்கவேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு இந்த மாதிரியான வாதமாக அமையக்கூடாது. ஒருவேளை வாதம் செய்வதாக இருந்தால், இது கடந்தகால அரசு, இந்தக்கால அரசு என்பதால் அல்ல, நீதிமன்றத் தீர்ப்பை எப்படி மாற்ற முடியும் என்பதைப்பற்றி திரு. சுபபராயன் அவர்கள் சொன்னால் நல்லது.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றத் தீர்ப்பின் மூலம் ஒரு சில பகுதியினருக்கு மட்டுமே அது நியாயம் வழங்குகிறது என்றாலும்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** நான் எதிர்த்து வாதாட விரும்பவில்லை. விளக்கம் இல்லாமலே தொடர்ந்து பேச வேண்டிய அவசியம் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன். அந்த 3 ஆயிரம் மாணவர்கள் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல. அது தனியாக வேறு முறையில், மேல்நிலைப் பள்ளியிலே, பயிற்சி பெற்றவர்கள். அந்தப் பயிற்சி போதாது என்று ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு வந்த காரணத்தால், அவர்கள் 2 ஆண்டுகள் பயிற்சி பெற்று விட்டார்கள். இவர்களுக்கு மட்டும் தேர்வு எழுத அனுமதியுங்கள்

என்று தனியாகக் கேட்கப்பட்டு, அந்த முடிவு தரப்பட்டதே தவிர, இந்த பாதிக்கப்பட்ட மாணவர்களுள் இடம்பெற்றவர்கள் அல்ல அவர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதம் செய்வது பொறுப்பாக இருக்காது என்றால், விவாதத்திற்குள்ளே போகவில்லை. ஒரே ஒரு வேண்டுகோளை மாநில அரசுக்குத் தெரிவிப்பது, "உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு வாருங்கள்; உங்கள் குறை என்ன என்பதைச் சொல்லுங்கள், அதில் என்ன சாத்தியம் இருக்கிறதோ, அவற்றைச் செய்கிறோம்" என மாநில அரசு இந்தப் பேரவையில் உத்தரவாதம் அளித்தால், உண்ணாவிரதம் ஒரு முடிவுக்கு வந்துவிடும்; பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகை காண்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்பதைச் சொல்லி முடிக்கிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 28,000-க்கும் மேற்பட்ட இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகள் 6-வது நாளாக உண்ணாவிரதத்திலே இருக்கக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறவர்களில் பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். 5 நாட்கள், 6 நாட்கள் உண்ணாவிரதம் என்பதால் அவர்களுடைய உடல் நலம் மிகவும் சீரழிந்த நிலையில் இருக்கிறது. அந்த உண்ணாவிரதத்தினை மேற்கொண்டிருக்கின்ற மாணவ, மாணவிகளின் கோரிக்கை என்பது, முன்னாலே சட்டமன்ற உறுப்பினர் சொன்னமாதிரி ஆழ்ந்து நான் அந்த நோக்கத்திலே செல்லவில்லை என்று சொன்னாலும்கூட, தனியார் சுயநிதி ஆசிரியர் பள்ளிகளிலே எவ்வளவு கோளாறு, குளறுபடி இருக்கிறது என்பதை அறிந்திருந்தாலும்கூட, அதிலே பயிற்சி பெற்ற மாணவ, மாணவியர்கள் ஓராண்டு படித்து தேர்வு எழுத முடியாதவர்கள், தேர்வு எழுதி முடித்து இரண்டாம் ஆண்டுக்குச் செல்ல முடியாதவர்கள், இரண்டாவது ஆண்டு தேர்வு எழுதி, சான்று பெற முடியாமல் வேலைக்குச் செல்ல முடியாமல் இருப்பவர்கள், இப்படிப்பட்டவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே நம்முடைய மாமன்றத்திலே இதைப்பற்றி விவாதங்கள் வந்தபோது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு, பெரிய மனதோடு, அவர்களில் 30 விழுக்காட்டினரைப் பயிற்சியில்



ஆண்டுதோறும் சேர்த்துக்கொள்ளலாம் என்ற அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அதை நாங்கள் மனதார வரவேற்கிறோம், ஏற்றுக்கொள்கிறோம். அந்த வாய்ப்பினை அளித்த நீங்கள் மீண்டும் தாயுள்ளத்தோடு இந்தக் கோரிக்கைகளைக் கவனிக்க வேண்டும்.

இந்த பாதிக்கப்பட்டவர்கள் இலட்சக்கணக்கிலே செலவழித்திருக்கிறார்கள். 5 ஆண்டு, 6 ஆண்டு கால இடைவெளி வந்துவிட்டது. வயதும் அதிகம் கடந்துவிட்டது. இப்படிப்பட்ட நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள், இதற்கு முன்னாலே 30 விழுக்காடு என அளித்ததைப் போல, ஆசிரியர்களுக்கேகூட பணியிடைப் பயிற்சி என்று கொடுக்கிறார்கள்; இடைக்காலப் பயிற்சி in-service training—என்று சொல்வார்கள். அதைப் போல மீண்டும் 6 மாதமோ அல்லது 1 வருடமோ அல்லது 2 வருடங்களோ பயிற்சி அளிக்கும் வகையிலே, நீங்கள் எந்த முடிவெடுத்தாலும் சரி, கல்வி அமைச்சர் நல்ல முடிவை எடுத்து, உண்ணாவிரதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்த உண்ணாவிரதத்திலே தினந்தோறும் 10 பேர், 15 பேர் மயக்கமாகி விழுகிறார்கள். நான் சென்றபோது 2, 3 பேர் மயங்கி விழுந்தார்கள். அவர்களை எடுத்துச் செல்லாமல் காவலர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மயக்கமுறுகிறவர்களை நாங்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சேர்க்க மாட்டோம்; எங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை என்று சொல்லி அவர்கள் தட்டிக்கழித்து விடுகிறார்கள். மயக்கமுறுகிறவர்கள் தனியார் மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலை இனி தொடரக்கூடாது என்பதற்காக, வயது வரம்பைத் தளர்த்தி, அவர்கள் மீண்டும் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய வகையில் நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். எல்லோரும் ஒரே கருத்தைச் சொல்கிறீர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5, 6 நாட்களாக இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே தவறாக பல்வேறு பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக, அது நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத்தின் மூலமாக அந்தப் பயிற்சிப் பள்ளிகளெல்லாம் தடை விதிக்கப்பட்டதன் காரணமாக, அங்கு பயின்ற பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவியர்கள் தங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கவில்லை; அதன் மூலமாக நாங்கள் வேலை

பெறமுடியாத நிலையிருக்கிறது; இது நாங்கள் செய்த தவறல்ல, அரசின் மூலமாக ஏற்படுத்தப்பட்ட அந்தப் பயிற்சிப் பள்ளிகளிலே நாங்கள் மிகுந்த சிரமத்தை ஏற்றுக்கொண்டு இடத்தை வாங்கி படித்திருக்கிறோம்; இந்தத் தவறைச் செய்தவர்கள் ஒருபுறம் இருக்க, நாங்களெல்லாம் தண்டனைக்கு உள்ளாகியிருக்கிறோம் என்ற நிலையில் தங்களுடைய மன நிலையை எடுத்துக்காட்டுகின்ற வகையில் உண்ணாநோன்பினை மேற்கொண்டிருக்கிறார்கள். இங்கே தலைவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல 5, 6 நாட்கள் உண்மையான உண்ணாநோன்பினை மேற்கொண்டிருக்கின்ற காரணத்தால், அதிலே ஈடுபட்டிருக்கின்ற பெண்மணிகளெல்லாம் மயக்கமுறுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு மனிதாபிமானத்தோடு அனைத்துப் பிரச்சினைகளையும் அணுகுகின்ற நல்ல அரசாக இருக்கின்ற காரணத்தால், 30 விழுக்காடு ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கித் தந்து, கல்வியைக் கற்றுக்கொள்ளலாம் என்ற நிலையை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. அதை மேலும் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கின்ற அளவிலே மாண்புமிகு கல்வி அமைச்சரும், இந்த அரசும் அவர்கள் மேற்கொண்டு இருக்கின்ற உண்ணாநோன்பை இன்றைக்கே முடித்துக்கொள்ளுகின்ற அளவுக்கு அவர்களுக்கு ஏதாவது ஒரு நல்வழியைக் காட்ட வேண்டுமென்று சொல்லி, என்னுடைய இயக்கத்தின் சார்பிலே எங்களுடைய கருத்தை வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியின்போது தவறாக அனுமதி வழங்கப்பட்டது —ஆனால் மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் எந்தத் தவறும் செய்யவில்லை, பாவம் செய்யவில்லை. அதேபோல அவர்களுடைய பெற்றோர்களும் அரசு உத்தரவை நம்பி, ஒவ்வொரு மாணவரும் 25 ஆயிரம், 30 ஆயிரம் என்று பணம் கொடுத்தார்கள். பணம் வாங்கிக் கொண்டுதான் அப்போது சேர்த்தார்கள், படித்த ஏறக்குறைய சுமார் 28 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசு ஆணையின் மூலமாக ஆண்டுக்கு 600 பேர், 650 பேர் என்று சொன்னால், இவர்களுக்கெல்லாம் பணி கிடைக்க 30 ஆண்டுகள், 40 ஆண்டுகள் ஆகும். எனவே, இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு, நான் மாண்புமிகு கல்வி அமைச்சரைக் கேட்டுக்கொள்வது, மற்ற சக சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னதைப்போல, தயவுசெய்து இப்பொழுது நீங்கள் எந்தவிதமான மறுப்பும் சொல்லாமல், அதாவது எதிர்மறையாக முடியாது என்று இப்பொழுது அறிவிக்காமல், நான் அரசைக் கேட்டுக்கொள்வது ஒரு



குழுவை அமைத்து, I.A.S. அதிகாரி தலைமையிலோ அல்லது கல்வியாளர் தலைமையிலோ, இரண்டு, மூன்று பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாக இந்தப் பிரச்சினைக்கு எப்படி முடிவு காணலாம் என்பதைத் தீர ஆலோசித்து, அதற்குப் பின்னாலே அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஏனென்றால், கல்வி அமைச்சர் இப்பொழுது அறிவித்துவிட்டால், அரசாங்கத்தின் சார்பிலே முடிவு அறிவித்தது மாதிரி முடிந்துவிடும். எனவே, இப்பொழுது முடிவாக எந்தப் பதிலையும் சொல்லாமல், எங்களது கோரிக்கைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு, ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு தீவிரமாகப் பிரச்சினைக்கு எப்படிப் பரிகாரம் தேட வேண்டுமென்கிற நோக்கத்தோடு ஆராய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது 6 நாட்களாக உண்ணாவிரதம் இருந்துகொண்டு இருக்கிறார்கள். நான் இதிலேகூட பார்க்கிறேன், தொடர்ச்சியாக இதுமாதிரி 3 நாள், 4 நாள், 5 நாள், 6 நாள் என்றால், என்ன செய்வார்கள் என்றால், காவல் துறையிலே போய் அதற்கு மேலே உண்ணாவிரதம் இருக்க அனுமதிக்காமல், கைது செய்து மாலையிலே விடுவதுதான் பழக்கம். இப்படி 6 நாள், 7 நாள் தொடர்ச்சியாக அனுமதித்து, தினமும் மயக்கம் போட்டு, 10, 10 பேராக மருத்துவமனைக்குப் போகிற நிலைக்கு, உயிருக்குப் போராடுகிறார்கள் என்ற செய்தியும் பத்திரிகையிலே தொடர்ந்து வருகிற விதத்திலே இருக்கிறது. ஏன் 5, 6 நாட்களாக உண்ணாவிரதத்தை அனுமதித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இரண்டாவது நாள், மூன்றாவது நாள் இவர்களெல்லாம் மயக்கம் போட்டு விழுகிற நிலை வந்தவுடனேயே நீங்கள் போய், அவர்களையெல்லாம் அழைத்து வேண்டாமென்று நிறுத்தியிருக்கலாம். எனவே, இன்றைக்கு 6 வது நாளாக தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து, பலபேர் மயங்கி விழுகிற நிலை, உயிருக்குப் போராடுகிற நிலை, மருத்துவமனையிலே சேர்க்கின்ற நிலை, இதுபோன்ற துர்ப்பாக்கியமான நிலையை நீடிக்க விட்டிருப்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. எனவே, தயவுசெய்து நான் மாண்புமிகு கல்வி அமைச்சரைக் கேட்டுக்கொள்வேன், இவர்களிலே பலவகையினர் இருக்கிறார்கள். எல்லோரும் விளக்கமாகச் சொன்னார்கள். மீண்டும் நான் விளக்கிச் சொல்ல விரும்பவில்லை. முதலாண்டு முடித்தவர்கள், இரண்டாவது ஆண்டு தேர்வு எழுதியவர்கள், தேர்வு எழுதி result வராதவர்கள், result வந்து வேலை கிடைக்காதவர்கள், இப்படி 5, 6 category இருக்கிறார்கள். இது அரசாங்கத்தினுடைய முடிவு. நீதிமன்றத்திலே ஒரு direction கொடுக்கிறார்கள், இப்படியெல்லாம் செய்யுங்கள் என்று. அரசாங்கம் முடிவு செய்து நாங்கள் இவ்வளவு பேருக்கு வேலை கொடுக்கிறோம் என்று எடுக்கிறபோது, எந்த

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 20

நீதிமன்றமும் அவர்களுக்கு வேலை கொடுக்காதே, இப்படி உத்தரவு போடாதே என்று உங்களைத் தடுத்துவிட நிச்சயமாக முடியாது. எனவே, சகோதரர் அழகிரி சொன்னதுமாதிரி, இந்தப் பிரச்சினையில் நீங்கள் தீவிரமாக ஆலோசித்து, ஒரு குழு நியமித்து, இவர்களையெல்லாம் எப்படி மீண்டும் பணியிலே அமர்த்துவது, ஏனென்றால், பலபேர் இனிமேல் படிக்க முடியாது, படித்தாலும் வேலைக்குப் போகமுடியாது, வயதானவர்கள், ஏற்கெனவே செலவு செய்து இதனாலே பல குடும்பங்கள் நொடிந்து போய் இருக்கின்றன. வாத்தியார் வேலைக்குப் படித்தால், உடனே வேலை கிடைக்கும் என்று நிலத்தை விற்று, வீட்டை விற்று, மாட்டை விற்று யார், யாருக்கோ 20 ஆயிரம், 30 ஆயிரம் கொடுத்துச் சேர்ந்திருக்கிறார்கள். மாணவர்கள் பாவமல்லவா. எனவே அவர்களுக்குப் பரிகாரம் தேடுகின்ற முயற்சியிலே அரசு ஈடுபடவேண்டும். குழு அமைத்து விசாரித்து இவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் தயவுசெய்து சுருக்கமாகப் பேசுங்கள். இப்பொழுதே 11 1/2 மணி ஆகிவிட்டது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் கடந்த ஆறு தினங்களாக நடத்தி வருகின்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை மாநில அரசுக்கு வைத்து, இதிலே நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு பல்வேறு வடிவங்களிலே நமக்குப் பாதகமாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையின் காரணமாக பல மட்டங்களிலே இந்தச் சட்டமன்றத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதற்குப் பல விளக்கங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் கூட, இதை ஒரு மனிதாபிமான உணர்வின் அடிப்படையிலும், பல ஆயிரக்கணக்கான மாணவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை என்ற அடிப்படையிலும், அந்த மாணவர்களுடைய குடும்பங்களின் விவகாரம் என்ற அடிப்படையிலும் அணுகி, ஏற்கெனவே, இதில் இருக்கின்ற சட்டச் சிக்கல்களை எல்லாம் எந்த அளவுக்குத் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதை ஆராய்வதற்காக ஒரு குழு அமைத்து, அதன் மூலமாக சரியாகப் பரிசீலனை செய்து அவர்களுக்கு ஒரு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் இந்தப் பிரச்சினையைச் சந்திக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நல்ல முடிவுக்கு நாம் வரவேண்டும். அந்த வகையில், இன்று இந்தச் சட்டமன்றத்தில் அந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடக்கூடிய அளவில் நல்லதொரு முடிவை மாநில அரசு எடுத்து அந்த மாணவர்களுடைய எதிர்கால வாழ்வுக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டு அமைகிறேன்.



1999 மார்ச் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 தினங்களாக தமிழக அரசு தங்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தி இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவர்கள் 5 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய பிரச்சினையில், கடந்த காலம் போல் அல்லாமல், உயர்நீதிமன்றத்தின் ஆணையை மட்டும் மேற்கோள் காட்டாமல் தமிழ்நாடு அரசுதான் அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்வை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற நோக்கத்தோடு அணுகி, அவர்கள் மேற்கொண்டிருக்கின்ற அந்த உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று புதிய தமிழகத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

மேலும், தனியார் பள்ளிகளிலே பயிற்சி பெற்றவர்களுக்குத்தான் உயர்நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது. ஆனால், அரசுப் பள்ளிகளிலே பயிற்சி பெற்றவர்களுக்கு அப்படி ஒரு தடை இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அவர்களுக்காவது உடனடியாகச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவே, இந்தப் பிரச்சினையில் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு I.A.S. அதிகாரிகள் 3 பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்து தமிழக அரசு நடவடிக்கை எடுத்து அந்த உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று புதிய தமிழகம் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல நாட்களாக கடுமையான உண்ணாவிரதத்திலே இருந்து கொண்டிருக்கின்ற இடைநிலை ஆசிரியர் பயிற்சி மாணவர்களுடைய பிரச்சினை குறித்து அரசு கருணை அடிப்படையிலே தீர்வு காண வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற பல முறைகேடுகளை, பல தவறுகளை எல்லாம் சரி செய்து, நேர் செய்திருக்கிறார்கள். காவல் துறையைச் சார்ந்தவர்கள் தேர்வு செய்யப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டபோதுகூட, அவர்களும்

தமிழர்கள்தானே என்று கருணை உள்ளத்தோடு அவர்களுக்குப் பணி வாய்ப்புத்தந்தார்கள். அதுபோல இந்தப் பிரச்சினை இல்லை என்றாலும் கூட, கருணை அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. இந்த மாணவர்கள் இப்படி வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, இதில் கொல்லைப்புற வழியாக, அதாவது கடந்த ஆட்சிக் காலத்திலே எந்தவிதமான வசதிகளும் இல்லாமல் அப்படிப்பட்ட ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளை நடத்தியவர்கள் இப்போதும் மறைமுகமாக இதே வேலையை நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். எப்படி என்றால், இங்கே ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்புப் பதிவு அலுவலகத்திலே அவர்களுடைய மூப்பின் அடிப்படையில் வேலை வாய்ப்புத் தரப்படுகின்ற காரணத்தாலே, அந்த ஒரு நல்ல முறையை அவர்கள் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு, ஆசிரியர் பயிற்சிக்காக வெளி மாநிலங்களுக்கு மாணவர்களைத் தேர்வு செய்து அனுப்பி, அதற்கான பணத்தைப் பெற்றுக் கொண்டு, அவர்கள் அங்கே படித்ததற்குப் பின்னாலே N.O.C. பெற்றுக் கொண்டு வந்து தமிழகத்திலே பதிவு செய்துவிட்டு, அதன் மூலமாக அவர்கள் இப்போதுத் தொடர்ந்து தங்களுடைய தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதிலே பாதிக்கப்பட்டிருப்பது இந்த 28 ஆயிரம் அப்பாவி மாணவர்கள்தான். ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொல்லைப்புற வழியாகப் பிற மாநிலங்களிலே படித்துவிட்டு வருகின்றவர்களைத் தடுக்க வேண்டும். அதேபோல, இந்த 28 ஆயிரம் மாணவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல, ஏற்கெனவே, Un-trained B.T. Teachers, என்று போட்டதுபோல—ஒரு காலத்திலே அந்த முறை இருந்தது—இந்த மாணவர்களையெல்லாம், ஒரு பள்ளிக்கு ஐந்து பேரோ அல்லது பத்து பேரோ என்று குறிப்பிட்டு, அவர்களை இரண்டு ஆண்டு காலத்திற்கு சம்பளம் இல்லாத பயிற்சியிலே ஈடுபடுத்தினால், நாம் புதிதாக ஆசிரியர்களை நியமனம் செய்யக்கூடிய, அந்த ஒரு நிலைமைகூட, இப்போது நிதிச்சுமைகூட ஏற்படாமல் இருக்கும். அவர்களுக்குத் தேர்வு வைக்கின்றபோது, அது அஞ்சல்வழிக் கல்வி மூலமாக வைத்தாலும் சரி அல்லது அரசு தேர்வாணையத்தின் மூலமாக வைத்தாலும் சரி, எப்படியாவது இந்த மாணவர்களுடைய பிரச்சினையை இந்த அரசு நல்லெண்ணத்தோடு, முடிவிற்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே வேண்டி, விரும்பிக் கேட்டு அமைகிறேன்.



*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இன்றையதினம் கொண்டுவரப்பட்ட இந்தப் பிரச்சினை குறித்து, அனைத்து உறுப்பினர்களுடைய உணர்வோடு ஒன்றிய உணர்வுடையதாகத்தான் அரசு செயல்பட்டு வருகிறது. உணர்வுகளிலே மாற்றம் இல்லை. விவரங்களிலேதான் மாற்றம் இருக்கிறது. விவரங்கள் அரசு எண்ணுகின்ற அளவிற்கு, செயல்படுவதற்கு இடம்தரவில்லை. ஏனென்றால், இந்தப் பிரச்சினையில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கையை மட்டும் வைத்துப் பார்க்கிறபோது, நமக்கு வருத்தமாக இருக்கிற அளவிற்கு பிரச்சினை இருந்தாலும்கூட, இந்தப் பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த சூழ்நிலையை ஏற்படுத்தியது எந்த அரசு என்பதைக்கூட நான் கருதவில்லை. நீதிமன்றத்திலே தரப்பட்ட அந்த முடிவுகள் எப்படி அமைந்தன என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் உயர்நீதிமன்றத்திலேயே 102 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அனுமதி பெற்றன. அதற்குப் பின்னர், அரசாங்கம், 'நாங்கள் இனி பள்ளிகளுக்கு அனுமதி வழங்க மாட்டோம்' என்று விளம்பரம் போட்டுவிட்டு, அதற்குப் பினனர் வழங்கியது 117 பள்ளிகள். நீதிமன்றத்திலே வழங்கப்பட்ட அந்த 102 பள்ளிகளும் உயர்நீதிமன்றத்திலே அடிபட்டன. அரசு வழங்கியது 117 மட்டுமல்ல. உயர்நீதிமன்றம் தலையிட்டு, "முதலில் வழங்கிய பள்ளிக்கூடங்களும் முறையற்ற பள்ளிக்கூடங்கள்; அவை இயங்கக் கூடாதவை; அவை இந்த நாட்டில் ஆசிரியர் பயிற்சியைக் கெடுத்துவிடும்" என்று திட்டவட்டமாகக் கருதப்பட்டு, உயர்நீதிமன்றத்திலேயே முதலில் ஓராண்டு காலத்தில் வழங்கப்பட்ட 102 பள்ளிக்கூடங்களும் சேர்த்து அமைச்சரவையில் இருந்த அமைச்சரால் தரப்பட்ட 117 பள்ளிகளும் சேர்த்து, 219 பள்ளிக்கூடங்களும் மொத்தமாக உயர்நீதிமன்றத்திலே அடிபட்டன. அப்படி அடிபட்ட காரணத்தால், அங்கே படித்ததாகச் சொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ளவில்லை உயர்நீதிமன்றம். அதற்கு அன்பழகனோ கலைஞரோ உடனடியாக ஒன்றும் செய்ய முடியாது. இந்த நிலைமை ஏற்பட்டதற்குப் பின்னர், அந்த மாணவர்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் நிவாரணம் கிடைக்கச் செய்யலாம் என்ற கருத்தில், அந்த அரசு கூட சில முயற்சிகளிலே ஈடுபட்டது; என்றால், ஏதோ ஒரு வகையில் அவர்கள் கடமைப்பட்டவர்களாக இருந்தார்கள். எதையோ செய்ய முயற்சித்தார்கள். அப்படி முயற்சித்தும், அவர்கள் உச்சநீதிமன்றம் வரையில், போய், அங்கேயும், உயர்நீதிமன்றத்தில்*

சொல்லப்பட்ட தீர்ப்பை முழுமையாக வரிக்கு வரி ஏற்றுக் கொள்வதாகச் சொல்லிவிட்ட காரணத்தால், அது முழுவதும் அடிபட்டுப் போய்விட்டது. செயல்படுத்த முடியவில்லை. அதற்குப் பின்னர் என்ன செய்தார்கள் என்றால்—இப்போது நம்முடைய அழகிரி அவர்கள் என்னை பிடிவாதக்காரன் என்று சொன்னார். ஏனென்றால், என்னை ரொம்ப நாளாகத் தெரியும். அவருடைய அப்பாவும், நானும் நண்பர்கள். அவருடைய பிடிவாதமும், என்னுடைய பிடிவாதமும் அழகிரிக்குத் தெரிந்த காரணத்தாலே சொல்கிறேன். பிடிவாதம் என்பது எனக்குத் தெரிந்த உண்மைகளைச் சொல்வதில்தான் பிடிவாதமே தவிர, முடிவுகளை எடுப்பதிலே எனக்கு ஒன்றும் பிடிவாதம் கிடையாது. எது எல்லோருக்கும் ஏற்ற முடிவோ அது எனக்கும் ஏற்ற முடிவுதான். இல்லையென்றால் ஒரே கட்சியிலே எப்படி இவ்வளவு நாள் நான் இருப்பேன்? (சிரிப்பு) அனைவரும் சேர்ந்து எடுக்கின்ற முடிவுகளுக்கு நான் கட்டுப்பட்டவன். ஆனால், என்னுடைய எண்ணங்களைச் சொல்கிறபோது, எனக்குத் தெரிந்த உண்மையைச் சொல்லாமல் நிறுத்தி வைக்க என்னால் முடியாது அந்த முறையில், உச்ச நீதிமன்றத்தில் கூறப்பட்ட முடிவு என்ன என்று கேட்டால்—இந்தப் பிள்ளைகளுக்கு ஒன்றும் வழி சொல்லப்படவில்லை. நீதிமன்றத்திலே வழக்கு போட்டு, முடிவு சொல்லப்பட்ட கால கட்டத்திலே, எல்லோரும் ஒரே நிலையினர் அல்ல; முதலாண்டு பயிற்சியே முடிக்காதவர்கள் 8,888 பேர், Admission-க்கே அர்த்தம் இல்லை என்று சொல்லும் வகையில் அந்த 8,888 பேருக்கு முதலாண்டு பயிற்சியே நடக்கவில்லை. நான் சொன்னால் வருத்தப்படக்கூடாது. பயிற்சியே நடக்கவில்லை. அடுத்து, இரண்டாவது ஆண்டு பயிற்சி முடிக்காதவர்கள் 4,208 பேர். இவர்கள் தேர்வு எழுதுவதற்கான தகுதி பெறவில்லை என்று நீதிமன்றத்திலே வரையறுத்துச் சொல்லப்பட்டுவிட்டது. தேர்வு எழுதியவர்கள் 15,270 பேர். அவர்களுக்கு எந்தச் சான்றிதழும் தரக்கூடாது. அவர்களுடைய தேர்வு result கூடச் சொல்லலாம். எழுதியதற்கு முடிவு என்ன ஆயிற்று என்று தெரிவித்தாலும், சான்றிதழ் தரக்கூடாது, பட்டயம் தரக்கூடாது என்று நீதிமன்றத்திலே வரையறுத்துச் சொல்லிவிட்டார்கள். உச்ச நீதிமன்றம் இதை ஏற்றுக் கொண்டு விட்டது. அங்கு appeal செய்யப்பட்டபோது இதை மாற்ற முடியாது என்று உச்ச நீதி மன்றம் சொன்னது. ஏனென்றால் அந்தப் பள்ளிக்கூடங்கள் fraud அடிப்படையிலே தோன்றியவை.

*முற்பகல் 11-40*

இப்போது தீரன் அவர்கள் இன்னொரு கதையைச் சொன்னார்கள் அது எந்த அளவு உண்மை என்று விசாரித்துத்தான் நான் தெரிந்து கொள்ள வேண்டும். அதுமாதிரி இது அடிப்படைத் தவறு. அதற்கு



3 காரணங்கள். ஒன்று ஆசிரியர் பயிற்சி என்பது D.I.E.T. மூலமாகத்தான் தரப்பட வேண்டும். மாவட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் மூலமாக 50 பேருக்கு மட்டும்தான் ஓர் ஆண்டிலே ஒரு வகுப்பிலே இடம் தர வேண்டும், அதற்கு இந்த மாதிரியான ஏற்பாடு இருக்க வேண்டும் என்று ஓர் ஆணை மத்திய அரசு மூலமாக மாநில அரசுக்குக் கிடைத்து, அதுவும் நடைபெறுகிறது. ஏற்கெனவே அரசாங்கம் முறைப்படி நடத்துகிற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. இவற்றைக் கடந்து ஏராளமான எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்க்கிற முறையை, இந்த ஆசிரியர் பயிற்சியை முறைப்படுத்தி கட்டுப்படுத்துகிற மத்திய அரசினுடைய அமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. நினைத்தபடியெல்லாம் மாணவர்களைச் சேர்க்காதீர்கள். ஆசிரியர்களுக்கு முறையாகப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதனாலே அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், மேல்நிலைப் பள்ளியிலே-மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் எப்படி நடுநிலைப்பள்ளிக்குப் போகலாம் என்று சொன்னாரோ அதுபோல, மேல்நிலைப் பள்ளியிலே-இந்த மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஒரு முறை வைத்து சேர்த்து ஆசிரியர் பயிற்சி கொடுக்கலாம் என்று அந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டது. அதில் ஒரு வழக்கு வந்து உயர்நீதிமன்றம் மேல்நிலைப்பள்ளிகளை இதற்குப் பயன்படுத்தக்கூடாது என்று முடிவு சொல்லிவிட்டது. இந்தமாதிரி பயிற்சி கொடுப்பதற்கு மேல்நிலைப்பள்ளிகளைப் பயன்படுத்தக்கூடாது. அதில் பயிற்சி குறைவாக இருக்கிறது, ஆகவே, இந்த மாணவர்களைச் சேர்க்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அந்த அரசு செயல்படாமல் நின்றுபோய்விட்டது. அமைச்சரவைக் கூட்டத்திலேயே அந்த அரசு இதற்கு மேல் இதில் முயற்சி செய்வதற்குச் சட்டப்படி இடமில்லை என்று கைவிட்டுவிட்டது.

நம்முடைய மாண்புமிகு அழகிரி அவர்கள் என்னிடத்திலே காலையிலே ஒரு செய்தியைத் தெரிவித்தார்கள். 1994 ஆவது ஆண்டு உச்சநீதிமன்றத்தில் 3000 மாணவிகளுக்குத் தேர்வு எழுதுவதற்கும், அதற்கு விடை தருவதற்கும் அனுமதி கொடுத்ததாக அவர்கள் தெரிவித்தார்கள். நான் அது ஒரு நல்ல செய்தி என்று உடனடியாக பள்ளிக் கல்வித் துறை செயலாளரை அழைத்து, அப்படி இருக்குமானால் அதைப்போல் இதில் முயற்சிக்கலாமே என்று கேட்டேன். அது எப்படி அமைந்தது என்றால் தொடக்கப்பள்ளிகளில் ஆசிரியர்களாக பெண்கள், போதுமான அளவிற்கு

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 மார்ச் 20

இல்லை என்று அந்த ஆட்சிக் காலத்தில் ஒரு நிலை ஏற்பட்டு பெண்களுக்குச் சிறப்புப் பயிற்சி, அதாவது இரண்டாண்டு காலப் பயிற்சி 100 மேல்நிலைப் பள்ளிகளில், பள்ளிக்கு 30 மாணவிகள் வீதம் சேர்த்து வழங்குவது என்று தீர்மானித்து அன்று வழங்கப்பட்டது. அது தனி. இந்த மாணவர்களோடு தொடர்புடையது அல்ல அது. அது முறைப்படிதான் நடந்தது. அந்த முறை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையா, அல்லவா என்பது வேறு. அன்றைக்கிருந்த சட்டப்படி அவர்களுக்கு வழங்கலாம். அப்படி வழங்கத் தொடங்கியதற்குப் பின்னர் ஒருவர் வழக்குக்குப் போனார், மேல்நிலைப் பள்ளிகளில் வழங்கப்படுகின்ற ஆசிரியர் பயிற்சி தரமானதாக இருக்க முடியாது, ஆகவே வழங்கக்கூடாது என்று. அதிலே ஒரு சிக்கல் ஏற்பட்டு உயர்நீதிமன்றத்திலே அவர்களுக்கு வழங்கியது செல்லாது என்று சொன்னார்கள். அதனாலே உச்சநீதிமன்றத்திற்குப் போய் இரண்டு ஆண்டுகாலம் நாங்கள் வழங்கிவிட்டோம். அப்படி வழங்கப்பட்ட மாணவர்கள் பெண்கள். அவர்கள் முறைப்படி படித்ததாகத்தான் கருதவேண்டும். ஏற்கெனவே நீதிமன்றத்தால் தடை செய்யப்படாத ஒரு நிலையில அவர்கள் படித்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தேர்வு எழுதவும், அவர்களுக்குத் தேர்வு முடிவைத் தெரிவிக்கவும் அனுமதிக்க வேண்டும், இவை அரசாங்கமே நடத்திய பள்ளிக்கூடங்கள், தனியார் அல்ல என்று உச்சநீதிமன்றத்திலே சொன்னபோது அந்த 3000 பேருக்கு மட்டும் அவர்களுக்கு உரிய தேர்வு முடிவை அறிவிக்கலாம் என்று உச்சநீதிமன்றம் தெரிவிதத்து. ஆகவே அது வேறு பிரச்சினையாகப் போயவிட்ட காரணத்தால் அழகிரி அவர்கள் காலையிலே தெரிவித்த அந்தச் செய்தியினால் நான் கொஞ்சம் மகிழ்ச்சி அடைந்தாலும்கூட, அதை இதனுடன் இணைக்க முடியவில்லை. அது வேறு பிரச்சினை. இது வேறு பிரச்சினை. இருந்தாலும்கூட தமிழ்நாட்டிலே உள்ள இளைஞர்களோ, மாணவர்களோ யாராக இருந்தாலும், பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், வீடு தீப் பிடித்தால்கூட உடனே அரசு உதவி செய்கிறது. தற்கொலை செய்துகொண்டு ஒரு குடும்பம் பாதிக்கப்பட்டால்கூட உதவி செய்கிறது. எவரோ விற்கிற விஷச்சாராயத்திற்கு அரசு அவ்வப்போது தண்டனை போல உதவித்தொகை செலுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே எந்தவிதத்திலே பாதிக்கப்பட்டாலும்-தமிழக அரசு அவர்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் நன்மை செய்ய முடியுமா என்கிற முயற்சியில் ஈடுபட்டிருப்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.



1999 மார்ச் 20] [பேராசிரியர் க. அன்பழகன்]

முற்பகல் 11-45

அதே முறையில் இரண்டாண்டுகாலம் தொடர்ந்து ஆலோசித்து, முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே கூடி ஆலோசித்து, இருக்கிற சட்டத்திற்குட்பட்டு நாம் என்னதான் செய்ய முடியும் என்று கருதித்தான் அரசாங்கத்தினுடைய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, மாவட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்று மத்திய அரசு நிதி உதவியுடன் நடத்துகிற பயிற்சிப் பள்ளி ஆகிய பள்ளிகளில் சேர்க்கிற மொத்த மாணவர்களில் 30 விழுக்காடு இந்த பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அவர்களில் முன்னுரிமை உள்ளவர்களுக்கு முதல் இடம் என்று வழங்கப்பட்டுள்ளது. அதுவே அரசு செய்யக்கூடியதாக இருந்தது. ஆந்திராவிலே இதே நிலைமை ஏற்பட்டு, அந்த மாநிலத்தில், நீதிமன்றத் தீர்ப்பினால் தொடர்ந்து படிக்க முடியாத நிலைமைக்கு ஆளான 15 ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு வழி காணப்பட்டிருந்தால், அதே முறையை இங்கேயும் கையாளலாம் என்று நம்முடைய அதிகாரிகளே போய்ப் பார்த்து, கருதி முயற்சித்து, அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. ஏனென்றால், அங்கேயும் உயர்நீதிமன்றத்தில் இப்படிப்பட்ட முறையில் முறைகேடாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு வேறு பயிற்சி முறையில் இடமளிக்கக் கூடாது என்று அந்த உயர்நீதிமன்றமும் தீர்ப்பளித்து விட்டது. இருந்தாலும்கூட, இந்தப் பிரச்சினையில் D.I.E.T. மற்றும் அதேபோல அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்று இருக்கிற பள்ளிகளிலே 30 விழுக்காடு இடம் மூலம் சேர்க்கப்படுகின்ற 680 அல்லது 700 என்ற எண்ணிக்கையை உயர்த்துவதற்கு ஏதேனும் வழி உண்டா என்று காணப்படும்.

மற்றொன்று, இதிலே முன்னுரிமை என்று நாங்கள் சொல்வது நாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட முறையல்ல. இரண்டாண்டுகளாகப் படித்து, தேர்வெழுதி, படித்ததாகச் சொல்லப்பட்டு தேர்வெழுதி, அவர்களுக்கு—அந்தச் சான்று வழங்கப்படாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு முன்னுரிமை; பிறகு, இரண்டாவது ஆண்டு பயிற்சி முடிக்காதவர்களுக்கு; அதற்குப் பின்னர், முதலாவது ஆண்டு பயிற்சி முடிக்காதவர்களுக்கு. அப்படி வழங்குவதிலே ஒருவேளை அதிக எண்ணிக்கை வழங்க முடியுமானால், இருக்கிற அரசு பள்ளிக்கூடங்களில் 30 விழுக்காட்டுக்கு மேல் இட ஒதுக்கீடு செய்தால், யாராவது உரிமை கோரி வழக்கு போட்டால், அது அடிபட்டுப் போனால் என்ன செய்வது என்பதற்காக, அந்த அளவு இடத்தை அரசு ஒதுக்கியுள்ளது. ஏனென்றால், மத்திய அரசு தந்திருக்கின்ற விதிமுறைகளின்படி அந்த D.I.E.T. நடைபெறுகிறது. அதிலே நாம் இடம் ஒதுக்குகிறபோது, முப்பதுக்கு மேல் ஒதுக்கினால் சில நேரங்களில்

யாராவது, "எங்களுக்குக் கிடைக்கிற வாய்ப்பை இந்தப் பழைய மாணவர்களுக்கு ஒதுக்கிவிட்டார்கள்" என்ற வழக்கு தொடரும் நிலைவருமானால், நம்முடைய நிலை அப்போது ஒருவிதமாக பாதிக்கப்படும் என்பதற்காக அதிக இடம் ஒதுக்கவில்லை. இருந்தாலும்கூட, சிறுபான்மை பள்ளிக்கூடங்கள் சில நடைபெறுகின்றன. நீண்டகாலமாக முறையாக நடைபெறுகின்ற அந்தப் பள்ளிக்கூடங்களில் இவர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்க முயற்சித்தபோது, சிறுபான்மை உரிமையை, இந்தப் பெயரால் அரசு பறித்துவிட்டது என்று அவர்கள் யாராவது மாறுபடுவார்கள் என்ற காரணத்தால் வலியுறுத்தவில்லை. இருந்தாலும்கூட இந்தப் பிரச்சினையில், மேலும் என்னதான் இந்த அரசு செய்ய முடியும் என்றாலும் இந்த அரசு சட்டப்படி முழு மனதோடு செய்யக்கூடிய எந்தக் காரியத்தையும் வரவேற்கிறது. இதற்காக கொஞ்சம் செலவானாலும்கூட அதைப்பற்றி அரசு கவலைப்படாது. ஆனால் அதற்காக 192 பள்ளிகளிலும் இப்பயிற்சியை நாம் ஆரம்பிக்க முடியாது. நடுநிலைப்பள்ளிக் கூடங்கள் இருக்கிற நிலையில், அங்கே ஆசிரியர் பயிற்சி என்று சொன்னால் யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அது பயிற்சியே ஆகாது. உண்மையைச் சொல்லப் போனால், இருக்கிற பள்ளிக்கூடங்களிலேயே ஆசிரியர் பயிற்சி என்று சொன்னால் நிச்சயமாக நீதிமன்றத்திலே அடிபட்டுப் போகும். அதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் எவ்வளவு இடம் கிடைக்க முடியுமோ அதற்கு வேண்டுமானால், அதற்கு என்றைக்கும் நாங்கள் கடமைப்பட்டவர்கள் என்ற முறையில் முயற்சிக்கத் தயார். இதிலே அரசினுடைய நல்ல எண்ணத்தை அந்த மாணவர்களுக்குத் தெரிவிக்க நான் பலமுறை முயற்சித்தேன். இன்னும் சொல்லப்போனால், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு அன்புக்குரிய நண்பர்தான் அந்த மாணவர்களோடு என்னை வந்து பார்த்தார். அந்த மாணவர்களிடத்திலே, இதற்கு மேலே என்ன செய்ய முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்றுதான் அவர்களைக் கேட்டேன். இந்த அரசுக்கு செய்யக்கூடிய காரியத்தைச் செய்யாமல் இருக்கிற நோக்கம் இல்லை. இந்தக் காரியத்தை எந்த முறையில் சட்டப்படிச் செய்ய முடியும் என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்து பேசாவிட்டாலும்கூட, எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவே ஆலோசனை நடத்தி, சட்டப்படியான ஆலோசனையை வழங்கினால்—எதிர்கட்சித் தலைவர் அமைச்சரைப்போல; அவருக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. ஆகவே அவரே ஆலோசனை நடத்தி—என்ன செய்ய முடியும், என்ன விகித முறையில் அல்லது என்ன நடைமுறை மூலமாக செய்முறைப்படுத்த முடியும் என்பதைத் தெரிவிக்கலாம். அந்தக் குழுவிலே யார் யார் இடம்பெற வேண்டும் என்பதை—இன்றைக்கு



சனிக்கிழமை, முதலமைச்சரைக் சந்தித்து நான் உரையாட முடியவில்லை. அவருக்கு உடல்நலக் குறைவு. திங்கட்கிழமை அன்றையதினம் அவரோடு கலந்து, யார் யார் அந்தக் குழுவிலே இருப்பார்கள் என்று-தெரிந்து, அரசு அறிவிக்கும்; இந்த அரசு எல்லா வகையிலும் ஒத்துழைக்கும். அரசுக்கு இதிலே மாறுபாடு இல்லை. நீதிமன்றதோடு உள்ள மாறுபாட்டைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்கும், மற்றும் இந்த உணர்விலே உடன்பாடு கொண்டிருக்கிற மற்றவர்களுக்கும்தான் உரியது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளபடியே மாணவர்களுக்கு அந்த நேரத்திலே யார் என்ன சொல்கிறார்களோ அதுதான் சரி என்று படும். அதற்குமேல் அவர்களுடைய கஷ்டத்தினாலே மேலும் சிந்திப்பது கடினம். நானும் மாணவனாக இருந்தவன்தான்; திரு அழகிரியும் மாணவனாக இருந்தவர்; அப்போது யார் பின்னாலே வேண்டுமானாலும் போயிருப்போம். அது வேறு. ஆகவே, மாணவர்களாக இருக்கிறபோது, அவர்களுக்கும் வருத்தம் இருக்கிற காரணத்தினால், இந்தப் பிரச்சினையிலே இருக்கிற சிக்கல்களை அவர்கள் புரிந்துகொள்ள முடியாது. எந்தச் சிக்கலாக இருந்தாலும், அதில் எவ்வளவு தீர்க்க முடிந்தாலும் இந்த அரசு ஒத்துழைக்கும். தீர்ப்பதற்கு வழிகாட்டுவதற்காக எதிர் கட்சித் தலைவர் தலைமையில் குழு அமைக்கப்படும்.

இதை எண்ணிப்பார்த்து நல்ல எண்ணத்தோடுதான் இந்த அரசு இருக்கிறது என்பதை அந்த மாணவர்கள் உணர்ந்து, அவர்கள் அனைவரும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு அரசினுடைய நல்ல எண்ணத்தைப் புரிந்துகொண்டு, தங்களுடைய போராட்டத்தைக் கைவிடவேண்டுமென்று நான் என்னுடைய சார்பாக மட்டுமல்ல, முதலமைச்சர் சார்பாகவும், இந்த அவை சார்பாகவும், அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 11-50*

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை மிகவும் மதிக்கிறேன். அவரைத் தலைவராகப் போட்டதை வேண்டாம் என்று சொல்கிறேன் என்று நினைக்க வேண்டியதில்லை. அதாவது கல்வியமைச்சர் தலைமையிலே இந்த குழு இருக்க வேண்டும். ஏனென்றால் யாரையாவது எங்களில் நான்கு, ஐந்து பேரைப் போட்டால் ஏதோ suggest பண்ணமுடியும் அவ்வளவுதான். கல்வி அமைச்சர் தலைமையிலே இருந்தால்தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, இயக்குநர்களோ, மற்றவர்களோ அதிலே

கலந்துகொள்வார்கள். கல்வியமைச்சர் தலைமையிலே குழு போட்டு, எதிர்க்கட்சித் தலைவரை துணைத் தலைவராகப் போட்டுக்கொள்ளுங்கள், அல்லது அமைப்பாளராகப் போட்டுக் கொள்ளுங்கள் அல்லது கல்வித் துறைச் செயலாளரையாவது போட்டால்தான் அந்தக் குழு ஆக்கபூர்வமானதாகச் செயல்பட முடியும். இல்லையென்றால் ஒரு வேண்டுகோள் மாதிரி எழுதிக்கொடுக்கப்பட்டு, அது முடியும், முடியாது என்கிற மாதிரி சூழ்நிலை வந்துவிடும். எனவே, கல்வி அமைச்சர் தலைமையிலே குழு அமைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் நான் உறுப்பினராக இருப்பதிலே கூடத் தடையில்லை. பிரச்சினையானது மாணவர்களுடைய பிரச்சினை. எதற்காகச் சொல்கிறேன் என்றால் செய்யக்கூடியது என்னவென்று ஆராய்ச்சி செய்கிறபோது, ஆய்வு நடத்துகிறபோது, இயக்குநர்கள், அந்தத் துறையினுடைய செயலாளர் மற்றும் தேவையானால் சட்டத் துறை செயலாளர் எல்லோரும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குவார்கள். வேறு ஏதாவது வழக்குரைஞர்கள் இதையொட்டிய சட்டப் பிரச்சினையை அணுகக்கூடியவர்கள் யாரும் ஆலோசனை சொல்வதாக இருந்தாலும் தாராளமாகச் சொல்லலாம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னது போல கல்வியமைச்சர் தலைமையிலே இருந்தால்தான் அது கொஞ்சம் weight ஆக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கருத்தை நீங்கள் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். திருநாவுக்கரசு சொல்வதற்கு முன்னாலேயே, உங்களுடைய பெயரை அறிவித்த உடனேயே எழுந்து சொல்லியிருக்க வேண்டும். திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த அளவிற்கு முடிவு எடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஒரே ஒரு கருத்தை மட்டும் இந்தச் சபையிலே சொல்ல விரும்புகிறேன். 219 பள்ளிகளிலே...... ஒன்றே ஒன்று.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கருத்தை எல்லாம், அந்தக் குழுவிலே போய்ச் சொல்லுங்கள்.



**திரு. மு. அப்பாவு:** 219 பள்ளிகளிலே படித்த ஆசிரியர் பெருமக்களுக்கு சான்றிதழ்கள் வழங்காத நிலையிலே, அதே பள்ளிகளில் அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், ஓர் ஆண்டுக்கு முன்னால் படித்தவர்கள், இப்போது பள்ளிகளிலே தொடர்ந்து வேலை பார்க்கிறார்கள், தமிழ்நாட்டிலே பணியாற்றி வருகின்றார்கள். அது ஒரு...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தயவுசெய்து இந்தப் பிரச்சினையை வேறு பக்கம் திருப்ப வேண்டாம். என்ன புகார் இருந்தாலும் எழுதிக்கொடுங்கள், நடவடிக்கை எடுக்கிறோம்.

## 5. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே கலந்துகொள்கிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு எங்கள் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மகிழத்தக்க வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியை 35,00,000 ரூபாயிலிருந்து ஆண்டிற்கு 50,00,000 ரூபாயாக உயர்த்தியதற்கு இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் ஒரு கோரிக்கை. இன்றோ, நாளையோ என்று இருக்கக்கூடிய மத்திய அரசு கூட M.P. தொகுதி வளர்ச்சி நிதியை ஒரு கோடி ரூபாயிலிருந்து இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் இதனை மறுபரிசீலனை செய்து, ஆண்டிற்கு இரட்டிப்புச் செய்து, 70 இலட்சம் ரூபாய் என்று பதிலுரையிலே அறிவிக்க வேண்டுமென்று—உடல்நிலை காரணமாக அவைக்கு வராவிட்டாலும்கூட—இந்தக் குறிப்பை நிச்சயமாக அவர் படித்துப்பார்த்து பதிலுரையிலே M.L.A. தொகுதி வளர்ச்சி நிதியை ஆண்டிற்கு 70 இலட்சம் ரூபாய் என்று அறிவிக்க வேண்டுமென்று நான் பணிவோடு எல்லோர் சார்பாகவும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[1999 மார்ச் 20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாருமே சரியாகக் கவனிக்கவில்லை. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** M.L.A. தொகுதி வளர்ச்சி நிதியை யாரும் சரியாகக் கவனிக்கவில்லை என்று இங்கே நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வளர்ச்சி நிதியைக் கவனிக்கவில்லை என்று சொல்லவில்லை. நீங்கள் சொன்னதைக் கவனிக்கவில்லை என்று சொன்னேன்.

முற்பகல் 11-55

**திரு சி. ஞானசேகரன்:** அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடத்தக்க இன்னொரு அம்சம் என்னவென்று சொன்னால், நம்முடைய பத்திரிகை துறையைச் 'சார்ந்தவர்கள், நம்முடைய விவாதங்களைச் சுடச் சுட மக்களுக்கு எடுத்து வைப்பதிலும், அரசினுடைய திட்டங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதிலும் விரைவாகச் செயல்படக்கூடிய அந்தச் செய்தியாளர்களுக்கு ஓய்வூதியம் 1,000 ரூபாய் என்பதை 1,500 ரூபாய் எனவும், அவர்கள் இறக்க நேரிட்டால் அவர்களுக்கு வழங்கப்படுகிற தொகையை ரூபாய் 25,000-த்திலிருந்து ரூ.40,000 என உயர்த்திக் கொடுத்ததையும் நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்

அதேபோல், வருகிற ஆண்டில் தூத்துக்குடியிலே ஒரு மருத்துவக் கல்லூரியையும், எங்களுடைய வேலூரிலே அதற்கு அடுத்த ஆண்டு ஒரு அரசு மருத்துவக் கல்லூரியையும் நிறுவ இருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. அதற்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய ஒரு குறிப்பு, இந்திய மருத்துவ மன்றத்திலிருந்து இன்னும் அதற்கு அனுமதி கிடைக்கவில்லை என்று முதல்வர் அவர்கள் அதிலே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. தலித் எழில்மலை அவர்கள் கூட இந்த அரசாங்கத்திடமிருந்து எங்களுக்கு மனுவே வரவில்லை என்று வேலூரிலே ஒரு கூட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நான் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம்......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே அரசாங்கம் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பது என்று சொன்னால், Medical Council



1999 மார்ச் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

of India-க்குத்தான் விண்ணப்பம் போட முடியும். அவர்கள் இங்கே வந்து Inspection செய்து மத்திய அரசாங்கத்திற்கு அறிக்கை தந்ததற்குப் பிறகுதான், மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்கும். இதுதான் இங்கிருக்கக்கூடிய Procedure. எனவே, எங்களைப் பொறுத்தவரையிலே கடந்த ஆண்டே வேலூருக்கும் விண்ணப்பம் போட்டுவிட்டோம், தூத்துக்குடிக்கும் விண்ணப்பம் போட்டுவிட்டோம். வேலூருக்கும் ஒரு Dean நியமித்து விட்டோம், தூத்துக்குடிக்கும் ஒரு Dean நியமித்து விட்டோம். இரண்டு பேரும் பணியாற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், Medical Council of India ஏற்கெனவே அகில இந்திய அளவிலே பல மாநிலங்களிலே குறிப்பாக கல்லூரி தொடங்குவது குறித்து பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி இருக்கின்ற காரணத்தினாலே Inspection Committee அனுப்புவதிலே காலதாமதம் ஆகியிருக்கிறது. இருந்தாலும், இந்த மாதம் அல்லது ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதிக்குள்ளாக அவர்கள் அந்த Committeeயை அனுப்புவதாக இருக்கிறார்கள். வந்ததற்குப் பிறகுதான் பரிசீலிக்கப்படும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்துறையிலே ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிக்கு இன்னும்-I.M.C.-இந்திய மருத்துவக் கவுன்சிலுடைய அங்கீகாரம் பெறப்படவில்லை என்றும் அதனால் அங்கிருக்கிற மாணவர்கள் பட்டங்களை வேறு மாநிலங்களில் பதிவு செய்யாமல் இருக்கின்ற நிலைமை குறித்தும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்துறை கல்லூரியைப் பொறுத்தவரையில், உச்சநீதிமன்றத்திலே அதற்கான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களும் தற்காலிகமாக அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்தக் கல்லூரி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதில் இருப்பவர்களுக்கு இப்போது எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்திய மருத்துவ மன்றத்திற்கு மனுக்களை அனுப்பியதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய மாவட்டத்தின் மண்ணின் மைந்தர். அடுத்த ஆண்டு என்று நீங்கள் குறிப்பிட்டிருப்பதை மாற்றி தூத்துக்குடியோடு சேர்த்து வேலூருக்கும் அரசு மருத்துவக் கல்லூரியை,

வருகிற ஆண்டிலேயே கொண்டு வருவதற்கு முழு முயற்சி எடுத்து ஏற்கெனவே நீங்கள் Special Officer எல்லாம் போட்டுவிட்டு இருக்கிற காரணத்தினாலே, இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து இயக்குவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதியாதாரத்தைக் கண்டுபிடித்து அவர்கள் நிதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே எதிர்க் கட்சி என்ற வகையில் நாங்கள் நிறைகளை அதிகமாகச் சொல்வதைவிட, இருக்கக்கூடிய குறைகளைச் சொல்வதுதான் பொருத்தமான ஒன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து மட்டுமல்ல, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்தும்கூட.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்பதை அவர்கள் சொல்லி, தட்டிக் கேட்பது மட்டும் போதாது. நீங்கள் குட்டியும் கேட்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள் நான் இங்கே தட்டியும் அல்ல, குட்டியும் அல்ல, திட்டியும் அல்ல, சுட்டிக்காட்ட வேண்டிய சில கருத்துக்களை சொல்வது நிச்சயமாக என்னுடைய கடமை என்ற வகையிலே நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்திலே என்னதான் இருக்கிறது? இதைப் பார்க்கிற நேரத்திலே எனக்கு தெனாலி இராமன் கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது. தெனாலி இராமன் ஏற்கெனவே ஒரு மன்னரிடம் போனபோது மன்னர் அவர்கள் தெனாலி இராமனைப் பார்த்து, உனக்கு நான் ஒரு வீட்டைத் தருகிறேன். அந்த வீட்டை நீ வெள்ளையெல்லாம் அடித்து, ஓவியம் எல்லாம் தீட்டி வை. நான் வந்து பார்க்கிறேன் என்று மன்னர் ஒரு வீட்டை வழங்கவே, தெனாலி இராமன் போய் அந்த வீட்டைப் பார்த்து, அதற்கு வெள்ளையெல்லாம் அடித்து, அதற்கு பொருள்களையெல்லாம் கூட மன்னரிடம் பெற்றுவிட்டுச் சென்றுவிட்டார். மன்னர் அதற்குப் பொற்கிழியும் வழங்கிவிட்டார், பொருளும் தந்துவிட்டார். ஆனால், அந்த தெனாலி இராமனோ வாங்கிய பொற்கிழியை எடுத்துக்கொண்டு போய் தூங்கிவிட்டானாம். பின்னர் மன்னர் வந்து ஓவியத்தைப் பார்ப்பார் என்று பயந்து, எழுந்து, ஒரு மணி நேரத்திலே மன்னர் வந்துவிட்டால் என்ன செய்வது என்று உடனடியாக சாணத்தைத் துடைப்பத்தில் தேய்த்து ஓவியம் தீட்டுவதுபோல் 4, 5 கோடுகளைப் போட்டானாம். பிறகு மன்னர்





வந்து பார்த்து இது என்ன என்று கேட்டபோது இதுதான் குதிரையின் வால் என்று சொல்ல, சரி வால் இருக்கிறது, குதிரை எங்கே என்று மன்னர் கேட்டபோது, அது சுவற்றுக்கு அந்தப் பக்கம் இருக்கிறது என்று தெனாலி இராமன் சொன்னதாக ஒரு கதையை—நான் சொல்லவில்லை—நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1966 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, மார்ச் மாதம் 4-ஆம் தேதி இதே மன்றத்திலே அவர்கள் உரையாற்றுகிறபோது அன்றைய காங்கிரஸ் ஆட்சியினுடைய பட்ஜெட்டில் இப்படியெல்லாம் விவாதித்திருக்கிறார்கள். நானும் இங்கே அதே கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*நண்பகல் 12-00*

இந்த பட்ஜெட் ஒரு திட்டத்தையும் விவசாயிகளுக்குக் கொடுக்கவில்லை. நெசவாளர்களுக்கு சரியான திட்டத்தைக் கொடுக்கவில்லை. படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கான திட்டத்தையும் இதிலே கொடுக்கவில்லை. மீனவர்களுக்கும் சரியான திட்டத்தைக் கொடுக்கவில்லை. இங்கே செத்துமடியும் விவசாயிகளுக்கும், சோற்றுக்குத் திண்டாடுகிற நெசவாளர்களுக்கும், துவண்டு வாடுகிற தொழிலாளர்களுக்கும், திசை தெரியாமல் போகக்கூடிய கடலோர மீனவர்களுக்கும், படித்து முடித்து வேலை தேடி அலையும் இளைஞர்களுக்கும், நிரந்தரப் பணி எனக் கோருகின்ற சத்துணவுப் பணியாளர்களுக்கும், லஞ்சப்பிடியின் கோரப்பிடியிலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிற பொது மக்களுக்கும் சரியான திட்டத்தை இது ஏன் தரவில்லை என்றுதான் நாங்கள் ஏக்கத்தோடு இதைப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

விவசாயிகளைப்பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் 1996 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில், அவர்கள் திருச்சியிலே மாநாடு போட்டு, கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1000/- கொடுக்கவேண்டுமென்று முழக்கமிட்ட ஒரு கழகம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். ஆட்சிப் பீடம் ஏறிய பின்னாலே அந்த கோஷத்தையே மறந்துவிட்டு, ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆன பின்னாலும்கூட, இன்னும் விவசாயிகளுடைய குறைகளைப் புரிந்துகொள்ளாமல் ஒரு டன் கரும்புக்கு ரூ.1000/- என்று இன்னும் அறிவிக்காமல் இருப்பது, இது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இழைக்கிற ஒரு பெரும் அநீதியாகவும், துரோகமாகவும் நாங்கள் இங்கே

கருத கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக இந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய குறைகள் தீர ஆய்ந்து கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1000/- என்று அறிவிக்கவேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக நெல் கொள்முதல். இங்கே தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களானாலும், அல்லது எங்கள் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டத்திலேகூட நெல் கொள்முதல் என்று வருகிறபோது விவசாயிகளுக்கு நெல் உற்பத்தி விலையைக் கூட அவர்களாலே பெறமுடியாமல் இப்போது அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு குவிண்டாலுக்கு ரூ.100/-ஆவது உயர்த்திக் கொடுத்தால்தான் விவசாயி வாழமுடியும் என்கிற ஒரு நிலை இருக்கிறது. இன்று கேள்வி நேரத்தில்கூட காய்கறியைப் பற்றியெல்லாம் சொல்கிறபோது எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர்கூடச் சொன்னார்கள். தக்காளி போன்றவற்றையெல்லாம் டிராக்டரிலே போட்டு மிதித்து ஓட்டக்கூடிய நிலையைப் பார்க்கிறோம் என்று சொன்னார்கள். விவசாயிகள் விளைவித்த பொருட்களுக்கு சரியான விலை கிடைக்காமல் அந்த விவசாயி கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே மடிந்து கொண்டிருக்கிறான். அவர்களுடைய வாழ்க்கையிலே எந்தவிதமான ஏற்றமும் இல்லாமல் தததளித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அரசு நம்முடைய பட்ஜெட்டிலே சொல்கிறபோது கூட, நம்முடைய முதல்வர் அவர்கள் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்ற குறளை மேற்கோள் காட்டி உழுது, தானும் உண்டு, மற்றவர்களை...(குறுக்கீடு)

*__மாண்புமிகு திரு. கா.நா. நேரு:__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நெல்லுக்கு ஊக்கத்தொகை ரூ.100/- இந்த அரசின் சார்பாக வழங்கவேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு, நெல் உற்பத்தியாளர்களுக்கு இதுவரை எதுவுமே செய்யாதது போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது அவ்வளவு சரியாக இருக்காது. இந்தியாவிலேயே நெல் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கியது நம்முடைய கலைஞர் அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பஞ்சாப் மாநிலத்திலே ஒரு கோடி டன் அளவிற்கு அந்த விவசாயிகள் நெல்லை வைத்திருக்கிறபோது மத்திய அரசு நிர்ணயித்த விலையை அவர்கள் வழங்கத் தயாராக இல்லை. ஆனால் இங்கு மாநில அரசுக்கு பொது விநியோகத் திட்டத்திற்கு அரிசி கையிருப்பு





இருந்தபோதும்கூட, விவசாயிகளுடைய நெல்லை வாங்கவேண்டும், அவர்களுக்கு ஊக்கத்தொகை அளித்து வாங்கவேண்டுமென்று முதல் ஆண்டே குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35/- இடைநிலை செலவிற்காக வழங்கினோம். இந்த ஆண்டு கிட்டத்தட்ட பொது விநியோகத் திட்டத்திற்காக வாங்குகின்றபோது குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50/- ஊக்கத்தொகையாக வழங்கி, அதற்கு மட்டும் மூன்று மாத காலத்தில் ரூ.50 கோடியை விவசாயிகளுக்காகக் கழக அரசு வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள்கூட நிறைய பேர் இதைக் கைதட்டி வரவேற்கிறீர்கள். ஆனால் உண்மையிலேயே நீங்கள் நெற் களஞ்சியம் இருக்கக்கூடிய இடத்திற்குச் சென்று விவசாயிகளை நேரில் பார்த்துப் பேசி, நெல்லுக்கு உரிய விலை கிடைக்கிறதா என்று மனம் திறந்து கேட்டுப் பாருங்கள். நீங்கள் வேண்டுமானால் இங்கே மேசையைத் தட்டலாம். ஆனால் மக்கள் மத்தியிலே போகிறபோது நாம் எந்த அளவுக்குச் சிரமப்படுகிறோம்; இந்த அரசை எப்படி மக்கள் திட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். (குறுக்கீடு) I am not yielding. (Interruptions) It is not a point of order. What is the point of order they find out?

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் விவசாயிகள் வேலூரிலே மட்டும்தான் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். தஞ்சாவூரிலேயும் இருக்கிறார்கள், அதனாலே அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நீங்கள் இப்படிச் சொல்ல முடியாது. தஞ்சாவூர் மாவட்டத்திலேகூட இப்போது எப்படி மக்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்ஜெட்டிலே சொல்கிறபோது கூட்டுறவுக் கடன்களுக்காக ஜப்தி செய்வதில்லை, ஜப்தியே இல்லை என்று அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனால் நம்முடைய தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலேயும் இப்போது ஜப்தி என்பது மிக ஜரூராக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்திற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய திருவாரூர் மாவட்டத்தில் வலங்கைமான் தாலூகாவிலே, ஆலங்குடி என்கிற கிராமத்திலே முகம்மது

ஜின்னா என்ற சிறு விவசாயியினுடைய வீட்டிலே ஜப்தி, அதாவது கூட்டுறவுத் துறையினுடைய அதிகாரிகள்......

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிச் சட்டமன்றத்தில் பேசப்பட்டு, முதல்வர் அவர்களால், விளக்கம் கொடுக்கப்பட்டு, அது மறுபடியும் சரி என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கு மாற்று காரணங்கள் எதுவும் சொல்லாமல் இருக்கிறபோது திரும்பத் திரும்ப இதைச் சொல்வது நல்லதல்ல. தெனாலி இராமன் கதையைப் பற்றி நானும் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். யார் நிலைக் கண்ணாடிக்கு முன்னாலே நிற்கிறார்களோ அவர்கள் முகம்தான் தெரியுமே தவிர வேறொருவர் முகம் தெரியாது என்பதை தயவுசெய்து நீங்கள் மறந்து விடக் கூடாது என்பதை நினைவுபடுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழகம் முழுவதும் ஜப்தி ஜரூராக நடந்து கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகவே சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். அதிகாரிகளிடமும் சொல்லப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பிறகு தமிழ்நாடு முழுவதும் வசூலே மந்தமாகியிருக்கிறது. கடன் பாக்கிதாரர்களை 6 வகையாகப் பிரித்திருக்கிறார்கள். 5 ஏக்கர் நிலத்திற்கு மேல் இருப்பவர்கள், 10,000 ரூபாய்க்கு மேல் கடன் வாங்கியிருப்பவர்கள், விவசாயத்தோடு பிற தொழில் செய்கின்றவர்கள், விவசாயத்தோடு அரசுப் பணியில் இருப்பவர்கள், இப்படிப்பட்டவர்களிடம் நீண்டகாலமாக நிலுவையாய், இருக்கின்ற அந்தத் தொகையை, நீண்டகாலத்திற்கு முன்பாகக் கொடுத்திருக்கின்ற அந்தக் கடனை வசூல் செய்வதற்காகத்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும்கூடச் சொல்லப்போனால் NABARD வங்கியும், கூட்டுறவுத் துறையும், தமிழ்நாடு அரசும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் முதல் ஆண்டு கொடுத்த தொகையிலே 40 சதவீதம் வசூல் செய்தால்தான் மறு ஆண்டு மானிய வட்டியிலே நமக்குக் கடன் தர இயலும். இப்படி கடன் வாங்கிக்கொண்டு பெரிய வசதி படைத்த விவசாயிகளே திருப்பிச் செலுத்தவில்லை என்றால், சிறு விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியிலே கடன்தர இயலாது. அதற்காகத்தான் இப்போது பெரிய விவசாயிகளிடம் சென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜப்தி என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்டு இந்த இடத்திலே தவறு செய்திருக்கிறார்கள் என்று



சொன்னால் அந்த அதிகாரி மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். பெரிய விவசாயிகளிடம் மட்டும்தான் கேட்கப்படுகிறது. ஜப்தி என்று சிறிய விவசாயிகளிடம் செல்லவே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது காங்கிரஸ் ஆட்சியிலே இன்றைய முதல்வர் கூறியதாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அவருக்குக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, உள் குத்தகைதாரர்கள், குத்தகைதாரர்கள் பிரச்சினை அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் ஏற்பட்டது. அப்போதுகூட ஏறத்தாழ எட்டாயிரத்துச் சொச்சம்பேர் வெளியேற்றம் செய்யப்பட்டார்கள். அன்றைக்குப் போராட்டம் நடைபெற்று, அந்தப் போராட்டத்தை தலைமையேற்று இந்த அவையினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. ஜி. நாராயணசாமி அவர்கள் ஏறத்தாழ 3 மாதகாலம் சிறைத் தண்டனை அனுபவித்து வெளியே வந்தார்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது தெனாலி இராமன் கதைக்கு, பதிலாக, கண்ணாடிமுன் நிற்பவர்களுடைய முகம்தான் தெரியும் என்று சொன்னார்கள். நான் கண்ணாடியைப் பற்றிச் சொல்லவில்லை. சுவரைப் பற்றியும் சுவருக்குப் பின்னாலே இருக்கக்கூடிய குதிரையைப் பற்றியும் சொல்லியிருக்கிறேன். இது நான் அல்ல. மாண்புமிகு முதல்வர் அவர்கள் —அன்றைய எதிர்க்கட்சித் தலைவர்—சொல்லியிருக்கிறார் என்கிற கருத்தைத்தான் நான் இங்கே மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கண்ணாடியைச் சொல்லிப் பலன் இல்லை.

அதேபோல மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இங்கே ஜப்தி என்பது இல்லை என்று சொன்னார்கள். ஜப்தி என்பது இல்லை என்று சொன்னால், இப்போது தஞ்சாவூர் மாவட்டம், நாகை மாவட்டம், திருவாரூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலே அரசியல் கட்சிகளெல்லாம் ஏன் ஜப்தி கூடாது என்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** 5 ஏக்கருக்கு உட்பட்டவர்களில் இன்னாரை ஜப்தி பண்ணியிருக்கிறீர்கள்? இன்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்குமே?

[1999 மார்ச் 20

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டுச் சொல்வது, நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எடுத்துக் கொண்டால் எடுத்துக் கொள்ளுங்கள் இல்லாவிட்டால் நீங்கள் எங்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது. குறிப்பிட்டு இந்த இடத்திலே இந்தமாதிரி நடவடிக்கையிலே ஈடுபட்டார்கள் என்று சொல்லலாம். ஏற்கெனவே நடந்ததற்கு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே பதில் சொல்லிவிட்டார்கள். அதைத் திரும்பவும் சொல்லக்கூடாது.

**திரு. சி. ஞானசேகரன்:** தொடர்ந்து அதேபோல எங்களுடைய மாவட்டத்திலே நடந்துகொண்டுதான் இருக்கிறது. சிறு விவசாயி, குறு விவசாயி ஆகியோரிடத்திலே நடந்துகொண்டு தான் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர்கள், கூட்டுறவுத் துறை அமைச்சரானாலும் சரி மற்ற அமைச்சர்களானாலும் சரி, இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்கும்போது--கூட்டுறவுக் கடன் ஏன் வருகிறது? வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கு நீங்கள் ஒரு— ஆராய்ச்சியைச் செய்யலாம். ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலேகூட bonus திட்டம் அறிவிக்கப்பட்டது. காரணம், NABARDலிருந்து நாம் பணத்தைப் பெற முடியாது என்ற காரணத்தினாலே வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கு bonus திட்டத்தைக் கண்டுபிடித்தார்கள்—அதேபோல இந்த அரசும் ஏன் ஒரு bonus திட்டத்தைக் கண்டுபிடிக்கக்கூடாது. Atleast நீங்கள் வட்டியையாவது தள்ளுபடி செய்யலாம். அதையும் நீங்கள் செய்யாமல் இருக்கிற காரணத்தினாலே விவசாயிகள் பெரிய கடன் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய நிலையைக் கொஞ்சம் புரிந்து கொண்டு வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-10*

அதேபோல தொழிற்சாலைகள் இந்த பட்ஜெட்டிலே ஏதோ புதியதாக வரும் என்று பார்த்தோம்; ஒன்றும் வந்தபாடாக இல்லை. ஏற்கெனவே இருந்த Hyundai, ஏற்கெனவே இருந்த Mitsubishi, ஏற்கெனவே இருந்த Ford இதை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் புதியதாக ஏதாவது தொழிற்சாலை பொதுத் துறையிலே கொண்டு வந்திருக்க வேண்டும்.



1999 மார்ச் 20] [திரு. சி. ஞானசேகரன்]

அப்படிக் கொண்டு வந்தால்தான் இங்கே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு, படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் கால அறிக்கையிலேசொல்கிற போது புதிய தொழிற்சாலைகளையெல்லாம் திறப்போம் என்று சொன்னார்கள். ஆனால், மூடிய தொழிற்சாலைகளைத் திறப்பதற்குப் பதிலாக எங்களுடைய மாவட்டத்தில் இருந்த அரக்கோணம் அரசு எஃகு ஆலையை மூடிவிட்டார்கள். அப்போது இயங்கிக் கொண்டிருந்த அரியூர் கூட்டுறவு நூற்பாலை இப்போது, 1¼ ஆண்டுகாலமாக மூடப்பட்டுக் கிடக்கிறது. இன்னும் பலப் பல கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் மூடுவிழாவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு பஞ்சாலைகளாக இருந்தாலும், தொழிற்சாலைகளாக இருந்தாலும், அவை மூடப்படுவதற்கான காரணம் குறித்து பல முறை அரசின் சார்பிலே விளக்கம் தரப்பட்டிருக்கிறது; மாண்புமிகு முதல்வர் அவர்களும் விளக்கமாகவே சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

There is no labour dispute between employer and employee, தொழிற் தகராறுகள் காரணமாக எந்த ஆலையும், எந்தத் தொழிற்சாலையும் மூடப்படவில்லை. நிதி நெருக்கடியின் காரணமாக மூடப்பட்டிருக்கின்றன. சில ஆலைகள் மூடப்படாத சூழ்நிலையிலே தெளிவாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. சில ஆலைகள் வேறு வழியில்லாமல் நீதிமன்ற வழக்குகள், liquidation, பாகப் பிரிவினை, உலகச் சந்தையில் விற்பனை போதாத நிலை, recession என்று சொல்வார்களே, இதுபோன்ற காரணங்களினால் மூடப்பட்டிருக்கின்றன. ஆனாலும், துறையின் அமைச்சர் என்ற முறையில் இது குறித்து மண்டலங்களுக்குச் சென்று சம்பந்தப்பட்டவர்களோடு விரிவாக விவாதித்து வருகிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ employer-employee தகராறு என்கிற காரணத்தினாலேதான் நம்முடைய அரியூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டது என்று நான் சொல்லவில்லை. அதற்கான காரணத்தை நீங்கள்தான் சொல்ல வேண்டும். அமைச்சரவையில் இருக்கக்கூடிய நீங்கள்தான் திறப்போம், திறப்போம் என்று சொல்லிக் கொண்டு 1¼ ஆண்டுகாலத்தைக் கடத்திவிட்டீர்கள். எப்போது திறக்கப்

போகிறீர்கள். ஆட்சி முடிந்த பின்னாலே திறக்கப் போகிறீர்களா? இதுதான் என்னுடைய கேள்வி. புனரமைப்புத் திட்டம் மூலமாக 185 கோடி ரூபாய் நீங்கள் கொடுக்கிறேன் என்று சொன்னீர்கள். என்ன ஆனது அந்த ரூபாய்? ஏன் அதைத் திறக்கவில்லை? அதற்குச் சரியான விளக்கம் எனக்கு வேண்டும். அந்தத் துறையினுடைய அமைச்சரைக்கூட இங்கே காணோம். இப்போது எங்களுக்கு இருக்கிற வருத்தம் என்னவென்று சொன்னால், தொழிலாளிகளுடைய உணர்வை, எங்களுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய ஒரு தொழிற்சாலை மூடியிருக்கின்ற ஒரு நிலையை, எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்கிற வகையில் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல தொழிற்சாலைகள். நெசவுத் தொழிலை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால் இன்று நெசவுத் தொழில் நசிந்துபோயிருக்கிறது. ஏற்கெனவே தயாரித்த துணிகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. சாயப் பட்டறைகள் மூடிக்கிடக்கின்ற காரணத்தாலே நெசவுத் தொழில் நசிந்து போய்விட்டிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. சி. ஞானசேகரன்:** குறுக்கீடுகள் வந்தால் நான் என்ன பண்ண முடியும்?

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரியூர் ஆலையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே தொடர்ந்து தெரிவித்து வருகிறார்கள். உண்மையிலேயே அதில் இருக்கின்ற சட்டரீதியான சங்கடங்கள் என்னென்ன என்பதை உறுப்பினர் முழுமையாக அறிந்து வைத்திருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 18 ஆலைகளும் நிச்சயம் ஓடும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கைகள் முறையாக, சட்டரீதியாக எடுக்கப்பட்டு வருகின்றன. நிச்சயம் அந்த ஆலையை ஓட்டுவோம் என்ற உறுதிப்பாட்டிலிருந்து இந்த அரசு சற்றும் வழுவாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடிய விரைவில் திறந்தால் நிச்சயமாக நாங்கள் அரசுக்கு நன்றி உடையவர்களாக இருப்போம் என்பதைத்



தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் இருக்கக்கூடிய நூற்பாலைகள் மூடப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது உங்களுடைய கடமை. இந்த அரசு எதிர்காலத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய நல்ல பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்க வேண்டும். ஏற்கெனவே Standard தொழிற்சாலை, அதேபோல Binny தொழிற்சாலை, Dunlop தொழிற்சாலை போன்று மூடப்பட்டிருக்கக்கூடிய தொழிற்சாலைகளையும் Tannery-களையும், சாயப் பட்டறைகளையும் திறப்பதற்கு நீங்கள் வழிவகைகளைக் கண்டு தொழில் துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-15

விவசாயத்தைப்பற்றிச் சொல்லும்போது ஒன்றைச் சொல்ல நான் அப்போழுது மறந்து விட்டேன். விவசாயத் துறையை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக பத்தாயிரம் ஹெக்டேர் தரிசு நிலத்தை விளை நிலமாக மாற்றுவதற்கான ஒரு திட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். பாராட்டுகிறேன். ஏற்கெனவே சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே Land Improvement Board என்ற ஒன்றைப் போட்டு, அதிலே என்னையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் பொய்யாமொழி, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்குமார் போன்றவர்களையெல்லாம் உறுப்பினர்களாகப் போட்டார்கள். நான்கூட அந்த நேரத்திலே கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லி, என்ன எங்களுக்கு வேலை என்றுகூடப் பலமுறை கேட்டுப் பார்த்துவிட்டேன். இந்த அவையிலே சொல்லிப் பார்த்து விட்டேன். இந்தக் குழுவிற்கு தலைவர் விவசாயத் துறையினுடைய அமைச்சர். ஆனால் அந்தக் குழு இதுவரை செயல்படவில்லை. விவசாயத் துறை செயல்படுகிறதா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இதற்கு I.A.S படித்த ஒரு Secretary இருக்கிறார். இவ்வளவெல்லாம் நாம் வைத்துக்கொண்டிருந்தும்கூட ஓராண்டு காலம் முடிந்துவிட்டது. இன்னும் எங்களை என்னவென்று சீண்டுவாரில்லை. ஓராண்டு முடிந்துவிட்டது. இப்படிப்பட்ட Land Improvement Board-க்கே இந்தக் கதி. Waste Land Development Authority என்ற ஒன்று கொண்டு வருகிறீர்களோ அதுவும் அந்த நிலைக்குப் போய்விடக்கூடாது. கொஞ்சம் செயல்பட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டம் ஒழுங்கு என்று வருகிபொழுது, இப்பொழுது இருக்கக்கூடிய சட்டம் ஒழுங்கு நிலையிலே Auditor இராஜசேகரனுடைய விவகாரம் பெரிதாக இருந்துகொண்டிருக்கிறது. அதிலே உண்மையான

நிலை என்னவென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஒரு பக்கம் பார்த்தால் Auditor வந்து தன்னைச் செருப்பால் முன்னாள் முதலமைச்சரவர்களும், அவருடைய சகோதரியும் அடித்து விட்டார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அம்மையாரோ, இல்லவே இல்லை என்று சொல்வதோடு மட்டுமல்ல; செருப்பை வைத்துக்கொண்டு ஒரு கொலை முயற்சியைச் செய்ய முடியுமா என்றுகூட ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீங்களும் நானும்கூட இந்த அவையிலே சென்ற முறை சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது, மார்ஷல் கண்ணன் என்பவரையும் மற்ற காவலர்களையும் காலால் எட்டி உதைத்ததாக, கொலை முயற்சி வழக்கே நம் மீது போடப்பட்டது. நள்ளிரவிலே, ஹாஸ்டலிலே நான் தூங்கிக் கொண்டிருந்தேன்; நீங்கள் உங்கள் வீட்டிலே இருந்தீர்கள். உங்களையும், என்னையும் கைது செய்து கொண்டு வந்து இதே கோட்டையிலே இருக்கக்கூடிய காவல்நிலையத்திலே வைத்து, என்னை அப்பொழுதெல்லாம் வந்து பார்த்தார்கள்; உங்களையும் வந்து பார்த்தார்கள். நள்ளிரவிலே நம்மீது மட்டும், ஆயுதமே இல்லாமல் இருப்பினும் 307 போட முடியும்; கொலை முயற்சி வழக்குப போட முடியும். ஆனால் செருப்பை வைத்து வழக்குப் போட முடியுமா என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஆயுதமே இல்லாமல், கழுத்தைக் கையிலே நெறித்தாலும் 307 தான்; அல்லது உயிர் நிலையினை யாராவது நசுக்கிக் கொல்ல முற்பட்டாலும் அதுவும் 307 தான். இதிலே ஆயுதமே தேவைப்படவில்லை. ஆனால் இருவேறுபட்ட கருத்துகள் இருக்கின்ற காரணத்தினாலே அரசு—ஏனென்றால் திடீரென்று பார்த்தால் இது என்ன வழக்கு, இது என்ன வெங்காயம், வெங்காயம் அந்த அளவுக்கா? அதாவது ஏற்கனவே வெங்காயம் ஒரு காலத்தில் உயர்ந்த இடத்திற்குப் போனது, இப்பொழுது இந்த அளவுக்குத் தாழ்ந்து போய்விட்டது. வழக்குகளையெல்லாம் வெங்காயம் என்று கிண்டல் செய்திருக்கக்கூடிய நிலையில்—நாட்டு மக்களுக்குத் தெளிவுபடக்கூடிய வகையிலே, நடந்தது என்ன என்பதை ஒரு அறிக்கையாக இந்த மாமன்றத்திலே வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது காவல் துறையினுடைய புலன் விசாரணையில் இருக்கிறது. மத்திய அரசினுடைய உள்துறை இலாக்கா விவரங்கள் கேட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் இது உண்மைக்குப் புறம்பான வழக்கு, இது ஒரு நீதிபதி தலைமையில் விசாரணை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது உண்மைக்குப் புறம்பான வழக்கு என்று நான் சொல்லவே இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை. பொது மக்கள் நம்ப மாட்டார்கள் என்று...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆள் நேரிலே இருக்கும்போதே இப்படி மாற்றிச் சொல்வது நன்றாக இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** பொது மக்கள் நம்ப மாட்டார்கள். இதை ஒரு நீதிபதி வைத்து விசாரணை பண்ண வேண்டுமென்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம்? இதுதான் அர்த்தம். வெளியிலே ஒரு மாதிரி சொல்வது, சட்டசபைக்குள்ளே ஒரு மாதிரி சொல்வது என்றால் அது என்ன?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது என்னவென்றால், இது முன்னாள் முதலமைச்சர் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கு. அவர்கள் திடீரென்று நான் ஒன்றுமே பண்ணவில்லை என்று சொல்லிவிடுவார்கள். அதனால் இதைப் போலீஸ் வைத்து விசாரிப்பதோடு-அதுவும் நடக்கட்டும்-ஒரு நீதிபதி முன்னாலே அவர்களிடத்தில் statement வாங்க வேண்டுமென்று நான் சொன்னேன். அதை இந்த அரசு செய்திருக்கிறது என்பதால் நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. தாமரைக்கனி:** ** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுது திரு. தாமரைக்கனி அவர்கள் கூறியது அவைக் குறிப்பிலே இடம் பெறாது. ஏனென்றால், அவர் மறுத்து, தான் சொன்னது என்ன என்பதைச் சொல்லிவிட்ட பிறகு நீங்கள் மறுபடியும் அதையே சொன்னால் அது குறிப்பிலேயிருந்து எடுக்கப்படும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, Auditor இராஜசேகரன் பிரச்சினை குறித்து ஏற்கெனவே இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை சட்டப் பேரவைத் தலைவரிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். முதலமைச்சரும் அதற்குரிய பதிலை அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அதற்காக ஒரு விவாதம் நடைபெறுவது முறையல்ல. எனவே, இந்தப் பிரச்சினைக்கு இதோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அடுத்த பிரச்சினைக்குச் செல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இதோடு இராஜசேகரனை விட்டுவிட்டு அடுத்த பிரச்சினைக்குச் செல்லுங்கள்.

*பிற்பகல் 12-20*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் Auditor இராஜசேகரனை விட்டு விடுகிறேன். ஆனால் நீதித் துறைக்குக்கூட ஒரு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். நேற்று ஒரு அறிக்கையைப் பார்த்தேன். சிறப்பு நீதிபதியாக விளங்கிக்கொண்டிருக்கின்ற சம்பந்தம் அவர்கள் எங்களுடைய மாவட்டத்தில் கூட C.J.M. ஆக இருந்தார்கள். அப்பழுக்கற்ற முறையில் மிக நாணயமாக, நேர்மையாக நல்ல தீர்ப்பை வழங்கக்கூடியவர்கள். அவரைப் பற்றி நேற்று முன்னாள் முதல்வர் அவர்கள் அறிக்கையில் சொல்லும்போது அவருடைய இரகசியங்களைப் பற்றியெல்லாம் வெளியிடுவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி நீதிபதியையே மிரட்டக்கூடிய அளவுக்கு இந்த நாடு போய்க்கொண்டிருப்பது என்பது வேதனையான செய்தி. ஆனால் நீதிபதிகளை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது எல்லாம், இப்படிப்பட்ட அச்சுறுத்தல்களுக்கும் இதுபோன்ற அவதூறுகள் பின்னால் வரும் என்று எண்ணியும், நீங்கள் பயப்படாமல் நீதிபதி பணியைச் செய்து நீதியை நிலைநாட்டுங்கள் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், இறந்துபோன மேதகு ஆளுநர் சென்னா ரெட்டி அவர்களையே, என்னிடம் தகாத முறையில் நடந்துகொண்டார் என்று சொன்னவர்கள், திடீர் என்று நீதிபதியைப் பற்றி எதையாவது சொல்லிவிடுவார்கள் என்று நீதிபதி பயந்து தீர்ப்பை எல்லாம் மாற்றிவிடக்கூடாது. நீதிபதிகள் மிக தைரியமாக—இதுபோன்றவர்களுடைய கூற்று ஒருபுறம் இருக்கட்டும்—நீதியை நிலைநாட்டுவோம் என்ற நிலையோடு அவர்கள் தொடர்ந்து பணியாற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





சிறைச்சாலைகள் எல்லாம் இப்போது தமிழகத்திலே சரியாக நடைபெறவில்லை. தீவிரவாதிகளுடைய ஆதிக்கத்தில் சிறைச் சாலைகள் இருந்துகொண்டிருக்கின்றன. இதே மன்றத்தில் நாங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோது, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் அதுபோன்று ஒன்றும் இல்லை, ஆயுதங்கள் அவர்களிடம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இப்போது தீவிரவாதிகள் எல்லாம ஆயுதங்களை வைத்துக்கொண்டு சிறைகளை அவர்களுடைய ஆதிக்கத்தில் வைத்திருக்கின்ற நிலை நல்லதல்ல. அதைச் சீரமைப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது.)*

பெண்களைக் கேலிசெய்தலைத் தடுக்கும் சட்டத்தை நாம் கொண்டுவந்தோம். முன்பு சரிகாஷா என்ற பெண் இறந்தார். இப்போது துர்கா என்ற பெண் இறந்து போயிருக்கிறார். இன்னும் ஒன்று. இரண்டு போலீஸ்காரர்கள் தண்டனை அடைந்த கைதியை அழைத்துக்கொண்டு Escort போனபோது, பேருந்து பயணத்தில் அங்குள்ள பெண்களை எல்லாம், கைதியுடன் சேர்ந்து, கேலி செய்கிற அளவுக்கு நாடு தள்ளப்பட்டிருக்கிறது. ஆத்திரமடைந்த மக்கள் எல்லாம் பேருந்தில் இருந்து இறங்கி, சாலை மறியல் எல்லாம் செய்திருக்கிறார்கள். காவல்துறையில் இருக்கக் கூடியவர்களே, கேவலமான நிலையில் தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளியுடன் சேர்ந்து இப்படிப்பட்ட வேலைகளைச் செய்கிற நிலை நடைபெற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால், இந்தச் சட்டத்தைக் கடுமையான முறையில் நிறைவேற்ற காவல்துறை முன்வரவேண்டும். அவர்கள் தண்டனைக்குள்ளாக்கப்படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரை மணி நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. பேசி முடித்து விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்போது, நீதிபதியைப் பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீதிபதிகள் நீதிபதிகளாக இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் நீதிபதி ஸ்தானத்தில் இருக்கும்போது....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீதிபதிகளைப்பற்றி இங்கே விமர்சனம் செய்யக்கூடாது. உட்காருங்கள்.

[1999 மார்ச் 20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளைப் பற்றி இந்த அவையிலே விவாதிப்பது முறையல்ல. தயவுசெய்து அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அப்படியானால் ஞானசேகரன் பேசும்போது மட்டும் அனுமதிக்கலாமா?

**திரு. சி. ஞானசேகரன்:** நான் தவறாகப் பேசவில்லை. with in my limit நான் பேசியிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). ஒரே ஒரு விஷயம் பட்ஜெட்பற்றி.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. அதைப்பற்றி மட்டும் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர் சொன்னார் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீதிபதிகளைப்பற்றி இந்த அவையில் விவாதிக்கக்கூடாது என்பது மரபு.

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர் சொன்னார் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொன்னது, வெளியில் ஒருவர் மிரட்டுகிற தொனியில் பேசுகிறார். அதற்கு எல்லாம் அஞ்சக்கூடாது என்று சொன்னார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளைப் பற்றி நான் சொல்வதெல்லாம், அச்சம் இல்லாமல் நீதிபதிகள் இந்த நாட்டில் செயல்பட வேண்டும், அவர்களை மிரட்டக்கூடிய ஒரு தொனி வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் எடுத்துச் சொன்ன வார்த்தைதான் அது. வேறு ஒன்றுமல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அன்பில் பொய்யாமொழி. (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதித்த நேரம் முடிந்து விட்டது. இன்னும் எத்தனை பேர் பேசவேண்டும் தெரியுமா? இன்றைக்குப் பேச வேண்டிய நானே பேசவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் பேசும்போதும் எனக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது கண்டிப்பாகக் கொடுக்கிறேன்.



1999 மார்ச் 20]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட்டில் மொத்த பற்றாக்குறை 876.67 கோடி ரூபாயாக இருந்தது, இங்கே திருத்திய மதிப்பீட்டில் 235.73 கோடியாகக் குறைந்திருக்கிறது. இதில் Capital Expenditure என்பது contraction ஆகி இருக்கிறது. இப்படி திட்ட முதலீடு குறைவது என்பது நாட்டுக்கு நல்லதல்ல. அதைப் பற்றாக்குறை செய்வதற்காக, Capital Expenditure-ஐக் கொண்டுபோய்த் தடுப்போம் என்று சொன்னால் அது எங்கேயோ உதைக்கிறது. திட்டம் நிறைவேறவில்லை என்று ஆகிவிடும். அந்தத் திட்டம் ஏன் கைவிடப்பட்டது? ஏன் Capital Expenditure செலவு பண்ணாமல் போனது என்றும் சொல்லவேண்டும். வறுமைக்கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள் தொகை கணக்கீடு என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறார்கள். அதில் மொத்தத்தில் 1993-94-ல் 37.03 சதவீதமாக இருந்த ஒன்று, இப்போது 1997-98-ல் 27.58 சதவீதம் என்று குறைந்திருக்கிறது என்றும் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 1996-க்குப் பிறகு Economic Survey-யே நடக்கவில்லை. அப்படி Survey நடக்காதபோது சில புள்ளிவிவரங்களைத் தந்து நாம் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய தொகை குறைந்திருப்பதாகச் சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்று தெரியவில்லை. அதையும் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அன்பில் பொய்யாமொழி

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. இப்போது நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்திருக்கிறேன்.

**திரு. அன்பில் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க...

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நீதிபதிகளைப்பற்றி இங்கே விவாதிக்கக்கூடாது.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்று மரபு இருக்கிறது. ஆகவே, நீங்கள் உட்காருங்கள். திரு. அன்பில் பொய்யாமொழி, பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:****

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி சொன்னது அவைக்குறிப்பில் இடம் பெறாது. இன்று காலையில்தான், இந்த அவையின் மரபுக்கு, கண்ணியத்திற்குக் கட்டுப்பட்டு நடப்போம் என்று சொன்னீர்கள். இப்போது அதை மீறி நடப்பது நன்றாக இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:****

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் இடம் பெறாது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதிகள் நீதிபதிகளாக இருக்கிறார்களா, இல்லையா என்பதைக் குற்றவாளிகள் நிரூபிப்பதில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:****

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசியது அவைக் குறிப்பில் இடம் பெறாது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனி பேசியது அத்தனையும் சட்டத்திற்குப் புறம்பானது. இந்த அவையினுடைய மரபுக்குப் புறம்பானது. எனவே, அவையெல்லாம் சட்டமன்றக் குறிப்பேடுகளில் இடம்பெறக் கூடாது. பத்திரிகைகளுக்கும் நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், அவர் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் இடம் பெறாது. இந்த மன்றத்தினுடைய மரபைக் காப்பாற்ற வேண்டுமென்பதன் அடிப்படையிலே நானும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஆகவே, அமைச்சர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பத்திரிகைகளும் அதைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. அன்பில் பொய்யாமொழி, பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**Thiru J.M. HAROON RASHEED:** One word please.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன One word நான் எல்லோருக்கும் இப்படி வாய்ப்புக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் கேட்கும்போதெல்லாம் அனுமதி கொடுக்கவேண்டுமென்று ஒன்றும் கிடையாது. சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சிறைச்சாலையில் நடந்ததைப்பற்றிச் சொன்னார்கள். எந்தெந்த ஊர்களில், சிறைச்சாலைகளில் தகராறு நடந்தாலும், நாடாளுமன்றத்தில், நாடாளுமன்றக் குழு ஒன்று அமைத்து என்ன நடந்தது என்று பார்க்கிறார்கள். அதுபோல, இங்கேயும், சிறைச்சாலையில் நடந்த முறைகேடுகளை அறிய சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவை அமைத்து, அவர்களை அனுப்பி விசாரிக்க வேண்டும். அப்போதுதான் உண்மை என்னவென்று தெரியவரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது உங்களுடைய கருத்தாகச் சொல்லுங்கள். யாராவது பேசும்போது இப்படி உங்களுடைய கருத்தைச் சொன்னால் எப்படி? நான் எப்படி சபையை நடத்த முடியும்? மற்றவர்கள் எப்படிப் பேசமுடியும்? திரு. அன்பில் பொய்யாமொழி, பேசுங்கள்.

**திரு. அன்பில் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிதிநிலை அறிக்கை பற்றிப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு உங்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே உரையாற்றிய நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், சாணத்தைத் துடைப்பத்தில் எடுத்து கோடு கிழித்து, இதுதான் வால் என்ற பொருள்படும்படி கருத்து ஒன்றைச் சொன்னார்கள்.

நானும் ஒரு கதையைச் சொல்லவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தபோது, தனக்கு உதவிபுரிந்த வானரப் பட்டாளங்களை எல்லாம் அழைத்துவந்து அந்த பட்டாபிஷேக விழாவிலே கலந்துகொள்ளச் செய்தார். அப்போது அந்த வானரப் பட்டாளங்கள் எல்லாம் சீதையைச் சுற்றிச் சுற்றி வந்து 'ஆஹா, ஆஹா, சீதை எவ்வளவு அழகாக இருக்கிறாள்' என்று பார்த்துவிட்டு, கடைசியாகச்

சொன்னதாம், 'இந்தச் சிதைக்கு ஒரு வால் இல்லாமல் போய்விட்டதே' என்று. குரங்கிற்கு வால் மீது அவ்வளவு அக்கறை. அதேபோல, பார்ப்பவர் கண்களுக்கு எப்படி இருக்குமோ அதுபோலத்தான் இந்த பரிணாம வளர்ச்சியில் அந்த நோக்கில் இந்த நிதிநிலை அறிக்கையையும் நம்முடைய அருமைச் சகோதரர் திரு. ஞானசேகரன் அவர்கள் பார்த்திருக்கிறார்கள் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதை நான் வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கை என்று சொன்னதற்குக் காரணம், எனக்குத் தெரிந்து, இந்தியத் துணைக் கண்டத்தில் 20ஆம் நூற்றாண்டையும், 21ஆம் நூற்றாண்டையும் இணைத்துத் தரப்பட்டிருக்கின்ற முதல் நிதிநிலை அறிக்கை அது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தந்திருக்கிற முதல் முதலமைச்சர் இவர் என்பது நமக்குக் கிடைத்திருக்கிற ஒரு மிகப் பெரிய பெருமை.

இந்த நிதிநிலை அறிக்கை ஏதோ இரண்டாவது millennium, மூன்றாவது millennium இரண்டையும் இணைக்கின்ற ஆண்டு என்று நான் எடுத்துக்கொள்ளமாட்டேன். ஏனென்று சொன்னால், இந்த நிதிநிலை அறிக்கை எண்ணிக்கை அடிப்படையில் உருவாக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை அல்ல. தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் ஊட்டி வளர்த்த சுயமரியாதைக் கொள்கைகளை, உயிரோட்டம் உள்ளவையாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் *12-30*

நம்முடைய சரித்திர ஆசிரியர்கள் நம் நாட்டைப் பற்றிக் குறிப்பிடும்போது, we are late in the race என்று சொல்வார்கள். காரணம் இந்திய நாட்டைப் பொறுத்தவரையில், முதன்முதலாக மாவீரன் அலெக்ஸாண்டர் படையெடுத்து வந்தபோது குதிரைப் படையோடு இந்திய நாட்டின்மீது படையெடுத்தான். அப்போது நம்முடைய அரசர்கள் எல்லாம் யானைப் படைகள் மட்டும்தான் வைத்திருந்தார்கள். ஆனால், அவன் அரபு நாட்டுக் குதிரையோடு வந்து யானைப் படைகளைக் கலக்கி விட்டு வெற்றி பெற்றுச் சென்றான். அதன்பிறகு, நம்முடைய அரசர்கள் எல்லாம் குதிரைப் படைகளை அமைக்க ஆரம்பித்தார்கள். குதிரைப் படையோடு அடுத்த போருக்குத் தயாராகும்போது, போர் தொடுத்து வந்த துருக்கியர்கள் துப்பாக்கியோடு வெடிமருந்துகளோடு தாக்கி வெற்றி பெற்றுச் சென்றார்கள். அதன்பிறகு, நம்முடைய அரசர்கள்



வெடிமருந்தையும் துப்பாக்கியையும் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். அதனால்தான், மேலை நாடுகளில் எதைப் பயன்படுத்துகிறார்களோ அதைப் பயன்படுத்துவதுதான் நம்முடைய நாட்டினுடைய வழக்கமாக இருந்தது.

இந்த நிலைமையை மாற்ற, அறிவுபெற்று வருகிற விஞ்ஞான வளர்ச்சி உலகத்தில், உலகமெங்கும் கணினிமயமாக்கப்பட்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில், சமகாலத்தில், இந்தியத் துணைக்கண்டத்தில், தமிழகத்தில் அனைத்தையும் கணினிமயமாக்குவது என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு 21ஆம் நூற்றாண்டு மாணவர்களை, 21ஆம் நூற்றாண்டு சமுதாயத்தை, மனதில் கொண்டு அளிக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையாகும். அதிலே நான் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் இந்த கணினி ஒரு கனவாக இருந்தது. கிராமப்புறத்தில், ஒரு காலத்தில் transister கேட்பதை ரொம்பப் பெரிதாக நினைத்தார்கள். அதற்குப்பிறகு, தொலைக்காட்சி வந்தபிறகு, அதனுடைய மாயை மறைந்துவிட்டது.

இப்போது கிராமங்கள்தோறும் கணினிமயமாக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், கிராமத்தில் இருக்கிறவர்களும் இந்தக் கணினியைப் பயன்படுத்த முடியும் என்கின்ற நிலைமையை உருவாக்கித் தந்திருக்கிற நம்முடைய தமிழக முதல்வரை எந்த அளவிற்குப் பாராட்டினாலும் தகும். அதிலே குறிப்பாக தமிழ் இணையம்-99 என்கிற மாநாட்டை பிப்ரவரித் திங்கள் 7, 8-லே நடத்தி, பல்வேறு நாடுகளிலேயிருந்து 150 பேர் அதில் கலந்துகொண்டார்கள். அந்த இணையத்தை உருவாக்குவேன் என்று சொன்ன இங்கிலாந்து நாட்டினுடைய World Tel நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மரியாதைக்குரிய சாம் பிட்ரோடாவை—அந்த அறிஞன், யார்? சாம் பிட்ரோடா என்று சொன்னால் 20 வயது வரைக்கும் தொலைபேசியையே பார்த்திராதவன். மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி படித்த டூன் பள்ளிக்கூடத்தின் சக மாணவன். தமிழகத்தில் மட்டும் அல்ல, இந்தியா முழுவதும் இப்போது கிராமங்கள்தோறும் S.T.D. இணைப்பு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதைச் செய்து காட்டியவன் அவன் அந்த சாம் பிட்ரோடாவை—அழைத்து, பத்திரிகை நிருபர்கள் அவரைப் பார்த்துக் கேட்டார்கள், நீங்கள் ஏன் தமிழகத்தைத் தேர்ந்தெடுத்தீர்கள் என்று. அதற்கு சாம் பிட்ரோடா சொன்னார், எவ்வளவோ முதலமைச்சர்கள் என்னை அழைத்தார்கள். ஆனால் நான் ஏன் தமிழகத்தைத் தேர்ந்தெடுத்தேன் என்று சொன்னால், தமிழ்நாட்டு முதலமைச்சர்

கலைஞர் ஒருவர்தான் சொன்னதைச் செய்யக்கூடிய வல்லமை படைத்தவர், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் இதைத் தேர்ந்தெடுத்தேன், பிறகு விரைவில் இந்த இணையத்தை ஒவ்வொரு கிராமத்திற்கும் கொண்டு செல்வேன் என்று சொன்னார். அந்த இணையத்தின் மூலமாக இப்போது ஏறத்தாழ 1,50,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற ஒரு நல்ல திட்டம் உருவாகியிருக்கிறது.

அதேபோலத்தான், கலைஞர் 1970 ஆம் ஆண்டு முதலமைச்சராக முதன்முதலாக நிதிநிலை அறிக்கையைத் தந்தபோது அந்த நிதிநிலை அறிக்கையிலே சொன்னார், தந்தை பெரியார் ஊட்டிய அந்த சுயமரியாதை உணர்வோடு மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் கைரிக்ஷாவை ஒழித்துவிட்டு, நான் சைக்கிள் ரிக்ஷாவைக் கொண்டு வருவேன் என்று சொன்னார். இது சமுதாயச் சீர்திருத்தத்தில் ஏற்பட்டிருக்கிற மிகப் பெரிய மாற்றம். இது 1970-ல் அந்த 1970-லே தன்னுடைய சொந்தக் கருத்தாக கலைஞர் சொன்னார், தமிழகத்தில் மின்சார வசதி இல்லாத கிராமமே இருக்கக்கூடாது என்று. இப்போது மின்சார வசதி உள்ள கிராமங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல 1989 ஆம் ஆண்டு—பெண்களுக்கு சொத்திலே சம பங்கு என்று தந்தை பெரியார் அவர்கள் 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாநாட்டிலே நிறைவேற்றிய தீர்மானத்தை—60 ஆண்டுகளுக்குப் பிறகு, அவருடைய தொண்டர் தலைவர் கலைஞர் அவர்கள் 1989-லே அறிவித்தார் பெண்களுக்கு சொத்திலே சம பங்கு என்று. இப்போது அதேநிலையில், 1999ஆம் ஆண்டு இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்கின்றபோது, மனிதக் கழிவை மனிதன் எடுக்கும், சுமக்கும் அவல நிலையைப் போக்குவேன், அதற்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார் என்று சொன்னால், தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் ஊட்டிய சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளை உயிரோட்டத்தோடு 1970-லிருந்து 1999 வரை, அவர் தந்திருக்கிற 12 நிதிநிலை அறிக்கைகளிலேயும் ஒவ்வொரு காலகட்டத்திலேயும் நிறைவேற்றி இருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்போது மாணவர் சமுதாயத்திற்காக—1996ஆம் ஆண்டு இலவச bus pass திட்டத்தை அறிவித்தார், தலைவருடைய காலத்திலேதான் புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். இப்போது கணினியை மாணவர்கள் அறியவேண்டும் என்பதற்காக நாம் படித்த காலத்தில் S.S.L.C. படித்து முடித்தவுடன் தட்டச்சு பயிற்சிக்குப் போக வேண்டும். 6 மாத காலம் தேர்வு முடிவு வருகிற வரை தட்டச்சுப் பயிற்சிக்குப் போவது, அந்தக் காலகட்டத்தில் சுருக்கெழுத்து இளநிலை,



முதுநிலை தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதை மனதிலேகொண்டு இப்போது தமிழகத்தில் இருக்கிற ஏறத்தாழ 1200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினியை விருப்பப்பாடமாக ஒரு வகுப்புக்கு 40 பேர் என்று தேர்ந்தெடுத்து, ஏறத்தாழ 48,000 பேர் அந்தப் பயிற்சியைப் பெற வேண்டும், எதிர்காலத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காக உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இதைச் சொல்கின்றபோது, ஒன்றைக் கண்டிப்பாகச் சொல்ல வேண்டும், Y2K problem Computer-லே வந்தபோது இதை நிவர்த்தி செய்ய முடியுமா என்று அமெரிக்க நாடுகளெல்லாம் தத்தளித்துக்கொண்டிருந்தபோது, அவர்களுக்கு அந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுத்தவர்கள் இந்திய மக்கள், அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள்தான் அந்த Y2K problem-என்பதைத் தீர்த்துத் தந்தவர்கள். அது நம்முடைய தமிழ்நாட்டுக்குக் கிடைத்திருக்கிற ஒரு மிகப் பெரிய பெயர். அந்த அளவுக்கு இப்போது மாணவர்களுக்காக, பள்ளிப் படிப்பிலேயே கணினியை விருப்பப்பாடமாக வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மாற்றி கண்டிப்பாக 8ஆம் வகுப்பில் தொடங்கி, 12ஆம் வகுப்புவரை கணினியை ஒரு பாடமாகவே வைத்துவிடவேண்டும். எப்படி இன்றைக்கு பல்வேறு பாடத்திட்டங்கள் இருக்கின்றனவோ அதுபோல கணினியையும் பாடத்திட்டமாக வைத்தால்தான் எல்லா மாணவர்களும் பயன்பெறுகின்ற வகையில் அதைச் செய்ய முடியும்.

பிற்பகல் 12-35

அதுபோல, மாணவர்கள் சான்றிதழ்கள் பெறுவது என்பது பேசுவதற்கு எளிதாக இருக்கலாம். பிறப்புச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், இவற்றைப் பெறுவதற்காக மாணவர்களும், அவர்களுடைய தந்தையார்களும் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும் ஆகவே, அதை மாற்றி இவை அனைத்தும் மாணவர்கள் T.C. பெறுகிற அந்தநேரத்திலே பள்ளிகளிலே வழங்கப்படும் என்று சொல்லியிருப்பது, அடுத்த தலைமுறை மாணவர்களுக்குச் செய்கின்ற மிகப் பெரிய உதவி என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு இப்போது மாணவ சமுதாயத்திற்குச் செய்திருக்கிறார்கள்.

அதைப்போலத்தான், இன்றைக்கு மொழிப்போர்த் தியாகிகளைப் பற்றிச் சொல்லும்போது தலைவர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது சொன்னார்கள், தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்காக உண்ணாநோன்பு இருந்து உயிர்நீத்த சங்கரலிங்கனாருக்கு

ஒரு சிலை, கோட்டையில் கொடியேற்றிய பாஷ்யத்திற்கு ஒரு சிலை அமைக்கப்படும் என்று. தமிழ்நாடு என்று அவர் சொல்கின்றபோது அவருடைய உயிர் ஓட்டத்தில் கலந்திருக்கிற அந்தச் சொல்லினை அவர்கள் சொல்கின்றபோது ஒரு 20 வயது இளைஞனுக்குள்ள ஒரு தொனியோடு சொன்னார், 'சங்கரலிங்கனாருக்குச் சிலை' என்று, அதைப்போல பாஷ்யத்திற்குச் சிலை.

*'இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல்'*

என்கிற பொய்யாமொழிக்கேற்ப, இப்போது, தன்னைத் தனிமைச் சிறையில் அடைத்தவருக்குக்கூட மணிமண்டபம் கட்டிமுடித்திருக்கிறார் என்று சொன்னால், அதுதான் கலைஞர் அவர்களுடைய பெருந்தன்மை. அண்ணா ஊட்டிய மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்கிற அந்த மிகப் பெரிய செயலைச் செய்திருக்கிறார்கள்.

விடுதலைப் போராட்ட வீரர்களாக இருந்தாலும் சரி, அல்லது மொழிப் போரிலே கலந்து கொண்டவர்களாக இருந்தாலும் சரி அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வேலைவாய்ப்புக்காகப் பரிந்துரை செய்கின்றபோது, அவர்களுடைய பெயர்களைப் பரிந்துரை செய்ய முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மொழிப்போர் காவலர்கள் குடும்பங்களின் வாரிசுகளுக்கு விடுதலைப் போராட்ட வீரர்களுடைய வாரிசுகளுக்கு, மருத்துவக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகளில் இப்போது முன்னுரிமை அளித்திருக்கிறார்கள். அதுபோல, இவர்களுடைய வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பிலேயும் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிற நம்முடைய முதல்வர் அவர்கள் எல்லாத் தரப்பு மக்களும், எல்லா சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் பயன் அடையத்தக்க வகையில் தென்மாவட்டக் கலவரங்கள் குறித்து இந்தச் சட்டமன்றத்திலே சொன்னார்கள், கடந்த முறை கூட்டத் தொடரில் சொன்னார்கள், 'சாதி கால் முளைத்து நடமாடுகின்றபோதுதான் சாதிக்கலவரம் உருவாகிறது என்று தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதை முறியடிக்க வேண்டுமென்பதற்காக, கிராமத்திலே சொல்வார்கள் 'வேலைவெட்டி இல்லாமல் வீட்டிலே உட்கார்ந்திருந்தால், இந்தக் கதிதாண்டா' என்று. அதுமாதிரி வேலைவாய்ப்பு குறைகிறபோதுதான் அவர்களுடைய



எண்ணங்கள், எண்ண ஓட்டங்கள் சாதி பக்கம் திரும்புகிறது. பலபேர் அந்தச் சாதியை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். ஆனால், எனக்கு விவரம் தெரிந்தவரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் சாதியின் பெயரால் சங்கங்களோ அல்லது இயக்கங்களோ நடத்திய யாரும் முழுமையாக வெற்றிப்பெற்றதாக தமிழகத்தினுடைய வரலாற்றில் கிடையாது என்பதை நான் ஆணித்தரமாக எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன். சிலபேர் என்ன புரட்சியைச் செய்திருக்கிறார் கலைஞர்; இந்த நிதிநிலை அறிக்கையில் என்று கேட்கிறார்கள். மனிதக் கழிவை மனிதன் சுமக்கின்ற அவல நிலையைப் போக்கி இருக்கிறார்கள். அது புரட்சி இல்லையா? புறம்பாகப் பேசுவதுதான் புரட்சியா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், பல்வேறு புரட்சித் திட்டங்களை நிறைவேற்ற அறிவிப்புத் தந்திருக்கிறார்கள். தென்மாவட்டங்களில் ஏற்படுகின்ற சாதிக் கலவரங்களைப் போக்க வேண்டுமென்பதற்காக புதிதாக சமுதாய சீர்திருத்தத் துறை என்ற ஒரு துறை இயங்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-40*

அதுமட்டுமல்ல, நீதிபதி மோகனுடைய தலைமையில் குறிப்பாக நெல்லை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஜாதிக் கலவரங்களை ஒடுக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய முதல்வர் அவர்கள் தொழிற்சாலைகளை உருவாக்கி வேலைவாய்ப்புகளை அவர்களுக்கு அதிகமாகத் தந்து, அதன்மூலமாகக் கல்வி அறிவையும், வேலைவாய்ப்பையும் அதிகமாகத் தந்தால், இந்த ஜாதி ஒழியும் என்று அவர் தீட்டியிருக்கின்ற இந்தத் திட்டம் என்பது வருங்காலத்தில் இனி ஜாதியே இருக்கக் கூடாது என்கிற நல்ல உணர்வோடு தீட்டப்பட்டிருக்கிறது. அதோடு பாரதிதாசன் கவிதையைச் சொல்லி, பொன்னாள் இன்னாள் என்னாளோ என்று சொன்னீர்களே, அந்தப் பொன்னாள் இன்னாள், நீங்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கின்ற நாள்தான் என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையில் நான் பேசுவதற்கு அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொய்யாமொழி அவர்கள் சொன்னபோது மனிதக் கழிவை மனிதன் அகற்றுகின்ற நிலையை அகற்றுகின்ற முதல் திட்டத்தை நாம் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொன்னார். அதுசரியல்ல.

5 ஆண்டுகளுககு முன்பே மத்திய அரசாங்கத்திலே இந்தத் திட்டம் இருக்கிறது. இப்போதுகூட நீங்கள் அறிவித்திருக்கிறீர்களேயொழிய அதற்காக நிதி ஒதுக்கவில்லை. காரணம் என்னவென்றால், அந்த நிதியைப்பெற்று ஏற்கெனவே மாநில அரசாங்கம் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதனை உங்களுடைய மேலான கவனத்திறகுக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் பிரச்சினைகளைக் காட்டிலும், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பதுதான் ஒரு நாட்டினுடைய முதிர்ச்சியைக் காட்டும் அடையாளமாகும் என்று ஜவஹர்லால் நேரு அவர்கள குறிப்பிட்டார்கள். அதாவது ஒரு நாட்டில் சுதந்திரமும் ஜனநாயகமும் நிலைக்க வேண்டுமானால், அந்த நாட்டிலே ஒரு சமச்சீரான பொருளாதார நிலை பாதுகாக்கப்பட வேண்டும். அந்த நிலை இல்லையென்றால் பிரசசினைகள் பலவாறு வெடித்து சுதந்திரத்திறகும், ஜனநாயகத்திற்குமே ஆபத்து ஏற்படுத்திவிடக்கூடும். எனவே, அந்தக் கண்ணோட்டத்திலேயிருந்து இந்த நிதிநிலை அறிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் பரிசீலிக்க விரும்புகிறோம். இது நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுக்கு 12-வது நிதிநிலை அறிக்கையாகும். 11 முறை அவர் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்ததைக் காட்டிலும் இந்த முறை சமர்ப்பித்த இந்த நிதிநிலை அறிக்கை கொஞ்சம் திணறுகிறமாதிரித் தெரிகிறது. காற்று பற்றாமல் மூச்சுத் திணறுகிறவனைப்போல இந்த நிதிநிலை அறிக்கை நிதிப் பற்றாக்குறையால் திணறிக்கொண்டிருக்கிறது என்பது அதனுடைய பற்றாக்குறையிலேயே தெரிகிறது. இருந்தாலும், தன்னுடைய நீண்ட அனுபவ முதிர்ச்சியின் முத்திரைகளால் அந்தத் திணறல் அவ்வளவு எளிதில் தெரியாதவாறு அவர் மறைத்து வலை பின்னியிருக்கிறார் என்றுதான் நான் கருதுகிறேன். அவருடைய முதிர்ச்சி வெற்றி பெற்றிருக்கிறதே தவிர, அவருடைய அனுபவங்கள் வெற்றி பெற்றிருக்கிறதே தவிர, நாட்டின் நிதிநிலை அவருடைய நினைப்புக்கு ஒத்துழைக்கவில்லை என்பதை இந்த நிதிநிலை அறிக்கையின் திணறலிலேயே என்னால் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. இந்தப் பிரச்சினைகளில் ஏன் இந்தப் பற்றாக்குறை நிதி நிலை என்பதையும் நான் தமிழ்நாட்டுக்கு விளக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. நிதி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் முழுவதுமே மத்திய அரசிடம்தான் குவிந்து கிடக்கின்றன. மத்திய அரசு நிதிப் பிரச்சினையில் ஒரு மாற்றந்தாய்





மனப்பான்மையோடு நடந்துகொள்கிறது. மத்திய Planning Commission—மற்றும் Finance Commission ஆகியவை பலமுறை பரிந்துரைத்தும்கூட, தன்னுடைய நிதியிலிருந்து குறிப்பிட்ட அந்த 29 சதவிகிதத்தைக்கூட தரும் வகையில், 1996-லேயே அறிமுகப்படுத்தி இன்றைக்குவரையிலும் அதற்கான சட்டத் திருத்தம் செய்ய அவர்கள் முன்வரவில்லை என்பது, தன்னிடம் குவிந்து கிடக்கின்ற அந்த நிதி அதிகாரத்தை இழக்க அது விரும்பவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. மாநில அரசு நிதித் துறையில் பலமாக இருந்தால்தான் எந்த ஒரு திட்டமும் நன்றாக நிறைவேறும். எனவே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், 33.3 சதவீதம் என்பதை அரசியல் சட்டத் திருத்தமாக்கி அந்த அடிப்படையிலேதான் மாநிலங்களுக்கு மத்திய அரசினுடைய மொத்த வருவாயில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை நாங்கள் இங்கே வற்புறுத்த விரும்புகிறோம்.

அதேபோல, இங்கே இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். பாராட்டத்தக்க பல அம்சங்கள் இருக்கின்றன. அவற்றைப் பாராட்டிக் கொண்டிருப்போமேயானால் சொல்ல வேண்டிய சில விஷயங்கள் தவிர்க்கப்பட்டுவிடும் என்பதால் நான் அதற்குள் விரிவாகப் போக விரும்பவில்லை. ஆனாலும், நிர்வாகச் சீரமைப்புக்கு குழு பரிந்துரைகளின் மீது அரசின் முடிவு அறிவிக்கப்படும் என்ற அறிவிப்பு பாராட்டத்தக்க விஷயம்.

அதேபோல, ஜாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் போன்றவற்றையெல்லாம் பள்ளிகளிலேயே அளிப்பது என்பது உண்மையிலேயே மனநிறைவோடு பாராட்டத்தக்க விஷயம்.

அதேபோல, தரிசு நில மேம்பாட்டு ஆணையம் அமைத்ததும் பாராட்டத்தக்க விஷயம். மகளிர் நலனுக்காகப் போதிய அளவு இல்லையென்றாலும், ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒரு விஷயம்.

இன்னொரு மிக முக்கியமான விஷயம். தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சி குறித்த வழிவகைகளைக் கண்டறிவதற்குரிய ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பது என்பது பாராட்ட வேண்டிய ஒன்று. ஆனால், நான் குறிப்பிட விரும்புவது, அந்தக் குழுவிற்கு ஒரு கால வரம்பு நிர்ணயித்து, அந்தக் காலவரம்புக்குள் அறிக்கை பெற்று, போர்க்கால வேகத்தில் தென் மாவட்டங்களைத் தொழில் மயமாக்குவதில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை நான் இங்கே

வற்புறுத்த விரும்புகிறேன். அத்தகைய நிலைகளை மேற்கொண்டோமேயானால்தான் சமூக வாழ்வில் சமூகத்திற்குள்ளே இருந்துகொண்டு சமூகத்தை உருக்குலைக்கிற, சிதைக்கிற தீயசக்திகளை சமூகத்திடமிருந்து தனிமைப்படுத்துவதிலேயும், சமூகம் விழிப்படைந்து தன்னைத்தானே விடுவித்துக்கொள்கிற முயற்சிக்கு வழிவகை செய்யும் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12.45

அதேபோல, மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்ட வேண்டிய விஷயம், ஒன்று; தகவல் தொழில்நுட்பப் புரட்சியில், இன்றைக்கு கணிப்பொறிமயமானது ஆங்கிலம் மட்டும்தான். ஆங்கிலத்திற்கு அடுத்து உலகில் கணிப்பொறி மயமாக்கப்பட்டிருப்பது, இந்திய மொழிகளில் தமிழ்தான். இந்த விஷயம் மகிழ்ச்சியோடு பாராட்டத்தக்க ஒன்று. இன்னொரு விஷயம், தமிழ்க் குறியீடுகளை வடிவமைப்பதிலும், தமிழ் விசைப் பலகைகளைத் தரப்படுத்துவதிலேயும் குழப்பமான, மாறுபட்ட சிந்தனைகளை ஒருமுகப்படுத்துவதில் காலத்தில் தலையிட்ட கலைஞரின் முதிர்ச்சி பாராட்டுக்குரியதாகும். காலத்தில் தலையிட்டு அதிலே ஒத்த கருத்து நிலையை உருவாக்குவதில் அக்கறை செலுத்தினார்கள் என்பது, உலகத்தில் தமிழை ஒரு பொருளாதார மொழியாக ஆக்குவதற்கான ஒரு முன் அடிப்படை என்ற முறையில் அவற்றை நான் பாராட்ட விரும்புகிறேன்.

அதேபோல, இன்னொரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிட வேண்டும். அதாவது மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் 6.31 சதவீதமாக இருந்த மொத்த உற்பத்தி வளர்ச்சி 6.78 சதவீதமாக உயரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதுபோல உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையிலே பார்த்தீர்களேயானால் 85 இலட்சம் டன், 98 இலட்சம் டன்னாக உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டு இருக்கிறது. இந்த விஷயத்திலே தான் நான் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இந்த இரண்டு விஷயங்களையும் உற்பத்தி செய்தது எது?

Productivity force எது என்று பார்த்தால் விவசாயிகளும் தொழிலாளர்களும்தான். நான் இந்த பட்ஜெட்டிலே குறை காண விரும்புகிற இடமே இந்த இடம்தான். அதாவது இந்த மாநில அரசு, 6.31 சதவீதமாக இருந்த மாநிலத்தின் மொத்த உற்பத்தி வளர்ச்சியை 6.78 சதவீதமாக ஆக்க முயற்சிப்பது யாகம் அல்ல; வெறும் மந்திரங்களால் உருவாக்க முடியாது; இவற்றை உற்பத்தி செய்கின்றவர்கள் தொழிலாளர்களும் விவசாயிகளும்தான். மாநில உணவு உற்பத்தியிலும், மொத்த உற்பத்தி வளர்ச்சியிலும், பெரும் பங்கு வகித்த இந்த இருவரும் உரியபடி இந்த பட்ஜெட்டில் கவனிக்கப்படவில்லை.



முதலாவதாக எடுத்துக்கொள்ள விரும்புவது விவசாயிகள் பிரச்சினை. விவசாயிகள் பிரச்சினையை பலதரப்பட்டவர்களும் சொல்லி இருக்கிறார்கள். விவசாயிகளின் கடன், அதுபற்றிய வட்டி, அது குறித்த அபராத வட்டி இந்தப் பிரச்சினை எல்லாம் இங்கே சொல்லப்படுகிறது. இதில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, விவசாயிகள் இரண்டு வழிகளில் தாக்கப்படுகிறார்கள். முதலில் மாநில அரசு இந்த விஷயத்தைப் பரிவோடு கவனிக்க வேண்டும். ஒன்று, அவர்கள் இடுபொருட்களை வாங்குகிறபோது, விலையேற்றத்தால் தாக்கப்படுகிறார்கள். இன்னொன்று, அவர்கள் தங்களுடைய விளைபொருட்களை விற்கிறபோது, அவற்றுக்கு நியாயமான விலை கிடைக்காமல் தாக்கப்படுகிறார்கள். ஆக, உற்பத்தியாளரான, விவசாயி தன்னுடைய உற்பத்தியைச் செய்வதற்கு இடுபொருளை வாங்கினால் விலையேற்றத்தால் பாதிக்கப்படுவதும், இந்த விலையேற்றப்பட்ட இடுபொருளை வாங்கி விளைச்சலைச் செய்தால் விளைச்சலுக்குரிய கட்டுப்படியான நியாயமான கொள்முதல் விலை இல்லை என்கிற இந்த நிலை தொடர்ந்து நீடிப்பதும் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவின் பொதுப் பிரச்சினை. இதில் மாண்புமிகு கலைஞர் அவர்களை, மாநில அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த விவசாயிகளின் பிரச்சினையில் முன் வைக்கப்படும் நியாயமான கோரிக்கைகளில் ஒன்று இந்த விவசாயிகளுக்குக் கட்டுபடியான விலை இல்லை என்ற நிலையில் எப்படி வாங்கிய கடனைக் கட்ட இயலும்? எனவே, கட்டக் கூடாது என்று நான் குறிப்பிடவில்லை. நான் இங்கே குறிப்பிட விரும்புவது, வட்டி, அபராத வட்டி ஆகியவற்றை சிறு குறு விவசாயிகளுக்கு முழுமையாக ரத்துச் செய்ய வேண்டும். அவர்களின் கடனை, அசலைக் கட்டுவதற்கு ஒரு கால அவகாசத்தைத் தீர்மானிக்க வேண்டும். அப்போதுதான், அது பொருத்தமானதாக இருக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, வணிகர் அமைப்புகள், மற்ற விஷயங்களில் மாநில அரசு சந்தித்துப் பேசி இருக்கிறது. நான் குறிப்பிட விரும்புவது, இந்த பட்ஜெட்டுக்கு முன்னால், விவசாயிகள் பிரதிநிதிகளையும், தொழிலாளர்கள் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசி தமிழ்நாட்டினுடைய சமூகப் பொருளாதார கட்டுமானத்தின் அடிப்படைகளை வலுவாக உருவாக்குவதற்குரிய கருத்துக்களைக் கேட்டு அறிந்து இருக்கலாம். அத்தகைய முயற்சிகளை எதிர்காலத்திலாவது மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன். குறிப்பாக, இங்கே விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருப்பதைச் சொன்னேன். தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், அநேகமாக தொழிலாளர்கள்

தொடர்ந்து சிலுவையில் அறையப்பட்டே வந்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பல ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்கூடக் குறிப்பிட்டார்கள். குறையாக நான் சொல்லவில்லை. அதற்கு இந்த மாநில அரசு காரணம் அல்ல என்று சொன்னார்கள். இந்தப் பிரச்சினையில்—முட்டை கல் மீது விழுந்தாலும், கல் முட்டை மீது விழுந்தாலும் உடைபடுவது முட்டை—முதலாளி lock-out செய்தாலும், அவர்களுக்குள் பாகத் தகராறு வந்தாலும், உடைபடுகிற முட்டையைப் போல பாதிக்கப்படுபவர்கள் தொழிலாளிகள். எனவே, பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளியின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய கடமையை, பொறுப்பை மாநில அரசு உணர்ந்து செயல்பட வேண்டும், செயல்படுத்த வேண்டும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-50*

வேறு எங்கும் தேடிப் போக வேண்டாம். இதே சென்னைக்கு அருகில், அம்பத்தூரில், ஆசியாவிலேயே மிகப் பெரிய, *473* ஏக்கரிலே அமைக்கப்பட்ட தொழிற்பேட்டையில் *1,700* தொழிற்சாலைகள் இருக்கின்றன. இன்றையதினம், இப்போது நான் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில் அங்கே என்ன நிலவரம் தெரியுமா? கிட்டத்தட்ட *50* முதல் *60* சதவீத தொழிற்சாலைகள் ஓடவில்லை. lay-off காரணத்தால் *60* சதவீத தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, கும்மிடிப்பூண்டியிலே, அதேபோல கிண்டியிலே, அதேபோல ஓசூரிலே உள்ள தொழிற்பேட்டைகள் எல்லாம் இந்த lay-off காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கடுமையான நெருக்கடியில் இருக்கின்றன. பஞ்சாலைத் தொழில் என்றைக்கு முழுவதும் நிற்கும் என்று தெரியவில்லை. கடும் நெருக்கடியில் இருக்கின்றன. நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், மகிழ்ச்சி ததும்ப இந்த பட்ஜெட் சொல்கிறதல்லவா புதிய தொழில் வளாகங்கள் உருவாக்கப்படும் என்று. ஒருபுறம் இங்கு புதிய தொழில் வளாகங்களை நீங்கள் உருவாக்குவதற்கு நிலங்களைக் கையகப்படுத்துகிற அதே வேகத்தில் இன்னொருபுறம் இயங்கிக் கொண்டிருக்கிற தொழிற்சாலைகளை மூடிக் கொண்டேயிருந்தால், பொருளாதார வளர்ச்சிக்கு இது நல்ல அடையாளம்தானா? இத்தகைய நிலை தொடர்ந்து நீடிக்கலாமா? எனவே, மாநில அரசு செய்ய வேண்டிய அவசர, அவசியமான விஷயம் மூடப்பட்ட, மூடப்படுகிற தொழிற்சாலைகளை தொடர்ந்து இயங்கவைக்கும் உத்தியை நாம் கைக்கொள்ளவில்லை என்றால்





உண்மையிலேயே தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கும். எப்படி புதிய தொழில் வளாகங்களைத் திறப்பதில் கவனம் செலுத்துகிறோமோ, அந்தமுறையில் திறந்த தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்க வேண்டும்; அப்படி அதை இயங்க வைப்பதற்குரிய வழிவகை என்ன என்பதிலேயும் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, இந்த மாநிலத்தினுடைய சில குறிப்பிட்ட மாவட்டங்களில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தென் மாவட்டங்களில் வந்திருக்கிற சமூகப் பிரச்சினைக்கு எது காரணம்? அது தொடர்ந்து பின்தங்கிவிட்டது. இந்த அனுபவங்களே நமக்குச் சொல்கின்றன. வடகிழக்கு எல்லைப்புற மாநிலங்களிலே ஏற்பட்ட பிரச்சினைக்குக் காரணமே, சுதந்திர இந்தியாவில் தொடர்ந்து அந்த மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதால் வடகிழக்கு எல்லைப்புற மக்களை, குறுகிய இனவாதிகள், குறுகிய வட்டார உணர்வினைத் தூண்டி விடுகிறவர்கள், தங்கள் கருத்துக்களை மிக எளிதில் அவர்களிடம் பற்ற வைக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டதுதான். இந்த வாய்ப்பைக் கொடுத்தது அவர்களுடைய பிற்பட்ட வாழ்க்கை முறைதான். எனவே, நான் தமிழ்நாட்டைப் பற்றிக் குறிப்பிட விரும்புவது, சமச்சீரான பொருளாதார வளர்ச்சிக் கொள்கைகளுக்கான உத்திகளை உருவாக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஒரு சமச்சீரான பொருளாதார வளர்ச்சிக்கு எந்த உத்தி பொருத்தமானது என்பதைக் கண்டறிய, அனைத்துத் தரப்பினரையும் அழைத்துப் பேசி ஒரு ஒத்த கருத்தை இந்த விஷயத்திலே உருவாக்குகிற முயற்சியை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்னொரு முக்கியமான விஷயம். தொழில் துறையினுடைய விரைவான வளர்ச்சிக்கு ஏதாவது தேங்காய் உடைத்து பூசை நடத்தினால் அது அவருடைய விருப்பம் என்று விட்டுவிடலாம். மத்திய அரசில், யஷ்வன் சின்ஹா சொல்லியிருக்கிறார் *7* அம்சத் திட்டம் பற்றி. அதிலே தொழிலாளருக்கு எதிரான அம்சமுள்ளது. *9* அம்ச திட்டத்தினைச் சொல்லியிருக்கிறார் வாஜ்பாய். இவையெல்லாம் தொழில் வளர்ச்சியை முன்னிலைப்படுத்தும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், தொழில் வளர்ச்சிக்கு தேங்காய் உடைப்பதைவிட, தொழிலாளர்களின் உரிமைகளைப் பலியிடுவதையே ஒரு கடமையாக, பொறுப்பாக வைத்து இருப்பதே சகித்துக்கொள்ள முடியாத ஒரு முன்னுதாரணம் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். தொழிலாளர்களை ஏன் பலியாக்குகிறார்கள்?

[திரு. கே. சுப்பராயன்] [1999 மார்ச் 20

தொழிலாளர்களின் உரிமைகளை ஏன் பறிக்கிறார்கள்? தமிழ்நாட்டில் என்ன கோரிக்கைகளை முதலாளிகள் வைக்கிறார்கள் என்றால் தொழிலாளர்கள் சம்பளத்தை வெட்ட வேண்டும். ஆட்குறைப்பு செய்ய வேண்டும். அதிக வேலைப் பளு கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். தொழிற்சங்கங்கள் கோரிக்கை வைத்தது மாறி, இப்போது முதலாளிகள் தொழிற்சங்கங்களிடத்திலும், தொழிலாளர்களிடத்திலும் கோரிக்கைகள் வைத்து, நடைமுறையில் இருக்கிற உரிமைகளைப் பறிக்கிற நிலை நீடிக்கிறது. இது தொழிலாளர்களைக் காப்பாற்றாது என்பதால் இதுகுறித்து அரசு மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல், அரசுத் துறைகளின் செயல்பாடு. மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம். அரசுத் துறைகளில் செயல்பாடு இருக்கிறதல்லவா? இது சில இடங்களில் கேலிக்கூத்தாக இருக்கிறது. ஓர் இணக்கமான செயல்பாடு இல்லை. திருப்பூரை எடுத்துக்கொண்டோமேயானால், அங்கே 'சுற்றுச் சாலை' போடப்படுகிறது. இந்த 'சுற்றுச் சாலையிலே' நடுச்சாலையிலேயே மின்சாரக் கம்பங்கள் இருக்கின்றன. இதை அகற்றுகிற முயற்சிகளை மேற்கொள்கிறது நெடுஞ்சாலைத் துறை; அகற்ற மறுக்கிறது மின்சாரத் துறை. எப்படி இது இயங்கும்?

*பிற்பகல் 12-55*

அதேபோல், நகராட்சித் துறை ரோடு போடுகிறது. ரோடு போட்டு முடித்தவுடன், கேபிள்காரர்கள் குழி வெட்டுகிறார்கள். அல்லது வேறு யாராவது தண்ணீருக்காகக் குழி வெட்டுகிறார்கள். அரசுத் துறைகளின் செயல்பாட்டின் நேர் எதிர்மறையான செயல்பாடுகளால் வளர்ச்சிப் பணிகள் தடைபடுகின்றன என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, அரசுத் துறைகளின் செயல்பாட்டில் இணக்கமான ஒரு போக்கை உருவாக்குவதற்கு தொடர் யுத்தத்தை மேற்கொள்ள வேண்டுமென்பதைத்தான் நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன்.

அதேபோல, மனித உடம்பிலே பார்த்திருப்பீர்கள், சிலபேர் நடந்து போனால் அவர்களுடைய உடலிலே சதை அப்படியே தொங்கிக் கொண்டிருக்கும். ஆனால் அந்த உடலுக்கும் அந்தச் சதைக்கும் சம்பந்தமே கிடையாது. அதாவது தொங்குகிற சதை அந்த உடலுக்குச் சம்பந்தமே இல்லாமல் இருக்கும். சம்பந்தமே இல்லாமல் தொங்குகிற சதை மாதிரி இந்த பட்ஜெட்டிலேயும் சில தொங்கு சதைகள் இருக்கின்றன. அந்தத்



1999 மார்ச் 20] [திரு. கே. சுப்பராயன்]

தொங்கு சதைத் திட்டங்கள் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பைப் பலப்படுத்தப் பயன்படாது. அது ஊளைச் சதை. நான் எதை ஊளைச் சதை என்று குறிப்பிட விரும்புகிறேன் என்றால், பட்ஜெட்டில் ஒதுக்குகிற ஒவ்வொரு ரூபாயிலேயும் மூலதனத்திற்கான செலவாக, உற்பத்தி சார்ந்த செலவாக, அதுபோல அடிப்படைப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிற செலவாக இருந்தால் அது பலனளிக்கும். ஆனால் இங்கே நிலைமை என்னவென்றால், கவர்ச்சித் திட்டங்கள் பெரும்பகுதி பட்ஜெட்டில் சதை இரத்தத்தை இழுத்துக்கொள்கின்றன. எனவே, சமூக பொருளாதாரக் கட்டமைப்புக்குச் செலவழிப்பதுதான் எலும்புக்குள் இருக்கிற மஜ்ஜை மாதிரி. ஆனால், இந்தக் கவர்ச்சித் திட்டங்களெல்லாம் தொங்குகிற தொங்கு சதை மாதிரி. எனவே, தொங்கு சதைக்கு முக்கியத்துவம் கொடுத்தால், எலும்பில் இருக்கிற மஜ்ஜை அழிந்து போய்விடும். அடிப்படை பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் பட்ஜெட்டில். அடிப்படைக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாத அரசியல், சமூகச் சூழ்நிலைகள் நிலவலாம். அதுபற்றி நான் இங்கே விரித்துப் பேச விரும்பவில்லை. அதற்குரிய இடமாக இது அமையாது. ஆனால்....

**திரு. ஆர். சொக்கர்**: A clarification. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவர்ச்சித் திட்டங்கள் என்று அரசால் மேற்கொள்ளப்படக்கூடிய திட்டங்களில் எவை எவை என்று குறிப்பிட்டுச் சொன்னால் தெளிவாக இருக்கும்.

**திரு. கே. சுப்பராயன்:** எது எது என்பதை மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டுதான் கேள்வியையே கேட்டுக் கொண்டிருக்கிறார் திரு. சொக்கர் அவர்கள். அதனால் அவருக்கு எந்தெந்தத் திட்டங்கள் கவர்ச்சித் திட்டங்கள் என்று, மிக நன்றாக தெளிவாகத் தெரியும். ஆகவே, அந்தப் பிரச்சினையில் அதுபற்றிப் பேச எனக்கு நேரம் கொடுத்தால் சொல்லலாம். அதுபற்றி இப்போது சொல்ல முடியாது. அடுத்து நான் உள்ளாட்சி அமைப்புகளுக்கு......

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** திரு. சுப்பராயன் அவர்கள் இப்படிப் பேசக்கூடாது. காரணம், இதிலே முழுக்க முழுக்க நாட்டு நடப்பை உள்ளடக்கி திட்டம் போடப்பட்டிருக்கிறது. இதிலே கவர்ச்சித் திட்டங்களே இல்லை என்றுதான் மற்ற பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. பொத்தாம் பொதுவாகச் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொன்னால் பரவாயில்லை. ஆனால் திரு. சுப்பராயன் அவர்களிடத்தில் நான் இதை எதிர்பார்க்கவில்லை.

[1999 மார்ச் 20

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எது எது கவர்ச்சித் திட்டங்கள் என்று காலம் பூராவும் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. நான் என்ன குறிப்பிட விரும்புகிறேன் என்றால், சமூக வளர்ச்சியை ஊக்குவிக்கிற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வழி இல்லாதவாறு கவர்ச்சித் திட்டங்களே நிதியை உறிஞ்சிக் கொள்கின்றன. அந்தத் திட்டங்கள் எவையெவை என்பதற்கு 'கைப்புண்ணுக்குக் கண்ணாடியே வேண்டாம்'. காலையில் சாப்பிட்டு அடுத்த நாள் கழித்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களுக்குச் செலவழிப்பதில் என்ன பயன்? ஒரு தொழிற்சாலையைக் கட்டுவதன் மூலம் அந்தத் தொழிற்சாலையால் என்ன நடக்கும் என்றால், அந்தத் தொழிற்சாலையைச் சுற்றி 10 பேர் கடை வைப்பார்கள். அந்தக் கடையைச் சுற்றி 10 பேர் வேறு வேலை செய்வார்கள். பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது அந்தத் தொழில். அதுபற்றி நான் இப்பொழுது விரிவாகப் பேச விரும்பவில்லை. ஆகவே, அந்த மாதிரி வளர்ச்சிக்குத் தொடர்பற்று இருப்பது பாதிப்பு ஏற்படுத்தும். காரணகர்த்தா யார் என்று நான் சொல்லவே இல்லை. நடப்பில் நிலவுகிற பிரச்சினையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

இன்னொரு முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். தயவுசெய்து மாநில அரசின், தொழிலாளர் நலத் துறை புரிந்து கொள்ள வேண்டும். மேற்கு வங்கத்தில் 1-4-1999 லிருந்து ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். ஓராண்டுக்குமேல் மூடப்பட்ட தொழிற்சாலையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மாதம் 500 ரூபாய் கொடுக்கப்படும் என்பதை அரசு அறிவித்து இருக்கிறது. மூடப்பட்ட தொழிற்சாலைத் தொழிலாளி எப்படி வாழ்வான்? அந்தத் தொழிலாளியின் குடும்பம் எப்படி வாழும் என்பதை நாம் பார்க்க வேண்டும். மேற்கு வங்க அரசு ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதம் 500 ரூபாய் கொடுப்பதை 1-4-1999-லிருந்து அமல்படுத்துகிறது. 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளிகளின் பட்டியல் எடுக்கப்பட்டு விட்டன. ஏனென்றால், மூடப்பட்ட தொழிற்சாலைக்கு நாங்கள் காரணம் அல்ல என்று பிரச்சினையைக் கடவுளிடம் விட்டு விட முடியுமா? தொழிலாளியை அப்படி விட்டு விட முடியாது. அவனுடைய கதியை கடவுளிடம் ஒப்படைத்துவிடக் கூடாது. அவனுடைய கதியை மாநில அரசு தீர்மானிக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மேற்கு வங்க அரசைப் போல....



1999 மார்ச் 20]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இப்படி மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்காக நிதி உதவி செய்யப்படுகிறது.

மேற்கு வங்கத்தை உதாரணம் காட்டினார்கள். இந்தியாவிலேயே பீடித் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான குறைந்தபட்ச கூலி கொடுக்கிற மாநிலம் தமிழகம்தான். இந்தியாவிலேயே தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலி கொடுக்கிற மாநிலம் தமிழகம்தான்.

*பிற்பகல் 1-00*

**திரு. கே. சுப்பராயன்:** நான் ஒப்பிடுகிறேன். நான் ஒப்புண்டி என்றால் அவர் பப்புண்டி என்கிறார். நான் அதைச் சொல்லவில்லை. நான் சொல்ல வந்தது என்னவென்றால்... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், இந்தியாவிலேயே நம்முடைய Plantation Workers-க்குதான் குறைந்தபட்ச கூலி கொடுக்கப்படுகிறது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதை நம்முடைய மாநில அரசாங்கம் கொண்டு வருவதற்கு முன்னாலே, கேரள மாநில அரசு கொண்டு வந்து, குறைந்தபட்ச கூலியை 3 தடவைகள் உயர்த்தி ஒரு சிறப்பான திட்டமாக அதைக் கொடுத்திருக்கிறது. இன்று நம்முடைய அரசு ரப்பர் கழகத்தில் 71 ரூபாய் சம்பளம் கிடைக்கின்ற நிலையை அந்த மாநில சர்க்கார் இதற்கு முன்னாலே கொண்டு வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே என்ன நிலை என்பதை அவர் சொல்லட்டும். தமிழ்நாட்டில் 61 ரூபாய் 65 பைசா தினக் கூலியாகக் கொடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன், நேரம் ஆகிறது, பேசி முடித்துக்கொள்ளுங்கள். ஏற்கெனவே உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது.

**திரு. கே. சுப்பராயன்:** இரண்டு நிமிடங்களில் நான் முடித்து விடுகிறேன். மிக முக்கியமான பிரச்சினையைப் பற்றி நான் சொல்ல

[திரு. கே. சுப்பராயன்] [1999 மார்ச் 20

வேண்டியிருக்கிறது. அரசுத் துறையின் இன்னொரு செயல்பாட்டையும் நான் சொல்ல விரும்புகிறேன். அரசுத் துறையின் செயல்பாடுகளில், அரசை இயக்குகின்றவர்களின் சிந்தனைக்கும் அரசு இயந்திரத்தின் செயலுக்கும் இடையே இருக்கின்ற இடைவெளியை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதாவது, அரசு மக்களுக்கு மிக விரைவில் காரியமாற்ற வேண்டுமென்று அரசை இயக்குகின்றவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், அரசை இயக்குகின்றவர்களின் விருப்பத்தை மக்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டிய அரசு இயந்திரம் அந்தச் சிந்தனையில் செயல்படவில்லை. ஓர் உதாரணத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். திருப்பூரிலே, வீரபாண்டி ஊராட்சியில் இருக்கின்ற ஜனசக்தி என்ற ஒரு நகரில் எஸ்.எப்.481/பி என்ற ஒரு இடத்தில் 200 பேருக்கு பட்டா கொடுக்கப்பட்டு 9 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதில் தனிப்பட்ட ஒரு நபர் ஏமாற்றியதை cancel செய்து பட்டா கொடுத்துவிட்டார்கள். அப்படி பட்டா கொடுக்கப்பட்ட நிலம் குறித்து, ஒரு தனிப்பட்ட நபர், அரசு பட்டா கொடுத்தது செல்லாது என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துவிட்டார். High Court-ல் இப்போது Stay Order இருக்கிறது. அங்கே இருக்கின்ற 200 குடும்பங்களுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு pipe line போட வேண்டுமென்று சொன்னால் Stay Order இருக்கிறது, கொண்டு வர முடியாது என்று சொல்கிறார்கள். Electricity கொண்டு போக வேண்டுமென்றால், Stay Order இருக்கிறது கொண்டு போக முடியாது என்று கூறுகிறார்கள். அந்த 200 குடும்பத்தினர் சாலை மறியல் செய்தால் அது சட்டப்படி குற்றம் என்று தண்டிக்கப்பட்டு விடுவார்கள். அவர்கள் தண்ணீர் பெறுகின்ற உரிமை இல்லை. அதேபோல, அவர்களுக்கு மின்சார வசதி இல்லை. இந்த நிலைக்குத் தீர்வு காணவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு விஷயம். தேவையற்ற விஷயங்களைப்பற்றி பேச அதிக நேரத்தை எடுக்கிறார்கள். நான் தேவையான விஷயத்தைச் சொல்கிறபோது பேச அனுமதிக்காமல் இருந்தால் எப்படி என்று கேட்க விரும்புகிறேன். 3 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இந்த விஷயத்தைப் பொறுத்தஅளவில் நான் என்ன கேட்கிறேன் என்றால் முதலமைச்சர் அவர்களது அலுவலகத்திலே நான் 7, 8 முறை Special Petition போட்டு Stay Vacate செய்ய வேண்டுமென்றும் அதற்காக ஒரு Special Petition போட வேண்டுமென்றும் மனு கொடுத்தேன். ஆனால், Government Public Prosecutor என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் மக்களுடைய அடிப்படை பிரச்சினை இது, Law and Order இதனால் உருவாகிறது என்றெல்லாம் சொல்லி ஒரு Special Petition போட்டு இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும். இதைப்பற்றி நான் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை.



1999 மார்ச் 20] [திரு. கே. சுப்பராயன்]

இன்னொரு முக்கியமான விஷயம், அது உள்ளாட்சி பற்றிய பிரச்சினை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனே எழுந்துவிடுவார்கள். அதனால் பேச முடியாது. (சிரிப்பு).

அடுத்து, இருக்கின்ற ஓர் அடிப்படையான விஷயம் என்னவென்றால், பெப்சி கோலா வந்துவிட்டது. அதாவது, இன்றைக்கு கொக்க கோலா, பெப்சி கோலா எல்லாம் வந்துவிட்டன. அந்த அன்னிய குளிர்பான company கள் தமிழ்நாட்டில் இருக்கின்ற வின்சென்ட் சோடாவை முடித்துவிட்டன. 'காளி சோடா' மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது. பல்வேறு தமிழ்நாட்டுத் தயாரிப்புகள் மூச்சுத் திணறி அழிகின்றன. இந்தியாவிலே இத்தகைய Small Scale Industries-தான் வேலைவாய்ப்பை அளிக்கின்றன என்பதை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். தமிழ்நாட்டுத் தயாரிப்புகளை பெப்சி கோலா, கொக்க கோலா கொன்று கொண்டிருக்கின்றன. எனவே, மாநில அரசு தற்போது அறிவித்திருக்கின்ற 11 சதவிகித வரியை, இந்தப் போட்டியில் ஓரளவுக்குத் தாங்கி சம நடை பயிலுகின்ற வாய்ப்பைத் தருவதற்காகவாவது குறைத்து அதை இரண்டு சதவிகிதமாக ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று, அத்திக்கடவு-அவிநாசி திட்டம் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அத்திக்கடவு—அவிநாசி திட்டம் இரண்டு அமைச்சர்கள் சம்பந்தப்பட்டது. மண்டியிட்டு வேண்ட வேண்டிய பிரச்சினையாக இது இருக்கிறது. இந்தப் பிரச்சினை 10 ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். வறட்சியால் வற்றி, வறண்டுபோன ஒரு பிரச்சினை. இதை பாசனக் கண்ணோட்டத்தில் பார்த்ததால், பொதுப்பணித் துறை அமைச்சர் இதை பாசன ரீதியாக வெற்றிகரமானது அல்ல என்று நிராகரித்து விட்டார்கள். இப்போது குடிநீர்க் கண்ணோட்டத்தோடு பரிசீலிக்க வேண்டுமென்று, நாங்களும் குளிர்ச்சியாக ஒரு மனுவை முதலமைச்சரிடம் கொடுத்தோம். உடனே, முதலமைச்சர் அவர்களும் அதன் மீது பரிந்துரை செய்து, அக்கறை பூர்வமாக நடவடிக்கை எடுக்கச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய துறை என்ன செய்ததென்றால், குடிநீர்தானே, நாங்கள் தருகிறோமே, மீண்டும் எதற்குக் குடிநீர் கொடுக்க வேண்டுமென்று, குடிநீர் கண்ணோட்டத்திலும் அதை நிராகரித்து விட்டார்கள். நாங்கள் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறோம்.

[1999 மார்ச் 20

பிற்பகல் 1-05

**மாண்புமிகு திரு. கோ.சி மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குப் பலனளிக்காது என்று சொல்லி, அவர் நிராகரித்ததில் உண்மை இருக்கிறது. நான் நிராகரிக்கவில்லை. இந்தத் திட்டம் வெற்றி பெறாது; தோல்வியுறும். ஆகையினாலே இது வேண்டாம். வேறு முறையில் தண்ணீர் கொடுப்போம் என்பதுதான் எங்கள் நோக்கமே தவிர, வேறல்ல உள்மனதோடு ஏதாவது இருந்தால் வெளிப்படையாகச் சொல்வது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நல்லது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் நல்ல சிந்தனையையும், அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தையும் நான் மறுக்கவில்லை. அதிலே ஒரேயொரு விஷயம்; நிலத்தடி நீர்மட்டம் ஆயிரம் அடிக்குக்கீழ் இறங்கிப்போன 10 ஒன்றியங்கள் அவை. அந்தப் பத்து ஒன்றியங்களில் நிலத்தடி நீரை உறிஞ்சிவிடுவதால், நிலம் தன் இயல்பை இழந்து, நில அதிர்வுகளுக்கும், பிற கோளாறுகளுக்கும் ஆளாக வேண்டி வருகிறது. எனவே, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துகிற கண்ணோட்டத்தில் இதை அனுமதிக்க வேண்டும். இதைத்தான் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய கொள்கையும் அதுதான். ஆனால், நீங்கள் சொல்கிற அந்தத் தர்க்கரீதியான வாதம் சரிவர எடுபடவில்லை. அங்கு நீர் ஆதாரம், நீங்கள் சொல்கிற அடிப்படையில் நிச்சயமாகக் கிடைக்காது. ஆகையினால், திட்டத்தை அந்த ஒன்றியங்களுக்குக் கொடுக்க வேண்டியது உண்மை. தாண்டிச் சென்றாலும், அதிகச் செலவானாலும், அதைச் செய்வதற்கு முயற்சி எடுக்கிறோமே தவிர, வீணாக அந்தப் பலனை அனுபவிக்க முடியாத சூழ்நிலையை உண்டாக்க வேண்டாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விரிவாக நான் இப்பொழுது பேச முடியாது. ஆனால், ஒரேயொரு விஷயத்தை அமைச்சரிடத்திலே சொல்ல விரும்புகிறேன். தயவுசெய்து, இதில் என்ன விளைவு ஏற்பட்டாலும், திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெரிய மனதோடு இசைவாக இருக்கிறார்கள். அதை, எங்கேயாவது கலைத்துவிடாதீர்கள். அவ்வளவுதான் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1999 மார்ச் 20] [திரு. கே. சுப்பராயன்]

அவர்கள் ஓரளவிற்கு ஒத்து வந்திருப்பதற்கு உதவ வேண்டுமென்று கேட்டு, நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கோமதி சீனிவாசன். (குறுக்கீடு) ஏற்கெனவே இந்த விவாதத்திலே மூன்று பேர்தான் பேசியிருக்கிறார்கள். இன்னும் இருப்பது 23 நிமிடங்கள்தான். என்ன Point of order? சொல்லுங்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தின்போது, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், பீடித் தொழிலாளர்களுக்கும், தோட்டத் தொழிலாளர்களுக்கும் தமிழ்நாடு அரசுதான் அதிகமாக குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்துள்ளது என்று சொன்னார்கள். அது தவறானது. ஏற்கெனவே கேரள அரசு அதிகமாக நிர்ணயம் செய்திருக்கிறது. அத்துடன் தமிழ்நாடு அரசு நிர்ணயித்து இருக்கின்ற இந்தக் குறைந்தபட்சக் கூலிதான் தோட்டத் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக வைத்திருக்கிறது. இல்லையென்றால், தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாகக் கூலி பெற்றிருப்பார்கள். அந்த 35 ரூபாய் கூலிகூட நூற்றுக்கணக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி கோமதி சீனிவாசன்.

***திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞரின் பொற்கரங்கள் தயாரித்தளித்த 1999-2000 ஆம் ஆண்டு, 12-வது நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் பேசினார்கள். திரு. சுப்பராயன் அவர்கள், கவர்ச்சிகரமான திட்டத்தை அளித்திருக்கிறார்கள் என்பது பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அதைப்போல, திரு. ஞானசேகரன் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றுமே இல்லை என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்றுமே இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தால், நாட்டு மக்கள் பாராட்டி இருக்கமாட்டார்கள்; போற்றியிருக்க மாட்டார்கள் என்பதை இங்கே நான் முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழையெளிய, நடுத்தர மக்களின் முன்னேற்றத்தையும், சிறுபான்மை மக்களின் பாதுகாப்பையும், மாணவர்களின் எதிர்கால வளர்ச்சியையும், விஞ்ஞான முன்னேற்றத்தையும், மனித நேயத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு அறிவிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை நாட்டுமக்களும், நல்லவர்களும் பாராட்டுகின்றார்கள்; போற்றுகின்றார்கள் என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியைக் கருத்தில் கொண்டு, உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, கிராமங்களிலுள்ள ஏழையெளிய, பாட்டாளி மக்களின், விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்சினைகளைப் போக்குகின்ற வகையில்-- அடிப்படை வசதிகளே இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டார்களே; அந்த வகையில், கிராமங்களில் இருக்கிற மக்களின் பிரச்சினைகளைப் போக்குகின்ற அளவுக்கு அடிப்படை வசதிகளான சாலைகள், மின்சாரம், குடிநீர் போன்றவற்றைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரத்தையும், அதிக நிதியையும் ஒதுக்கி, சிறப்புச் செய்ததோடு, பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் தனித்தனியே நிதியொதுக்கி இருப்பது நம் முதல்வரின் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. மொத்த வரி வசூலில் 19 விழுக்காட்டை உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கி, குடிநீர் வசதிக்காக நல்ல திட்டத்தைத் தந்தவரும் நமது முதல்வரே ஆவார். மேலும் உள்ளாட்சிகளின் நிர்வாக முறைக்காகவும், கணினிமயமாக்கவும் 105 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருப்பவர் நமது முதல்வர் ஆவார்.

பிற்பகல் 1-10

அதோடு மட்டுமல்ல, மாணவர்களின் நலன் கருதி, சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றைப் பெற வட்டாட்சியர் அலுவலகம் சென்று காத்திருக்கும் மாணவர்களின் சிரமத்தைப் போக்குகின்ற வகையில், தாங்கள் படிக்கும் பள்ளியிலேயே சான்றிதழைப் பெறும் திட்டத்தைத் தந்தவர்தான் நமது முதல்வர் அவர்கள்.





அதோடு மட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதோடு, பள்ளிகளில் கல்வி பயின்று வெளிவரும் மாணவர்கள் அனைவரும் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, 12,000 பள்ளிகளில் கணினி விருப்பப்பாடமாக இருக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கின்றபொழுது, மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்திலே, வளர்ச்சியிலே நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது.

அதோடு மட்டுமல்ல. மாணவர் உலகமே நமது முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறது. இங்கிலாந்தில் உள்ள World Tel நிறுவனத்துடன் சேர்ந்து மேற்கொள்ளவிருக்கும் கூட்டுத் தொழில் முயற்சி, இம்மாநிலம் முழுவதிலும் பரவலாக இணைய தொடர்பு வசதிகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையில் சுமார் 1,50,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவும் வழிவகுக்கும். அத்தகைய திட்டத்தைத் தந்தவர் தாயுள்ளம் கொண்ட நமது முதல்வர் ஆவார்கள். இதில் பெண்களுக்கு அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, நிதியொதுக்கி சிறப்பு செய்தவர் நமது முதல்வர் ஆவார்கள். அதிலும் பெண்களுக்கு அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைக் கருதி, இலவச மின்சாரம் தொடர்ந்து தருவதோடு, வெள்ளக் காலங்களில் விளைபயிர்கள் தண்ணீர் தேக்கத்தினால் நாசமாவதைத் தடுக்கின்ற வகையிலும், விவசாய நிலங்களுக்குக் கடைமடைப் பகுதி வரை சீராக நீர் சென்றடையும் வகையிலும், பல நூறு ஆண்டுகளாக மராமத்து வேலைகள் செய்யப்படாததால், செடி, கொடிகளாலும், மணல்மேடுகளாலும் மூடிக்கிடந்த ஆறுகளையும், கால்வாய்களையும், குளங்களையும் பல கோடி ரூபாய் செலவில் தூர் எடுத்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முன்னால் கரிகால் சோழனாகக் காட்சியளிக்கிறார் நமது முதல்வர் அவர்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் ஏழ்மையில் வாடும் மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு,

10 ஆயிரம் எக்டேர் தரிசு நிலத்தை விளைநிலமாக மாற்றுகிற திட்டமான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு தரிசு நில மேம்பாட்டு ஆணையம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், வரலாற்றில் இடம்பெறும் திட்டமாக அதை அறிவித்திருக்கிறார்கள் என்பதை நம்மால் மறக்க முடியாது.

அதைப்போல, காய்கறிகள், பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கும், அப்பொருட்களை நகரப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று நியாயமான விலையில் விற்பதற்கும், தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் பங்கேற்கும் திட்டம் ஒன்றை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பதைப் பார்க்கிறபோது, விவசாயிகள் மீது எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார் என்பது தெரிகிறது. இதில் பெண்கள் பங்குபெறுகின்ற வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் வங்கிகளிலிருந்து பெற்ற கடனுக்காக ஜப்தி நடவடிக்கை தொடராது என்ற உத்தரவாதத்தைத், தந்து, விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தவர்தான் நமது அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-15

தமிழில் கீர்த்தனைகளை இயற்றி, தமிழுக்கு வளம் சேர்த்த முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாபிள்ளை ஆகியோர் வாழ்ந்த சீர்காழியில், அவர்களுடைய சிலைகள் அமைந்த மணிமண்டபம் ஒன்று நிறுவப்படும் என்றும், ஆண்டுதோறும் அங்கே மாபெரும் தமிழிசை விழா நடைபெறும் என்றும், இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கின்றபோது, தமிழ் மொழிக்கு மட்டுமல்ல; தமிழிசைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பவர் நம் முதல்வர் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், சாதி, மத, இன வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில், சமத்துவபுரம் திட்டத்தைச் செயல்படுத்துவதோடு, சாதி, மத, இன வேறுபாடுகளைக்



களைய பாடுபட்ட தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றிச் செயல்படுத்துவதோடு, தன்னை ஆளாக்கிய பெரியாரின் பெயரால், அத் திட்டம் 'பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்' என்று அழைக்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

ஒவ்வொரு ஒன்றியத்திலும், கிராமங்கள் தன்னிறைவு பெற, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தி வருவதைப் பார்க்கின்றபோது, தன்னிறைவு பெற்ற கிராம மக்கள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறார்கள்; போற்றுகிறார்கள்.

மகளிர் மேம்பாட்டில் அதிக அக்கறை கொண்ட நம்முடைய முதல்வர் அவர்கள், ஏழை, எளிய பெண்களுக்காகவும, ஏழை விதவையர்களின் பெண்களுக்காகவும், விதவைகளுக்காகவும், கலப்புத் திருமணத்திற்காகவும் பல்வேறு திருமண உதவித் திட்டங்களைச் செயல்படுத்துவதோடு, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், வயது, கல்விச் சான்றிதழ் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தையும் முறைகேடுகளையும் களையும் பொருட்டு, கல்வித் தகுதியைப் பத்தாவது வகுப்பாக உயர்த்தி, அதனால் 70 ஆயிரம் பெண்கள் பயன்பெறும் வகையில் சிறப்புச் சேர்த்தவர் நம் முதல்வர் அவர்கள்.

தமிழகத்தில், அதிக அளவில் நியாய விலைக் கடைகளை மகளிரே நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டு இருப்பதைப் பார்க்கும்போது, மகளிரின் ஊக்கத்திற்கும், மகளிரின் முன்னேற்றத்திற்கும் அதிக முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள் நமது அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

கிராம மக்களோடு தொடர்பு கொண்டு, பல்வேறு நலப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிற மக்கள் நலப் பணியாளர்களுக்கு மாதப் பயணப்படி 50 ரூபாயையும் சேர்த்து, 800 ரூபாயாக சம்பளம் உயர்த்தியிருப்பதைப் பார்க்கிறபோது, கிராமங்களில் பணியாற்றுகிற பணியாளர்களை நமது முதலமைச்சர் அவர்கள் மறக்காமல் இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை 35 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தியதைப் பார்க்கிறபோது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் மதிப்பையும் மரியாதையையும் உயர்த்திக் கொடுத்தவர் டாக்டர் கலைஞர் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திருமதி கோமதி சீனிவாசன்] [1999 மார்ச் 20

சொன்னதைச் செய்பவர், செய்வதைச் சொல்பவர் என்ற அடிப்படையில், தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதிலிருந்து, ஏழை, எளிய, பாட்டாளி மக்கள், படித்தவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வணிகர்கள், மகளிர், தொழில் முன்னேற்றம், விவசாயப் பெருங்குடி மக்கள் நலன், மின்சாரம், உள்ளாட்சித் துறை அமைப்பு போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, நேர்மையும், ஊழலற்ற தன்மையும், காலதாமதம், முறைகேடுகள் போன்றவை இல்லாத தன்மையுமான, திறமையான நல்லாட்சி நடத்தும் ஒரே முதல்வர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல; நமது முதலமைச்சர் அவர்களின் துறை காவல் துறை என்பதால், அது தொடர்பாக என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் குறிப்பிட்டு விடைபெறலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய தொகுதியாகிய வலங்கைமானில் உள்ள வலங்கைமான் ஒன்றியத்தில், ஆலூரில் ஒரு காவல் நிலையமும், அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் மெலட்டூர் பேரூராட்சியில் காவலர்களுக்குக் குடியிருப்பு வசதியும் செய்து கொடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், நமது முதலமைச்சர் அவர்கள் நிதித் துறையையும் வைத்திருப்பதால், பாலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார் என்ற அடிப்படையில், வலங்கைமானில், அம்மாப்பேட்டை ஒன்றியத்தில், வெண்ணாற்றின் குறுக்கே, களக்குடிக்கு அருகே ஒரு பாலம் கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையினை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் எம். மோசஸ்.

**டாக்டர் எம். மோசஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *1999-2000* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என் கருத்துகளைக் கூற வாய்ப்புத் தந்தமைக்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையின் *32*-வது பக்கத்தில், தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ், சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்கள் என்று போட்டிருக்கிறீர்கள். அங்கே சாதிக்



1999 மார்ச் 20] [டாக்டர் எம். மோசஸ்]

கலவரம் நடக்கிறது. எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் மதக் கலவரம் நடக்கிறது. ஆகவே, தயவுசெய்து எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தையும் இதிலே சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்த்தால், கொஞ்சமாவது அங்கே தொழில் வளர்ச்சி வந்தால், அந்த மாவட்டம் முன்னேற்றப் பாதையில் வரும்.

*பிற்பகல் 1-20*

இரப்பர் தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டேன். கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "மோசஸ், இரப்பர் தொழிற்சாலை கேட்கிறார், தருகிறேன், அது இரப்பர் தொழிற்சாலை அதனாலே இழுக்கிறது" என்று சொன்னார்கள். இப்படி இழுத்துக்கொண்டே போனால் அது கன்னியாகுமரியிலேயிருந்து வேறு மாவட்டத்திற்குப் போய்விடக்கூடாது. ஆகவே விரைவிலே என்னுடைய மாவட்டத்திற்கு ஒரு இரப்பர் தொழிற்சாலையினைத் தர வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜாதிச் சான்றிதழ்கள் பள்ளிக்கூடத்திலேயே கொடுக்கிறோம் என்று சொல்லியிருப்பது ஓர் அருமையான திட்டம். பள்ளிக்கூடத்திற்குப் போகாதவர்களும் இருப்பார்கள், அவர்களுக்கும் தேவைப்படும்போது கொஞ்சம் எளிதாக அது கிடைக்க வழி செய்ய வேண்டும். இப்போது மிகவும் சிரமப்படுகிறார்கள். இதிலே இன்னொரு கஷ்டம் என்னவென்றால் வருமானச் சான்றிதழைக் கேட்கப்போனால், உடனே, குடும்ப அட்டையைக் கொண்டு வா என்று சொல்கிறார்கள், ரேஷன் அட்டையைக் கொண்டு போனால் அதில் இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் என்று வருமானம் இருக்கும். மூவாயிரம், நான்காயிரம், ஐந்தாயிரம் ரூபாய் என்று போட்டிருப்பது நூற்றுக்கு நூறு சரிதான். ஒன்றும் தப்பில்லை. ஆனால், அதே சமயத்தில் மானியங்கள் கொடுக்கிற நிலை வந்தால் ரூபாய் ஆயிரத்திற்குக் கீழ் வருமானம் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. நீங்களே நினைத்துப் பாருங்கள். ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு நாகர்கோவிலிலோ அல்லது சென்னையிலோ ஒரு கணவன், மனைவி மற்றும் இரண்டு மூன்று பிள்ளைகளை வைத்துக்கொண்டு வாழமுடியுமா? ஆகையினாலே ஆயிரம் ரூபாய் என்பதை மாற்றி அந்தச் சலுகையைப் பெறுவதில் மாத வருமானம் ஐந்தாயிரம் ரூபாய் என்று வைக்க வேண்டும். என்றைக்கோ ஒரு காலத்திலே ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இன்றைக்கும் அதனை ஆயிரம் ரூபாய் என்று வைத்திருப்பதால் பலரும் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 35 இலட்சம் ரூபாய் தந்தார்கள். அதே சமயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதிக்கு அது ஒரு கோடி ரூபாயாக இருந்தது. இப்போது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் இரண்டு கோடி. அப்படியானால் நமக்கு ரூபாய் எழுபது இலட்சம் வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அதனை ரூபாய் ஐம்பது இலட்சம் என்று கொடுத்திருக்கிறார்கள். அதனை 70 இலட்சம் ரூபாயாக மாற்றிக் கொடுத்தால் கொஞ்சம் வசதியாக இருக்கும்.

இன்னொரு பெரிய முக்கியமான ஒன்றை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது, திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறீர்கள். நாங்கள் ஊர் ஊராகச் சுற்றிப்பார்த்து செய்ய வேண்டியவற்றை எழுதிக் கொடுக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில் நாகர்கோவில் நகராட்சிக்கு கொஞ்சம் வேலைகளைக் கொடுத்தேன். இன்னும் கொஞ்சம் வேலைகளை பஞ்சாயத்துக்கு- (மணியடிக்கப்பெற்றது)

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது 50 இலட்சம் ரூபாய் தந்திருக்கிறார்கள். முன்பு ஒரு கோடி ரூபாய் என்று நாடாளுமன்றத் தொகுதிக்கு இருந்தது. ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் 6 சட்டமன்றத் தொகுதிகள் வருகின்றன. ஆகவே, அவர்கள் இரண்டு கோடியைத் தருகின்றபோதிலும், நாம் ஆறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒருவருக்கு 50 இலட்சம் ரூபாய் தருகின்றபோது, நாம் ஒரு கோடி அதிகம் தருகிறோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**டாக்டர் எம். மோசஸ்:** நாம் சில வேலைகளுக்காக எழுதிக் கொடுக்கிறோம். எழுதிக் கொடுத்தவுடனே நகராட்சியிலே tender போடுகிறார்கள். Tender போட்டவுடனே நமக்கு ஒரு தகவலும் தருவதில்லை. இப்படி 25 இலட்சம் ரூபாய்க்கு நாகர்கோவில் நகராட்சியில் வேலை கொடுத்திருக்கிறேன் என்றால், அதில் சுமார் 70 முதல் 75 சதவீதம் வரை குறைத்து எடுக்கிறார்கள். அப்படியானால் tender-லே மீதிதானே. அதனை நமக்குத் தெரியப்படுத்தினால்தான் நாம் மீதிக்கு வேறு வேலை கொடுக்க முடியும். போன வருடம் இது மாதிரி நடந்தது. இப்படிப் போய் கடைசியிலே ஒன்றுமே இல்லாமல் போய்விட்டது. இந்த வருடம் அதைத்தான் திரும்பத் திரும்பக் கேட்கிறேன், அது எனக்குக் கிடைக்கவேயில்லை. எனவே, மாதத்திற்கு ஒரு முறையாவது திட்டங்கள் எல்லாம் எந்தெந்த நிலையிலே இருக்கின்றன என்பது குறித்து எங்களுக்கு அறிவிப்பு கொடுக்கக்கூடாதா?



நகராட்சி அலுவலகத்திலிருந்து, திட்ட அலுவலர் அலுவலகத்திலிருந்து இன்னின்ன வேலையைச் செய்ய சொல்லியிருக்கிறீர்கள், வேலையின் நிலை இன்னின்ன அளவிற்கு இருக்கிறது என்பதையெல்லாம் தெரிவிக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம். ஒரு வேலை முடிந்த பிறகு சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த வேலை திருப்தியாக செய்யப்பட்டிருக்கிறது என்று சான்றிதழ் கொடுத்த பிறகுதான் ஒப்பந்தக்காரர்களுக்கு முழுப்பணத்தையும் கொடுப்பதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டும். இல்லையென்றால் தில்லுமுல்லு நடக்கத்தான் செய்யும். முதலில் tender-ல் குறைந்து எடுக்கிறார்கள். அதாவது, அங்குள்ள அதிகாரிகளுக்கும் இவர்களுக்கும் ஒரு சரிக்கட்டல் நடக்கிறது. பிறகு பார்த்தால் 100 அடிக்கு 110 அடி போட்டிருக்கிறேன், அதனாலே கூடுதல் செலவாகி இருக்கிறது என்று எங்களிடம் சொல்வார்கள். எனவே, இந்த மாதிரி எல்லாம் நடைபெறாமல் இருக்க வேண்டுமானால், அதில் ஒரு கட்டுப்பாடு இருக்குமேயானால் எங்களுக்கு அதிலே ஒரு better control இருக்கும். ஆகவே, வேலையின் நிலை திருப்தியாக இருக்கிறது என்று நாங்கள் கையெழுத்து போட்டுக் கொடுத்தால்தான் ஒப்பந்தக்காரருக்கு நீங்கள் முழுப்பணத்தையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உங்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவிலில் 20 கோடி ரூபாய் அளவில் ஒரு நல்ல குடிநீர்த் திட்டத்தைத் தந்திருக்கிறீர்கள். இப்போது போகக்கூடிய வேகத்திலே போனால் இன்னும் 25 வருடமானாலும் குடிநீர்ப் பிரச்சினை தீராது. இப்போது 20 கோடி ரூபாய் என்றிருப்பது, அடுத்த வருடம் கூட 10 கோடி ரூபாய் சேர்ந்து 30 கோடி ரூபாய் என்று ஆகும். 5 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், ஒரே ஒரு இடத்திலேதான் வேலை நடக்கிறது. மீதி நான்கும் ஆரம்பிக்கப்படவில்லை. இப்போது கோடை காலம் வந்துவிட்டது இந்த நிலையிலே போனால் முடியாது. அடுத்த வருடம் எங்களுக்கு நல்ல குடிநீர் கிடைக்க வேண்டுமானால் மிகவும் வேகமாக அந்த வேலைகளைச் செய்ய வேண்டும். வருடம் போகப் போக நமக்குச் செலவும் கூடும். இன்றைக்கு 20 கோடி ரூபாய் என்றால் அடுத்த வருடம் 25 கோடி ரூபாய் ஆகிவிடும். ஆகவே, தயவுசெய்து அதைத் துரிதப்படுத்திட வேண்டும். அதுபோல பல இடங்களிலே சுரங்கப் பாதைகள்......

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அறிவித்திருந்ததைத் தாண்டி அதிகமாகப் போனதற்கு காரணம் நீர் நிலையை எங்கே எடுப்பது என்பதற்கான தகராறுகள்தான் அதற்கு ஆறு, ஏழு மாதங்கள் ஆகிவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் அது தெரியும். அதற்குப் பிறகுதான் இப்போது துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்டு நான் சொல்ல விரும்புகிறேன், இந்தக் காலதாமதம் இதுவரை எவ்வளவு ஆகி இருக்கிறதோ, அதைத் தாண்டிக்கூட போகாமல், இந்தத் திட்டம் நிச்சயமாக நிறைவேற்ற முடியும்.

*பிற்பகல் 1-25*

**டாக்டர் எம். மோசஸ்:** நன்றி, ஐயா நன்றி. அதுபோல் ஒரு சுரங்கப் பாதை. நாகர்கோவில் பூங்காவிலே இருந்து அண்ணா பேருந்து நிலையம் வரை சுரங்கப்பாதை வேண்டும் என்று பல தடவை கேட்டாகிவிட்டது. அதை நீங்கள் அமைத்துத் தர வேண்டும். நாகர்கோவிலின் மையப் பகுதியிலே, வலம்புரியிலே ஒரு உரக் கிடங்கு இருக்கிறது. அதை மாற்ற வேண்டும், மாற்ற வேண்டுமென்று எத்தனையோ தடவை கேட்டாகிவிட்டது. தயவுசெய்து நீங்கள் அதை மாற்றித் தாருங்கள். மக்கள் வாழ்கிற பகுதி, பக்கத்திலேயே போக முடியவில்லை. துர்நாற்றமும், கொசுவும் பயங்கரமாக இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து அதை மாற்றித் தரவேண்டும்.

அதுபோல், இன்னொரு முக்கியமான காரியம். நாகர்கோவிலில் சைமன் காலனி என்று ஒரு குடியிருப்பு இருக்கிறது. அங்கேயிருந்து பிரதான சாலைக்கு வருவதற்கு, ஏற்கெனவே அவர்கள் உபயோகித்துக் கொண்டிருந்த பாதை சாலையாக இருந்தது. அது ஜல்லி போட்ட சாலை. அரசாங்கத்தின் மூலம் போலீஸ்காரரர்களின் குடியிருப்பிற்காக கொஞ்சம் நிலத்தை அங்கிருந்து ஆர்ஜிதம் பண்ணி எடுத்திருக்கிறார்கள். இப்போது S.P. Office எல்லாம் அங்கே வந்திருக்கிறது. இப்போது பாதையை முழுமையாக ஆக்கிரமித்து எடுத்திருக்கிறார்கள். போலீஸ் இலாகா அந்த இடத்திலே முழுமையாக அந்தப் பாதையை எடுத்துக் கொண்டு விட்டதால், அந்த மக்கள் இப்போது அந்த சாலைக்குப் போக முடியாமல் 1½ கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர் சுற்றிப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. அதுபற்றிப் பலமுறை சொல்லியாகிவிட்டது. அதை Municipal authorities-க்கு எடுத்துச்





சென்றால், Plan எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது, உடனே திறக்க வேண்டியதுதான் என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அந்த சாலை, பிரதான சாலையிலே சேரக்கூடிய இடத்திலே கல், படி எல்லாம் போட்டு சுகமான சாலையாக இருந்ததை, போலீஸ் இலாக்காவிலேயிருந்து கல்லையெல்லாம் அடித்துத் தூக்கி ஒரே நாளிலே எறிந்து விட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் போய்ச் சொன்னாலும், ஆமாம், இது நியாயம்தான் இதை எடுக்க வேண்டியதுதான் என்று சொல்கிறார்கள். ஆனால், எடுக்கவே இல்லை. அது நடக்கவே இல்லை. ஆகவே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி எங்களுக்கு அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொது விநியோகம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வரும்போதே சொன்னேன். குடும்ப அட்டை கொடுப்பது ஒழுங்காக இல்லை, அதைக் கொஞ்சம் வேகமாகக் கொடுக்க ஏற்பாடு பண்ணுங்கள் என்று. இன்றைக்கும் அந்தப் பழைய அட்டைக்குப் பதில் புதிய அட்டை முழுமையாகக் கொடுத்து முடியவில்லை. முன்னாலே, பழைய அட்டை கொடுத்தாலாவது பொருட்கள் விநியோகம் நடந்தது. இப்போது அது இல்லை என்று நீங்கள் சட்டம் போட்டு இருக்கிறீர்கள். ஆனால், அந்தப் பழைய அட்டைகளுக்குப் பதில் புதிய அட்டைடுகள் இன்னும் சரியாகக் கொடுத்து முடியவில்லை. அதிலே கள்ள அட்டை இருக்கிறது. என்று சொல்கிறீர்கள். கள்ளக் அட்டை இருந்தால் அதை நீங்கள் Cancel பண்ணுவது மட்டும் அல்ல, கள்ள அட்டை வைத்திருப்பவர்களைப் பிடித்து 3 மாதங்கள் ஜெயிலிலே போடுங்கள், ஐயா. அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், அதை ஒரு காரணமாகச் சொல்லிவிட்டு புதிய அட்டை கொடுக்காமல் இருப்பது சரியல்ல. புதிய அட்டைகளுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அது இன்னும் Verification, Verification என்று போய்க் கொண்டே இருக்கிறது. அதைக் கேட்டால் அச்சடிக்கக் கொடுத்திருக்கிறேன் என்கிறார்கள். அதை என்றைக்குக் கொடுக்கப் போகிறீர்கள்?

அதைப்போல இன்னும் ஒன்று. நான் நாகர்கோவிலிலே 26 வது வார்டிலே இருக்கிறேன். என் வீட்டிற்கு முன்பு ஒரு ration கடை இருக்கிறது. அது 27 வது வார்டு. ஆனால், நான் அங்கே வாங்கக்கூடாது, 26 வது வார்டுக்கு உள்ள அந்தக் கடை 3 கிலோமீட்டர் தள்ளி இருக்கிறதே, அங்கேதான் போய் வாங்க வேண்டும் என்று சொன்னால், அது சரியல்ல. ஒருமுறை எங்களுக்கும்—Consumer-க்கும்—Option தாருங்கள். எனக்கு இஷ்டமான ration கடையில் நான் வாங்கலாம்.

நீங்கள் திருப்பி, திருப்பி மாற்றித்தர வேண்டாம். ஒருமுறை. முதன்முதலாக இந்தக் கடை பக்கமாக இருக்கிறது, நான் அங்கே போய் வாங்கிக் கொள்கிறேன் என்று சொன்னால், சரி நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள் என்று நீங்கள் அனுமதி கொடுங்கள். ஒரே ஒருமுறை. எனக்கு அங்கே வேண்டாம், திரும்பி இங்கேதான் என்று சொன்னால், அப்படி தர வேண்டாம். ஆனால் முதல் Option எனக்குத் தர வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் மிக்க வசதியானவர், வீட்டை மாற்றிக் கொள்ளலாம். (சிரிப்பு).

*பிற்பகல் 1.30*

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் விளக்கத்தைக் கேட்டுக் கொள்ளுங்கள். ஏற்கெனவே புதியதாக ration கடைகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் வரை வந்து அனுமதி பெற்ற காலம் ஒன்று உண்டு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது நகராட்சிப் பகுதிகளிலே வார்டுக்கு ஒரு கடை, அல்லது ஒரு கடை என்றால் 800 அட்டைகள் இருக்கலாம், அதற்கு மேல் இருந்தால் துணைக் கடை அமைக்கலாம் என்ற புதிய ஒரு சட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தால் - உதாரணத்திற்கு 40 கடைகள் இருக்கிற இடத்திலே 50 வார்டு என்றால் 50 கடைகளாகப் பிரித்து வைத்திருப்பார்கள். அதிலே எனக்குக் கொஞ்சம இங்கிருந்து தூரமாக இருக்கிறது என்று சொன்னால் மாற்றித் தரத் தயாராக இருக்கிறோம். குறிப்பிட்டு உறுப்பினர் அவர்கள் எழுதித் தருவார்களேயானால், அவர்கள் விருப்பபட்ட கடைக்கு மாற்றித் தருவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

அதேபோல புதிய அட்டைகள் வழங்கவேண்டுமென்று இங்கு சொன்னார்கள். புதிய அட்டைகள் வழங்குவது என்பது கிட்டத்தட்ட குறியீட்டைவிட அதிகமாக 14 லட்சம் அட்டைகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன. இப்போது எங்களிடம் கையில் இருப்பது வெறும் 4 லட்சம் அட்டைகள்தான். அது ஆய்வு செய்யப்பட்டு அச்சடிக்கச் சென்று, கொடுக்கக்கூடிய நிலையிலே நாங்கள் இருக்கிறோம். ஆனால் மத்திய அரசு நிர்ணயித்ததைவிட ஒரு கோடியே 36 லட்சம் குடும்பங்கள்தான் தமிழ்நாட்டில் என்று நிர்ணயித்ததைவிட 1 கோடியே 49 லட்சம் அட்டைகள் இதுவரை வழங்கப்பட்டு விட்டன. இன்னும் எங்களுக்குப் புதியது வேண்டும், புதியது வேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.



அதே நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இது ஒரு தனிப் பிரச்சினை. ஒரே குடும்பத்திலே 3 குடும்பங்கள், 4 குடும்பங்கள் என்று இருக்கின்றன. அதைத் தனி நிகழ்வாகக் கருதி அங்கு நாங்கள் வழங்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மற்றவர்களும் எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி ஆராய்ந்து பார்த்து, யாருக்காவது வழங்கப்படவில்லை என்றால், நிச்சயமாக அவர்களுக்குப் புதிய அட்டைகள் வழங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (22-3-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1--31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*34. 17-3-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் துறையின் 17-3-1999 ஆம் நாளிட்ட* II(1)/CT/40(a-1)/99 *ஆம் எண் அறிவிக்கையில் பிழைத் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 17-3-1999 ஆம் நாளிட்ட 29056/B2/97-18 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.*

221090.

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.